# நல்லவை ஆற்றுமின்

அ. மு. ப.

# நல்லவை ஆற்றுமின்

**பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்**
*நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம்*
சென்னை-30/102

**தமிழ்க்கலைப் பதிப்பகம்**
**தமிழ்க்கலை இல்லம்,**
**சென்னை - 30.**

முதல் பதிப்பு — மார்ச்சு 1993

வள்ளியம்மாள் கல்வி அறம்
வெள்ளிவிழா வெளியீடு. (1993)

**விலை ரூ. 20/-**

இதன் வருவாய் அனைத்தும் வள்ளியம்மாள்
கல்வி அறத்துக்கே உரியது,

கவின்கலை அச்சகம், கந்தசாமி நகர்,
பாலவாக்கம், சென்னை-600 041.
தொலைபேசி : 41 71 41

# முன்னுரை

'நல்லவை ஆற்றுமின்' என்ற இந்நூலின் பெயர் இதன் முதல் கட்டுரையாக அமைகின்றது. எனினும் கட்டுரைகள் அனைத்திலுமே (25) இக்கருத்து பரவி உள்ளதென்பதனைப் பயின்றோர் அறிவர். 'நந்தனின் ஆதனூர்', 'வேற்காடு 'பொருந்துமா' 'வ.வே.சு. ஐயர் பணி' போன்றவை ஆய்வுக் கட்டுரைகள் போன்று அமையினும் அவற்றுள்ளும் மக்கள் நல்லவை ஆற்றவேண்டிய கடமைகள் சுட்டப்பெறுகின்றன; மேலும் நல்லவர் ஆற்றிய, வல்லவர்—பெரியவர்தம் பெருமை கள் பேசப் பெறுகின்றன. எனவே முதல் தலைப்பில் இந்நூல் அமையினும் நூல் முற்றும் இக்கருத்தே நிலவி வருகின்றது என்பது தெளிவு.

'நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'

என்றார் சங்க காலக் கவிஞர். ஆம்! மனிதனாகப் பிறந்த காரணத்தால், அவன் நல்லதே செய்யக் கடமைப் பட்டுள்ளான். அதற்காகவே அவன் பிறந்தான். அவனுக்கு ஆறாவது அறிவும் அதற்காகவே தரப்பெற்றது. ஆயினும் அவன் அவ்வாறு வாழாத நிலையிலேதான், சங்ககாலப் புலவர் 'அப்பா நீ நல்லது செய்யாவிட்டாலும் தவறில்லை. ஆனால் கெட்டதை மட்டும் செய்யாதே' என அறிவுறுத்தி, அதனால் அவன் பின்னால் பெறும் 'நல்லாற்றுப்படும் நெறியின்' தன்மையினையும் சுட்டுகின்றார். ஆம்! இன்றைய உலகம் மனிதன் செய்த கொடுமைகளால்தானே நிலைகெட்டு நிற்கின்றது.

இந்நூலின் பலவகையான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சென்னை வானொலியில் பேசிய என் பேச்சுக்கள் பலவும் முன்பே நான்கு நூல்களாக வெளிவந்துள்ளன

'வானொலி வழியே!, 'நாலும் இரண்டும்',' சிறுவர்களுக்கு', 'சான்றோர் வாக்கு' போன்ற நூல்களில் இடம் பெறாத ஒரு சில கட்டுரைகள்—பேச்சுக்கள் இதில் இடம்பெற்றுள்ளன. ஆயினும் பெரும்பாலானவை வெவ்வேறு சமயங்களில் வெவ் வேறு நிலைகளில் எழுதப்பெற்றவை –பேசப்பெற்றவை. எனவே தொடர்ந்த கருத்துக் கோவையினை இதில் எதிர் பார்க்க இயலாது.

இந்நூலில் சமயம், தமிழ்ப் பண்பாடு ஆயவை பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பௌத்தம் பற்றியும் சைவம் பற்றியும் சில கட்டுரைகள் உள்ளன. தொல்காப்பியர் கருத்தை விளக்கும் ஒரு கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. நாட்டுக் கல்வி பற்றியும் சில கட்டுரைகள் இடம் பெற் றுள்ளன. தனித்த இலக்கியங்களாகிய மணிமேகலை, பெரிய புராணம் போன்றவற்றின் சிறப்பு நலன்களை விளக்கும் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு பல்வேறு தலைப்புகளில் பல்வேறுவகைப்பட்ட பொருள்களில் இருபத்தைந்து கட்டுரைகள் அமையினும் அனைத்திலும் கோவை நூலாக, நான் முன்னே காட்டியபடி நல்லவை ஆற்றி நலம்பெறுநிலையே கூறப்பெறுகின்றது.

பொருள்களின் தலைப்புகளும் விளக்கங்களும் மாறி உள்ளமை போன்றே, எழுதிய காலங்களும் வேறுபாடு உள்ளவையே. பல்வேறு காலங்களில், பல்வேறு அன்பர்கள், மாநாடு, குடமுழுக்கு, பிற விழாக்கள் சார்பாக எழுத வேண்டிய நிலையில் பல்வேறு காலங்களில் கட்டுரைகள் எழுதப் பெற்றுள்ளன. எனினும் உள்ளீடு பெரும்பாலும் ஒத்த முடிவினைச் சார்ந்த நிலையிலே அமைவதைப் பயில் வோர் காண இயலும்.

தற்போது நான் முற்றும் என் அன்னையின் பெயரால் அமைந்த 'வள்ளி அம்மாள் கல்வி அறத்'தின் வழியே செயல்

படும் கல்வி நிலையங்களின் பணிகளில் முற்றும் ஈடுபட்டுள்ள மையின் என் எழுத்துப் பணி குறைவாகவே உள்ளது. இடையில் அன்பர்தம் வேண்டுகோளுக்கென எவ்வெப் போதோ அமைந்த கட்டுரைகளை இவ்வாறு தொகுத்து வெளியிடுவதே தற்போது என்னால் இயலும் நெறியாக உள்ளது. ஆம்! இந்த வள்ளியம்மாள் கல்வி அறத்தின் வெள்ளிவிழா இன்று நடைபெறுகிறது. இவ்வெள்ளி விழா வெளியீடாகவே இந்நூல் வருவதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னைப் பெற்று வளர்த்துப் பெரியவனாக்கி, நாட்டில் உலவச் செய்த என் அன்னைக்கு ஆற்றும் இந்த அறப்பணி கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சிறக்க வளர்ந்துள்ளது. இந்த நாளில் இதன் வளர்ச்சிக்கு உதவிய எல்லா அன்பர் களுக்கும் என் வாழ்த்தினையும் வணக்கத்தினையும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் பணிகளுக் கிடையில் என்னை இக்கட்டுரைகளை எழுத வைத்த அன்பர் களுக்கும் என் நன்றி உரித்து.

இந்நூல் இன்று தக்கார் வெள்ளிவிழா வெளியீடாக வெளியிட, தக்கார் முதற்படி பெற, வெள்ளிவிழா நிகழ்ச்சிக்கு இடையில் வெளிவருகிறது. அவர்களுக்கும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலில் உள்ள கட்டுரைகளைத் தொகுத்தும் அச்சிடுங் காலை பிழைகளை ஒத்து நோக்கித் திருத்தி உதவியும் நின்ற பச்சையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. டாக்டர். சா. வளவன் அவர்களுக்கு என் நன்றி. நூலை ஏற்றுப் புரக்க உள்ள அனைவருக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

பணிவுள்ள,

தமிழ்க்கலை இல்லம்
வள்ளியம்மாள் கல்வி அறம்
சென்னை-30, 13-3-1993

**அ. மு. பரமசிவானந்தம்**

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1. | நல்லவை ஆற்றுமின் | 6 |
| 2. | மேன்மையே விழைக | 11 |
| 3. | பொருந்துமா? | 13 |
| 4. | பத்துப்பாட்டு | 20 |
| 5. | மணிமேகலை—காப்பிய நயம் | 28 |
| 6. | இறை நிலை | 34 |
| 7. | எங்கும் சிவனருள் யாவினும் அவனருள் | 40 |
| 8. | முருகன் | 46 |
| 9. | திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் | 54 |
| 10. | திருக்கோவையார் | 61 |
| 11. | பெரியபுராணம் | 65 |
| 12. | நந்தனின் ஆதனூர் | 73 |
| 13. | வேற்காடு—சக்திவேற்காடே | 76 |
| 14. | சமயம் வளர்த்த தமிழ்—பௌத்தம் | 84 |
| 15. | வ.வே.சு. ஐயர் தமிழ் இலக்கியப் பணி | 90 |
| 16. | தனித்தமிழ் இயக்கம் | 101 |

| | | |
|---|---|---|
| 17. | புரட்சிக் கவிஞருடன் நான் | 104 |
| 18. | தாய்மொழி | 110 |
| 19. | நாட்டு நலம் | 112 |
| 20. | பழங்குடிப் பண்பாடு | 124 |
| 21. | கல்விநலம் கண்ட கற்பகம் | 134 |
| 22. | கனவு நனவாகியது | 142 |
| 23. | குழந்தைகள் கல்வி | 145 |
| 24. | தேவை உயர்ந்த குறிக்கோள் | 150 |
| 25. | நாட்டுக் கல்விமுறை நன்கு அமைவதாக! | 155 |

காரிட்ட ஆணவக் கருவரையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தஎனை வெளியில்விட் டு அல்லலாம்
காப்பிட்டு அதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ் பொய்யுடல்
பெலக்கவினை அமுதம் ஊட்டிப்
பெரிய புவனத்திடை போக்குவர உறுகின்ற
பெரியவிளையாட் டிசைத்திட்டு
ஏரிட்டதன் சுருதி மொழிதப்பின் நமனை விட்டு
இடருற ஒறுக்கி, இடர்தீர்த்து
இரவு பகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொண்மின் என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே

—தாயுமானவர்

# நல்லவை ஆற்றுமின்

மனிதன் பிற உயிர்களினும் வேறுபட்டவன். நல்லதையும் தீயதையும் பகுத்துணர வல்லவன்; உலகில்வாழும் உயிர்களை ஒத்து நோக்கும் திறன்பெற்றவன்; அவன் உள்ளம் உயர்ந்தது; அதனால் உயர்ந்ததையே எண்ணக் கடமைப் பட்டவன்; அதன்வழியே உயர்ந்த செயல்களையே செய்ய வேண்டியவன். இந்த நிலையினை எண்ணி ஒவ்வொரு மனிதனும் செயலாற்று வானாயின் நாடு நாடாகும்; உலகம் உயர்ந்தோங்கும். ஆனால் இன்றைய நிலை என்ன?

வையம் வாழ, தான் வாழ வேண்டியவன் மனிதன். ஒரு படிமேலே செல்லின், தான் வாடினும் மற்றவரை வாழவிட வேண்டியவன். 'தான் கெடினும் தக்கார் கேடு எண்ணற்க' என்பது சான்றோர் வாக்கு. எனவே, 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை' என்ற அடிப்படையில் மனித இனம் வாழின் நாட்டில் நலிவு இல்லை. ஆனால் மனிதன் அந்த நிலையிலிருந்து எங்கோ சென்று கொண்டிருக்கிறான். 'மற்றவர் எக்கேடு கெட்டாலும் கெடட்டும்; தான்மட்டும் வாழ்ந்தால் போதும்' என எண்ணுகிறான். அந்த எண்ணத்தில் பல கொடுமைகளைச் செய்கிறான். தனிமனிதன் மட்டுமின்றி, நாடுகளும் சாதி சமயம் இவற்றின் பேரால் சமுதாயமும் இந்தச் சுயநல உணர்வில் மற்றவர்களுக்கு எண்ணற்ற கொடுமைகளை இழைப்பதைக் காண்கிறோம். 'ஒருலக உணர்ச்சி அரும்ப வேண்டும்' என்று கூறிக்கொண்டே நாட்டுக்கு நாடுவேறுபாட்டை வளர்ப்பதைக் காண்கிறோம். இப்படியே சமயத்துக்குச் சமயம். சாதிக்குச் சாதி, கட்சிக்குக்

கட்சி, மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகளை விரிவாக்கிக் கொண்டே, வினை விதைத்து, நாட்டையும் உலகையும் அல்லல் படுத்துவதே 'நாகரிக'மாகவுள்ளது. இந்த நிலையினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எண்ணிய ஔவையார், அனைத்துக்கும் அடிப்படை அரசியலும் ஆட்சியுமானபடியால், தமிழக மூவேந்தரையும் ஒருசேர முன்னிறுத்தி, நல்லதொரு அறிவுரையை வழங்குகிறார். ஆம்! மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால், மற்றவரை வாழ வைக்கத் தான் வேண்டும் என்பதை வற்புறுத்துகிறார். மற்றவரை வாழவைப்பதில் பிறர் நலம் மட்டுமின்றித் தன்னலமும் உள்ளது என, அத்தன்னலமுடைய மனிதனைத் தெருட்டுகிறார். மற்றவர்களை வாழவைப்பதை 'நல்வினை' என்கிறார். 'மனிதா' நீ வாழும் காலம் இருக்கட்டும்; நீ ஆழும் காலத்தினை நினைத்துப்பார், அப்போது உனக்கு உதவுவார் யார்?' என்று சுட்டி, 'நீ நன்றாக இருக்கும்போது மற்றவரை வாழவிட்டு நீயும் வாழ்வாயாயின், எதிர்பாராது நீ ஆழும் காலத்தில். அந்த மற்றவர் உன்னைத் தாழாமல் தாங்கிக் கொள்வர்' என விளக்கி அப்பிறர்நலத்தில் தன்னலமும் தோய்ந்துள்ளதைக் காட்டுகிறார். உண்மையிலேயே 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' எதிர்பாராது தாழ்ச்சி உறுவாராயின், சமுதாயம் அவர்தம் தாழ்ச்சியையும் வீழ்ச்சியையும் வறிதே பார்த்துக் கொண்டிராது, அக்காலத்தில் அவர்களுக்குக் கை கொடுப்பதை இன்றும் நாம் காண்கிறோம். எனவேதான் ஔவையார் அன்றே என்றும் மனிதன் தாழாது வாழும் நல்வழியினை வீழநேரினும் மற்றவர் அவனை விழாது தாங்கிக் கொள்ளும் நிலையினைச் சுட்டிக் காட்டிச் சென்றார்.

சமுதாய வாழ்வுக்கிடையில் தன் வாழ்வினைப் பிணைத்துக் கொண்டுள்ள மனிதன், மற்றவரை வாழவிட்டுத் தானும் வாழ்வானாயின் — தேவையாயின் — கூடுமாயின்— தன்னை

ஒறுத்தும் மற்றவரை வாழவைக்கும் நல்வினையே மேற் கொள்வானாயின், அவன் என்றென்றும் தாழாது உயர்வான் என்பது உறுதி. மக்கள் இந்த உண்மையினை உணர்ந்து வாழின் தாம் வாழ்வதோடு சமுதாயத்தையும் வாழவைத்த பெருமையினைப் பெறுவர். அப்பெருமை பெறும் நல்லுணர்வு எல்லார் உள்ளத்திலும் அரும்புவதாக என வாழ்த்தி ஔவையார் அடிகளை உங்கள் முன் வைக்கிறேன்.

'வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலை புணைபிறி தில்லை' (புறம் 367)

# மேன்மையே விழைக

உலகில் எத்தனையோ வகையான மக்களை நாம் காண்கின்றோம். பலர் பலவகையில் வாழ்க்கை நடத்துகின்றனர். சிலர் வாழ்வில் உயர்கின்றனர்; சிலர் வழுக்கி வீழ்கின்றனர். 'நெட்டுயிர்ப் போடு உற்ற பிணமாகச்' சிலர் ஏதோ பெற்று எப்படியோ இயந்திர வாழ்க்கை வாழ்கின்றனர். மக்கள் வாழ்க்கை அமைவின் போக்கிலேதான் இன்று எத்தனை எத்தனை மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும் காண முடிகின்றது. நேற்று, செல்வராக—உயர்பதவி உற்றவராக—இருந்தவர், இன்று சாதாரணமாகத் தள்ளப்பெறுகின்றார். நேற்று கீழ் நிலையில் ஒதுக்கப் பெற்றிருந்தவர்—எல்லாவகையாலும் தாழ்த்தப் பெற்றிருந்தவர் இன்று எதிர்பாராத வகையில் உயர்த்தப் பெறுகின்றார். 'தாழ்ந்தோர் உயர்வர் என்றும் மிக உயர்ந்தோர் தாழ்வர் என்றும் அறம் சூழ்ந்தோர் உரைக்கும் உரை கண்டாம்' என்ற சிவப்பிரகாசர் மொழிப்படி இந்த உயர்வும் தாழ்வும் உலக வாழ்வில் நீக்க முடியாதன. இவற்றில் உயர்ந்தோர் தாழ்ந்தால்—உலகுக்கு

அவ்வளவாகக் கெடுதலே இல்லை; அவர்களால் அதிகமாகச் செயலாற்றவும் முடியாது. ஆனால் தாழ்ந்தோர் உயர்ந்தோ ராகி—அதிகாரமும் கிடைக்கப் பெற்றால் அதனால் அவருக்கு மட்டுமன்றி, அவர் செயலாற்றும் நாட்டிற்கும் நலமோ கேடோ அமைவது இயற்கை. எனவே நல்லவர் உயர்வு நாட்டிற்கும் உலகுக்கும் நன்மை உண்டாக்கும் என்பதும் அல்லவர் உயர்வு அவருக்கு மட்டுமன்றி, சமுதாயத்துக்கே தீங்கு விளைவிக்கும் என்பதும் யாரும் அறிந்த உண்மை.

ஒருசிலர் தங்கள் பதவியோ செல்வநிலையோ எவ்வளவு உயர்ந்தாலும் அதனால் இறுமாப்போ—ஏமாப்போ கொள் ளாமல் தம் முன்னைய நிலையினையும் சுற்றியுள்ள சமூகத்தின் நிலையினையும் எண்ணி, அமைந்து, தம் உயர்வாலும் வளத் தாலும் உலகுக்கு என்னென்ன நன்மைகள் செய்யலாம் என ஆய்ந்து செயல்படுவர். ஒருசிலர் அத்தகைய ஆக்கப்பணி செய்யா நிலையில் இருப்பினும், தம் உயர்வின் செருக்கால் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்க மாட்டார்கள். பிறரைச் சிறுமைப்படுத்திச் சிறுசொல் சொல்லமாட்டார்கள். ஆனால் அற்பர்களுக்கு வாழ்வுவந்தால். அந்த வாழ்வின் செருக்கால் அவர்கள் கெடுவதோடு, சமுதாயத்தையும் கெடுத்து, பல கொடுமைகளைச் செய்வார்கள். அவர்கள் கொடுமைகள் எந்த அளவுக்குச் செல்லும் என்பதை நாலடி ஓர் உவமையால் விளக்குகிறது. இந்திரன் தன் நிலையில்லாத பதவியின் செருக்கால், சமூக நெறிக்கே மாறுபட்டதாகிய மற்றவர் மனைவியை அடையும் கொடுமையினைச் செய்து நிலை கெட்ட வரலாறு உலகறிந்ததே. அதனால் அவன் அடைந்த இழிநிலையும் எண்ணத்தக்கதே. அதுமட்டுமன்றி ஆணவத் தால் எத்தனை அறவோரை அல்லல் படுத்தினான் என்பதும் இலக்கியம் காட்டுவதே. இதை எண்ணியே நாலடியார் 'முந்திரிமேல் காணிமிகினும் கீழ் தன்னை இந்திரனாய் எண்ணி விடும்' என்று நல்ல வகையில் விள்க்கம் தருகிறது.

கீழோருக்கு மிக உயர்ந்த பதவிவர வேண்டும் என்பதில்லை. சிறுபதவியிலும் தடுமாறுவர். 'முந்திரி' இன்று பலரால் மறக்கப்பட்ட சிறுஎண்—கீழ்எண். அது தமிழ் நெடுங்கணக்கில் மிகத்தாழ்ந்தது. அதிலிருந்து அடுத்த தாழ்ந்த—ஆனால் முத்திரியை விடச் சற்று உயர்ந்த காணி அளவில் கீழோர் உயர்ந்தாலும் அவர்களால் உலகத்துக்குக் கொடுமை உண்டாகும் என நாலடி உணர்த்துகின்றது. அதுமட்டுமன்றி, இந்திரனாக எண்ணிக் கொடுமை இயற்றி, தான் பெற்ற உயர்வையும் பிறவற்றையும் 'விடும்' என்றும் கடைசியில் சுட்டுகிறது. எனவே சமுதாயம் செம்மையுற வேண்டுமானால் —மக்களும் பிற உயிர்களும் துன்பமற்று இன்பவாழ்வில் வாழ வேண்டுமானால் நல்லவர் உயரவேண்டும். அவர்கள் உயரா விட்டாலும் தவறில்லை; அல்லவர் உயரக் கூடாது என்பதே நாலடியின் நல்ல ஆழ்ந்த கருத்தாகும். எனவே நாட்டில் வாழும் நாம்—நம் சமுதாயம் வளர அச்சமுதாயத்தின் இன்பம் தழைக்க வேண்டி நல்லவர் உயரப் பாடுபட வேண்டும் என்று கூறி, அந்த நாலடியின் முழுப்பாடலையும் உங்கள் முன்வைத்து விடைபெறுகின்றேன்.

'சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல்—எக்காலும்
முந்திரி மேல் காணி மிகினும் கீழ்தன்னை
இந்திரா எண்ணி விடும்' (கீழ்மை-6)

# பொருந்துமா?

**தொ**ல்காப்பியர் தம் செய்யுள் இயலில்

'அவற்றுள். சூத்திரர்தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க (செய்-471)
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே'

எனச் சொல்லியுள்ளார். அவரே பின் மரபியலுள்,

'மேற்கிளர்ந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை எழுத்திற் செய்யுட் டாகிச்
சொல்லும் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத் துணைமை எய்தி
அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்' (மரபியல்-646)

எனச் சூத்திரத்தின் இயல்பினைக் கூறுகின்றார். இது பொருந்துமா என்பதே கேள்வி. மேல் ஆடி நிழல் போல அறிய எளிமை உடையதாக இருக்க வேண்டும் எனச் சூத்திரஞ் செய்தவர், பின் இவ்வாறு சில்வகை எழுத்தில், உரையகத்தடக்கி, நுண்மையொடு ஒண்மை பெற்று, துளக்க லாகாது, அளக்கலாகாது மாகிய அரும் பொருள் கொண்டு பல்வகைப் பயன் தெரிவது' எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்? தொல்காப்பியர் சூத்திரங்கள் அனைத்துமே அவர் செய்யுள் இயலில் கூறிய சூத்திரத்துக்கு ஒப்பவே எளிமையில் அமைகின்றன. எனவே மரபியல் சூத்திரம் இடைச்செருகலோ என எண்ணவேண்டியுள்ளது என்பது போன்ற நிலை உண்டாவது இயற்கை. எனினும் ஆழ்ந்து காணின் இரண்டும் ஒன்றே என்பது விளங்கும். மேலும் தொல்காப்பியச் சூத்திரங்கள் அத்தனையும் அவ்வாறு எளிமையானவையுமல்ல. உரை எழுத வந்த பேராசிரியர் மரபியல் சூத்திரத்தில் வரும் ஒவ்வொரு சிறப்பியலுக்கும் தொல்காப்பியத்திலிருந்தே மேற்கோள் காட்டி, சூத்திர அமைதி மரபியலில் காட்டிய முறையே சரி எனவும் விளக்கு கின்றார். 'சில்வகை எழுத்தின் செய்யுட் டாகி' என்பதற்கு 'ஆடிநிழலின் அறியச் செய்யுங்கால், அதுபோல ஒருவழிப் பொருளடக்கி ஒருவழி வெள்ளிடை கிடப்பச் செய்யப்படாது,

பொருட்கு வேண்டுஞ் சில சொல்லாற் செய்யும் செய்கைத் தாகி' என உரை எழுதுகின்றார். எனவே தொல்காப்பியர் மரபியல் சூத்திரத்தைச் செய்யுளியல் சூத்திரத்தை உட் கொண்டே எழுதுகிறார் என்பது நன்கு புலனாகும்.

மேலும் செய்யுளியல் சூத்திரத்துக்கு வெளிப்படையாகத் தோன்றும் பொருள் என்று மட்டும் கொள்வது எப்படிப் பொருந்தும். அச்சூத்திரத்துக்கு இளம்பூரணர் உரை அவ்வாறு எளிமை உடையது என்னுமாறு அமைகிறது என்றாலும், பிற நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரைகள் அதன் உள்ளக்கிடக்கையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இளம்பூரணர்.

'கண்ணாடி நிழல் போல விளங்கித் தோன்றி ஆராயாமல் பொருள் நனி விளங்குமாறு யாப்பின் கண்ணே தோன்றி யாப்பது' என்று கூறி அதற்கு விளக்கம் தருகிறார். "ஆடி நிழலின் அறியத் தோன்றுதலாவது' சூத்திரம் படித்த அளவில் அதனால் சொல்லப்படுகின்ற பொருள் ஒருங்கு தோன்றுதல், 'நாடுத லின்றிப் பொருள் நனி விளங்குதலாவது' அதன்கண் ஆக்கப்பட்ட சொற்குப் பொருள் ஆராயாமல் புலப்படத் தோன்றுமாறு யாத்தல்" என்கின்றார். இதற்கு மேற் கோளாகத் தொல்காப்பியரின் சொல்லதிகார வேற்றுமை யியல் முதல் சூத்திரத்தையும் காட்டுகிறார். எனினும் இதில் பொருள் ஒருங்கு தோற்றுவதில் அவர் நினைக்கும் நினைப்பி லேயே பிற உரைகள் செல்லுகின்றன.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கு 'ஒரு பொருள் நுதலுங்கால் கண்ணாடி சிறியதாயினும் அகன்று பட்ட பொருளை அறிவித்தாங்கு அறியத் தோன்றி, தெரிதல் வேண்டாதபடி அவ்வகன்ற பொருளை மிகவும் விளங்கு மாற்றால் செய்யுள தோன்றச் செய்து முடிக்கப்படுவது' என உரை கூறுகின்றார்,

பேராசிரியரும் 'ஒரு பொருள் நுதலிய எனப்பட்ட சூத்திரம் பொருள் நுதலுங்கால் ஆடி சிறிதாயினும் அகன்று, பட்ட பொருளை அறிவித்தாற்போலத் தேர்தல் வேண்டாமை அவ்வகன்ற பொருள் அடங்கு மாற்றான் அச்செய்யுள் தோன்றச் செய்து முடிக்கப்பெறுவது' என்கின்றார்.

இவ்வுரைகளை யெல்லாம் நோக்கின் ஓர் உண்மை நன்கு புலனாகும். அனைவரும் சூத்திரம் ஆடிநிழலைப் போன்றிருக்க வேண்டும் எனத் தொல்காப்பியர் செய்யுளியலில் சொல்லும் கருத்தை ஏற்று அதற்குத்தக உரை வகுக்கின்றனர். ஆயினும் அவ்வுரையில் இருவர் ஆழ்ந்த பொருளை அமைத்துள்ளனர். இளம்பூரணம் இதற்கு மேலாகப் பொருள் கொண்டாலும், மற்ற இருவரும் 'ஆடி'யின் தன்மையை ஆராய்ந்து வெளியிடுகின்றனர். கண்ணாடி உருவிற் சிறியதாயினும் உலகின் பல பொருள்களைத் தனது உள்ளடக்கிக் கொண்டு காட்டவல்லது. நெடுந்தொலைவில் உள்ள நம் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத பொருளையெல்லாம் கொண்டுவந்து காட்டவல்லது. இன்று சிறப்பாகத் தொலை நாடியில் உள்ள கண்ணாடிகள் மிகச்சிறியனவாயினும் அண்ட கோளத்தின் பல பகுதிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர். நெடுந் தொலைவில் சாதாரண மனிதனின் இக் கண்களுக்கு விளங்காத பல பொருள்களை ஆடி அறிமுகப் படுத்துகிறது. எனவே அந்த முறைப்படி பார்த்தால் சூத்திரம் சாதாரண அறிவிற்குப் புலனாகாத பலப்பல உண்மைகளையெல்லாம் விளக்கத்தக்கதாக இருக்க வேண்டும். கண்ணாடிபோல சில சூத்திரம் அளவில் சிறியதாகவே இருப்பினும் பலப்பல பொருள் விளக்கத்தைக் கொண்டு காட்டுவதாக இருக்க வேண்டும். ஆயினும் 'அறியத் தோன்றி' என்றும், 'நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க' என்றும் செய்யுள் இயல் சூத்திரம் இருக்கிறதே என்ற ஐயம் எழலாம். அவற்றின் பொருளைச் சற்று ஆழ்ந்து சிந்திப்பின்

விளங்கும். கண்ணாடியின் முன் பட்ட பொருள் அறியத் தோன்றும்; அது போன்றே சூத்திரத்தின் பொருளும் எளிமை யின் அறியத் தோன்றவேண்டும், வேறு உதவியின்றி எளிதாய்ப் பொருள் விளங்கும் ஆடியில் அதுபோல் சூத்திரத்தின் பொருள் எளிதாக வேண்டும். ஆனால் மரபியலில் வரும் சூத்திர விளக்கம் இவ்வாறு இல்லையே என்பதே வினா.

இந்த இரு தொடர்களுக்கும் உரையாசிரியர்களின் உரை களை நோக்கின் ஓர் உண்மை புலனாகும். 'கண்ணாடி சிறியதாயினும் அகன்று பட்ட பொருளை அறியத்தோன்றி' எனவும் 'தெரிதல் வேண்டாதபடி அவ்வகன்ற பொருளை மிகவும் விளங்குமாற்றால் விளங்கச் செய்வது' எனவும் கூறுவர் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் 'ஒருங்குதோன்றல்' என்றும், 'பொருள் ஆராயாமல் புலப்படத் தோன்றுமாறு யாத்தல்' என்றும் காட்டுவர். 'தேர்தல் வேண்டாமை அவ்வகன்ற பொருள் அடங்குமாற்றான்'. செய்யப்படுவது என்பர் பேராசிரியர். எனவே மூவருடைய உட்கிடையும் ஒன்றே எனக் கொள்ளலாம். மேலே காட்டியபடி அண்ட முகட்டு எல்லை வரையில் அளந்து காட்டும் ஆடி அக் காட்சியை விளக்கமின்றியோ, ஐயத்துக்கிடையிலோ காட்டு மாயின் அதனால் என்னபயன்? பரந்த இடத்தை மட்டும் படம் பிடித்து, அப்படம் விளக்கமாக இல்லையாயின் அப்புகைப் படத்தை யாரே விரும்புவர். எனவே அறியாப் படாத பல வுண்மைகளைக் காட்டுவதோடு, கண்ணாடி அவற்றைத் தெளிவாகவே காட்ட வேண்டும். இன்றேல் ஆய்வுக்களத்தில் ஐயத்துக் கிடையிலே என்ன செய்ய முடியும்?

இதே நிலை சூத்திரத்துக்கும் பொருந்தும். ஒரு சூத்திரத்தைப் படிக்கும் போது அது காட்ட வந்த பொருளை அது நன்கு தெள்ளத் தெளியக் காட்ட வேண்டும். அதை விளக்குவதற்கு வேறு சூத்திரங்களோ பிறவோ தேவை

இல்லாத வகையில் விளக்கத்துக்குப் பிறவற்றை நாடுதல் இன்றி—எடுத்த பொருள் எத்துணை பெரியதாகவும் விரிந்த தாகவும் இருப்பினும் நன்கு விளக்க வேண்டும். இந்தக் கருத் தைத்தான் செய்யுள் இயல் சூத்திரம் உணர்த்துகிறது. இதைத் தான் உரையாசிரியர்களும் அவ்வாறு விளக்கிக் காட்டி உணர்த்துகின்றார்கள். இனி இதை 'அறியத் தோன்றி நாடுதல் இன்றிப் பொருள் நனிவிளங்க', என்ற தொடருக்கு ஒரு விளக்கம் போன்றே மரபியல் சூத்திரம் விளக்குகின்றது.

ஆடி, காட்டும் பொருளைத் தன்னகத்தடக்கி எத்துணைப் பெரியதையும் ஐயத்துக்கு இடமின்றி, அளக்க முடியாத வகை யுடையதனையும் துளக்கலாகா வகையில் பலருக்கும் பயன் தந்து விளக்குவது போன்றே சூத்திரமும் சொல்லுங்காலை, தான் சொல்லும் உரை அடக்கி, காட்டும் பொருளின் உண்மையையும் அளவிட முடியாப் பருமையும் காட்டும் நிலையில் அளவறுக்க முடியாத அரும் பொருள் தருவதாகி. பலவகையானும் பலருக்கும் பயன் தந்து விளக்குவதாகும், எனவே மரபியல் சூத்திரம் செய்யுளியல் சூத்திரத்தின் ஓர் அடியின் விளக்கமாகவே வந்துள்ளது. ஆகையினால் இதில் தொல்காப்பியர் இருவேறு கருத்தை வெளியிட்டார் என்று கொள்ள வேண்டுவதில்லை. அதிலும் இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு இடையில், ஆடியின் துணை கொண்டு ஆய்வுக்களத்தில் அல்லும் பகலும் ஆய்ந்து காணாதவெல்லாம் கண்டும் காட்டியும் அறிவுறுத்தும் நிலையில்—ஐயத்தின் நீங்கித் தெளிந்து வானத்தை வையத்தினும் எளிமையாக விளக்கிக் காட்டும் வகையில்—அதற்கெல்லாம் அடிப்படையாக அமையும் அந்த 'ஆடி'யின் திறம் வியக்கத்தக்க ஒன்றன்றோ! ஆம்! அதே வகையில் வியக்கத்தக்க அளவிலாப் பொருளையும் ஐயத்துக்கு இடமின்றித் தெளிவாக விளக்குவதே சூத்திர மாகும்.

மற்றும் இவ்வாறன்றி நேராகப் பொருள் கொள்ளினும் ஆண்டும் ஒன்று காணலாம். தொல்காப்பியர் செய்யுள் இயலில் சூத்திரத்துக்கு இலக்கணம் கூற நினைத்தார். அவரு டைய கருத்து ஒருவேளை சூத்திரம் 'நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்குமாறு' மிக எளிமையாக இருக்க வேண்டும் என்பதாக இருக்கலாம். அதனால் அவ்வாறு சூத்திரஞ்செய்தார். ஆனால் மரபியல் சூத்திரம் அத்தகைய தன்று. 'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபா'கும். எனவே தமிழில் அதுவரை எவ்வாறு சூத்திரஞ் செய்வது மரபு என்பதை எண்ணிப் பார்த்திருப்பார் அவர். எனவே தன் கருத்து தனிப் பட்ட வகையில் எதுவாக அமையினும் மரபு கெடாத வகை யிலன்றோ மரபியல் சூத்திரத்தை அமைக்க வேண்டும். ஆகவே உலக வழக்கு—மரபுநிலை சூத்திரம் இன்னவாறு அமைய வேண்டும் என்பதாகும். அதனாலேயே செய்யுள் இயல் சூத்திரத்தை 'யாத்தமைப்பதுவே' எனத் தன் முடிபாக அறுதி யிட்டுக் கூறிய ஆசிரியர், மரபியல் சூத்திரத்தின் பொறுப் பைத் தன்மேல் கொள்ளாது 'சூத்திரத்தியல்பென யாத்தனர் புலவர்' எனப் புலவர் மேல் ஏற்றிக் கூறுகின்றார். மரபு வழி வரும் புலவர் தம் கொள்கை அது எனவும் தனக்கு அது அவ்வளவு உடன்பாடு இல்லை எனவும் குறிப்பாகக் காட்டு கிறார் எனக் கொள்ளலாம். இன்னும் தமக்கு விருப்பமில் லாத கொள்கையைக் கூற வேண்டுமாயின் 'என்று கூறுவாரும் உளர்' என அறிஞர்கள் பேசுவதையும் எழுதுவதையும் காண் கிறோம். எனவே இந்த நிலையில் தொல்காப்பியர் எளிமை யுடையதாக வேண்டும் என்ற தன் கொள்கையைச் செய்யுளி யலிலும், மரபு வழி வரும் புலவர் கூறும் நெறியினை மரபி யலிலும் கூறினார் எனக் கொள்ளலாம்; என்றாலும் இவ்வாறு இடத்துக்கு ஏற்றவாறு மாறுபவரல்லர் தொல்காப்பியர். இது ஒரு மன அமைதிக்காகவே காட்டியது. ஆகவே மேலே கண்டபடி இரண்டு சூத்திரங்களும் ஒன்றற்கொன்று அரண் செய்வனவாகிப் பொருந்தியே நிற்கின்றன என்பதே துணிபு.

# பத்துப் பாட்டு

'சங்க இலக்கியங்கள்' என்று சிறப்பித்துப் பேசப் பெறுவன பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமாம். இத்தொகை நூல்களுள் முதற் சங்ககால முதல் கி. பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டு, வரையில்—கடைச் சங்க காலம் அதை ஒட்டிய காலம் வரையில் அமைந்த பாடல்கள் இடம்பெறும் என்பர். இவை அகம், புறம் இரண்டு பொருள்களைப் பற்றியன. இவற்றுள் நூறு அடி எல்லைக்குள் அடங்கிய பாடல்களை, எட்டுத் தொகை என்றும் நூற்றுக்கு மேற்பட்ட அடிகளைக் கொண்ட பாடல் களைப் பத்துப் பாட்டு' என்றும் பகுத்துள்ளனர். பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்கள் தொகுக்கப் பெற்றமையின் முன்னவை தொகை நூல்களாக அமைய, தனித்து நின்ற பத்துப் பாடல்களைக் கொண்ட இது அதே பெயரில் வழங்கப் பெற்றது. இசையோடு பொருந்திப்பாடும் பாணர், விறலி, பொருநர் போன்றவரை ஆற்றுப்படுத்தும் வகையில் பெரும் பகுதி அமைந்தமையின் இதைப் பாட்டு என்றே தொகைப் படுத்தினார் போலும்.

இப் பத்துப்பாட்டினால் அக்காலத்தில் வரலாற்றினையே ஓரளவு புரிந்து கொள்ள முடியும். சோழபாண்டியப் பேரரசர் களையும் பிற அரசர்களையும் பெருங்கொடைவள்ளல் களையும் பாடியதுடன் ஆரிய அரசனுக்குத் தமிழ்ப் பண்பாட் டினை அறிவுறுத்திய பாடலும் இதில் இடம் பெறுகிறது. பாடிய புலவர்களோ அக்காலத்து வாழ்ந்த பெரும்புலவர் களாவர். தமிழகத்து நிலை, ஐந்திணை அமைப்பு, அவற்றில் வாழும் மக்கள் நிலை, அகப்பொருள் நுணுக்கங்கள், புறப் பொருளின் பல்வேறு பாகுபாடுகள் இவற்றை அறிந்து கொள் வதோடு, இவற்றால் அக்காலத்திய கலை, தெய்வநெறி, பல வேறு வகைப்பட்ட பிற மக்கள் வாழ்க்கை முறை, பாட் டிசைக்கும் பாணர் போன்றவர் வாழ்க்கை, பெருநகரங்களின்

சிறப்பியல்பு, போர்க்களங்களின் நிலை, பிறநாட்டவர் தொடர்பு, இயற்கையின் எழில் ஆகிய பலவற்றையும் அறிந்து கொள்ளலாம். சுருக்கமாகச் சொன்னால் இப்பத்துப்பாட்டு அக்காலத் தமிழகத்தைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடி எனலாம். மேலும், கடவுளை முன்னிறுத்தி, வாழ்த்தி, வரம் வேண்டும் வகையில் தமிழகத்தில் முதன் முதலாக எழுந்த 'திருமுருகாற்றுப்படை' என்ற பாட்டும் இதில் இடம் பெறுகிறது. எனவே தமிழ் இலக்கிய வரலாற்றில் இப்பத்துப் பாட்டு ஒரு திருப்பு மையமாகத் தெரிகின்றது.

இனி, இப்பத்துப்பாட்டினைத் தனித்தனியாகப் பகுத்துக் காணலாம். அதற்குமுன் இவை யாவை என்பதையும் பாடினோர் பாடப்பட்டோர் யாவர் என்பதையும் அறிந்து கொள்ளலாம்

**'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து'**

என்ற ஒரு பழம் பாடல் இப்பத்தினையும் தொகுத்துத் தந்துள்ளது. இவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை என்பன அகத்திணைக் குரியன. மற்றவை ஏழும் புறத்திணைப் பற்றின.

முதலாவதாக அமைவது திருமுருகாற்றுப்படை. (317) ஆற்றுப்படை என்பது பாணர் கூத்தர் பொருநர் போன்றோர் புரவலர் அல்லது அரசர்களைப் பாடிப் பெரும் பரிசில் பெற்று வரும் வழியில், அப்பெரு நலம் பெறாத தன் இனத்தைச்

சேர்ந்தவனைக் காண, அவனை அப்புரவலர் அல்லது அரசர் பால் சென்று பயன்பெற ஆற்றுப்படுத்துவது—வழி காட்டுவது ஆகும். (ஆறு—வழி) இங்கே நக்கீரர், முருகனை வழிபட்டு நலமுற்ற ஒரு நல்லடியார், அவ்வாறு பெறாதாரைக் கண்டு அம்முருகன்பால் சென்று நலம் பெற ஆற்றுப்படுத்துகிறார். ஆற்றுப்படை பாடும் அக்கலைஞர் பெயரிலேயே அமைவது மரபு. ஆனால், இது பாடப் பெற்ற முருகன் பெயரில் இருப்பது மாறுபட்டது என்பது ஒரு கருத்து. எனினும் முருகன் அருள்பெற்ற ஒருவன் காணும் எதையும் முருகனாகவே காண்கின்றமையின் எதிர்ப்பட்டவனை முருகன் தோற்றத்தில் கண்டு பாடுவதாகக் கொள்ள இது. பொருந்தும். 'உலகத்து ஒரு நீ ஆகத் தோன்ற விழுமிய பெய வரும் பரிசில்' (வரி 294-95) என அதை நக்கீரரே கூறுகிறார் அதில் முருகன் வாழிடங்களாகத் திருப்பரங்குன்றம், திருச் சீரலைவாய் (செந்தில்) திருஆவினன்குடி (பழநி) திருஏரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (அனைத்து மலையிடங் களும்) பழமுதிர்சோலை (அழகர் கோயில்) ஆகிய ஆறு இடங் களைச் சுட்டினும் இறுதியில் அவன் யாண்டும் நிறைந்து எங்கும் யார்க்கும் அருள்நிலையினை 'வேண்டுநர் வேண்டி யாங்கு எய்தினர் வழிபட்ட, ஆண்டாண் டாயினுமாகக் காண் தக' (வரி 248-49) நிற்பன் என நக்கீரரே கூறுகிறார். இது சங்க இலக்கியத்தொடு சார்த்தப் பெறும் அதே வேளையில் சைவ சமய இலக்கியத்தோடும் சார்த்தப் பெறுகின்றது. இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றிருப்பதோடு, நக்கீரரும் 'நக்கீர தேவநாயனார்' எனச் சிறப்புறுகிறார். இன்று இதை நாள் தோறும் பாராயணம் செய்து பயன்பெறுவோர் பலராவர்.

இரண்டாவது பொருநராற்றுப்படை; (248) முடத்தாமக் கண்ணியார் எனும் புலவர் கரிகாற் பெருவளத்தானாகிய சோழமன்னனைப் பாடியது. பொருநர் என்போர் மற்றவர்

போல வேடங்கொண்டு ஏர்க்களத்தினையும் போர்க்களத்தினையும் பாடுவோர் என்பர். இங்கே கரிகாலன் போர்க்களத்தினைப் பாடுகின்றமையின் இவர் போர்க்களப் பொருநராவர். இதில் முடத்தாமக்கண்ணியார் கரிகாலனின் வெண்ணிப் பறந்தலைப் போரினைப் பற்றிப் பாடியுள்ளார். மேலும் இப்பாடல் வழியே பொருநர் இயல்பும் பாலை யாழ் சிறப்பும், பிறவும் கூறப் பெறுவதோடு கரிகாற் பெருவளத்தானின் நல்லியல்புகள் பலவும் விளக்கிக் காட்டப் பெறுகின்றன. அவனைப் பாடிய பொருநரும் விறலியரும் பெறும் பரிசுகளையும், பிற புலவருக்கு அவன் பரிசளிக்கும் சிறப்பும் காட்டப் பெறுகின்றன.

மூன்றாவது சிறுபாணாற்றுப்படை (269), இசைபாடும் பாணர் சிறுபாணர், பெரும்பாணர் என அவர் யாழ்வழிப் பெயர் பெறுவர். இது சிறுபாணரை ஆற்றுப் படுத்தியது. அடுத்தது பெரும் பாணரை ஆற்றுப்படுத்தியது. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் இதில் ஓய்மா நாட்டு நல்லியக் கோடனைப் பாடியுள்ளார். இவன் ஒரு பெரு வள்ளல். சங்க காலத்தை ஒட்டி வாழ்ந்தவன். இவன் நாடு தற்போது தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திண்டிவனத்தைச் சார்ந்ததாகும். இதன் ஆசிரியர் நத்தத்தனார் பிறந்த நல்லூர் காஞ்சிக்குப் பத்துக் கல் (16 கி.மீ) கிழக்கே நத்தன் நல்லூர் (நத்தா நல்லூர்) என இன்றும் உள்ளது. இதில் முடிகெழு வேந்தர் மூவரும், கடைஎழு வள்ளல்களும் மறைந்த பின்பு இவன் அவர்களை ஒத்துப் பெருவள்ளலாக விளங்கிய பெருமை பேசப் பெறுகின்றது, இவன் நாட்டைச் சார்ந்த நெய்தல், முல்லை, மருதம் ஆகிய திணை நிலங்களின் இயல்பும் அவற்றில் வாழ் மக்கள் பண்பும் விளக்கிக் காட்டப் பெறுவதோடு, இந்நல்லியக் கோடனின் வீரம், வள்ளன்மை, புகழ் ஆகியவையும் பேசப் பெறுகின்றன. இதில் கூறப்பெற்ற முருகன் வேலூர் (வரி 174) இன்றும் 'இளையனார் வேலூர்'

என்ற பெயருடன் திண்டிவனத்துக்கும் நத்தன் நல்லூருக்கும் இடையில் சிறந்து விளங்குகிறது. ஓய்மாநாடு என்பது ஒறுமா நாடு என்றும் வழங்கப் பெற்றதென்பர்.

நான்காவதாக உள்ளது பெரும் பாணாற்றுப்படை; (500). இதைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இதனால் பாராட்டப் பெற்ற மன்னன் தொண்டைமான் இளந்திரையன். இது பரிசுபெற்ற பெரும்பாணன் மற்றொரு பெரும் பாணனை வழியிடைக்கண்டு ஆற்றுப்படுத்தியது. இளந்திரையன் காஞ்சியில் ஆண்டவன்; சோழர்குலத் தோன்றல். இதன் வழியே காஞ்சிநகரத்தின் சிறப்பனைத் தையும் நன்கு உணர முடியும். அங்கே வாழும் பல்வேறு வகைப்பட்ட மக்களின் பண்பு, வாழ்க்கை முறை முதலியன நன்கு காட்டப்பெறுகின்றன. அந்நகர எல்லையில் 'கலங்கரை விளக்கம்' உள்ளமை பேசப் பெறுகின்றமையின் அன்று இந் நகர் கடன் மல்லை வரையில் (சுமார் 40 கல் அல்லது 64 கி.மீ) பரவி இருந்ததெனலாம். இதற்கொப்ப, இரண்டொரு நூற் றாண்டுகளுக்குப் பின் வாழ்ந்த ஆழ்வார் 'கச்சிக் கிடந்தவன் ஊர் கடன் மல்லை' எனவும் சீனயாத்திரிகள் 'காஞ்சி இலங்கையை நோக்கிக் கடற்கரையில் உள்ள பட்டினம்' எனவும் கூறியிருப்பது இதை வலியுறுத்தும். இந்நகரில் இளந் திரையன் ஆண்ட சிறப்பினையும் கொடை நலத்தையும் பிற பண்புகளையும் உருத்திரங்கண்ணனார் பாராட்டுவதோடு அத்தொண்டை நாட்டு ஐந்திணை நலத்தினையும் அழகுறக் காட்டுகிறார்.

ஐந்தாவது முல்லைப்பாட்டு (103). இதுவே இத்தொகுதி யில் குறைந்த அடிகளை உடையது, அகப்பொருள் பற்றியது. இதனைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணி கனார் மகனார் நப்பூதனார். வெளியே போர் மேற் சென்ற தலைவனைப் பிரிய முடியாது வருந்திய தலைவியைப் பெருமுது பெண்டிர் ஆற்றியிருக்க, வேண்டி அத்தலைவனின்

போர்க்கள அமைப்பு, பிறவற்றைக் கூறி, அவன் வெற்றித் தேர் வந்துவிட்டது எனக்கூறி, அவளை அமைதிப்படுத்திய நெறியில் இப்பாடல் அமைகின்றது. இதன்வழி அக்காலத்தில் யானைப் பாகர் வடமொழிச் சொற்களைக் கூறி அவற்றை உண்பித்த நிகழ்ச்சி வழி மொழி இணைப்பினை அறிய முடிகிறது. மேலும் பல்வகைப் பழக்க வழக்கங்களையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். 'இல்லிருத்தல் முல்லை' என்ற இலக்கண முறைப்படி தலைவியின் ஆற்றியிருக்கும் செயலும் அதே வேளையில் தலைவனின் பாசறை நிலையும், ஒருசேரப் படம் பிடித்துக் காட்டும் வகையில் இப்பாடல் அமைகின்றது.

ஆறாவது மதுரைக்காஞ்சி (782). இது இத்தொகுதியில் நீண்ட பாடல். ஆசிரியர் மாங்குடி மருதனார். பாடலுக் குரியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன். இவன் இப்புலவரை மதித்த தன்மையினை 'மாங்குடிமருதன் தலைவனாகப் புலவர் பாடாது வரைக என் நிலவரை' என்ற புறநானூற்று அடிகளில் (72) அறியலாம். அவன் காலத்து அவைக் களத்தே இவர் தலைவராகவும் பெரும் புலவராகவும் திகழ்ந்தார்; மதுரைக்காஞ்சியில் புலவர் நெடிது வாழ்ந்து போர் பல புரிந்து பல வெற்றி கண்டு வீறு பெற்ற நெடுஞ்செழியனுக்கு உலக நிலையாமையினை உணர்த்த இதைப்பாடினார். எனவே இது மதுரைக் காஞ்சியா யிற்று. (காஞ்சி—நிலையாமை) இவன் முன்னோர் திறன் புகழ் முதலியவற்றையும் இவன் பேராற்றலையும் விளக்கி அத் துணையோர் 'மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோர்' (230)-'திரையிடு மணலினும் பலரே காண்' (236) என நிலையா மையை உணர்த்தி 'மகிழ்ந்தினி துறைமதி பெரும' என முடிக் கிறார் புலவர். இப்பாடல் ஒரு வரலாற்றுப் பெட்டகம் என்பர். மதுரையின் நலம்காட்டி, மன்னர் திறன் காட்டி, வைகை வளன் காட்டி, பழம் பெரும் பாண்டிய குல

முன்னோர் சிறப்பியல்புகளைக் காட்டி, அங்கே வாழும் மக்கள் இயல்பையும் இயற்கை நலத்தையும் காட்டி தம் நீண்ட பாடலை நமக்குத் தந்துள்ளார் மருதனார்.

ஏழாவது நெடுநல்வாடை (188); பாடியவர் நக்கீரர்; பாடலுக்குரிய தலைவன் நெடுஞ்செழியன். போர்வினை கருதிப் புறஞ்சென்ற பாண்டியனை எண்ணி ஏங்கும் பாண்டிமாதேவிக்கு வாடை வருத்தாது நல்வாடையாக அமையுமாறு அவள்தன் தோழியரும் செவிலியரும் ஆற்றும் நிலையினையும், அதேவேளையில் பாண்டியன் போர்க் களத்தே தம் படைத்தலைவர்களையும் பிறரையும் பாதி நாளிரவில் பரிந்தோம்பும் பண்பினையும் விளக்கி, அவன் தேவியின் துயர் நீங்கப் போர் 'இன்னே முடிவதாக' (168) எனப் பரவும் நிலையில் இதனைத் தனித்திறன் தோன்ற நக்கீரர் பாடியுள்ளார். இது அகப்பாடலாயினும் இதில் 'வேம்பு தலை யாத்த நோன்காழ் எஃகம்' (176) என்ற அடி பாண்டியனைக் குறிப்பதாக அமைவதால் இதைப் புறம் என்பார் உளர். எனினும் போர்க்களத்தே காயமுற்றாரை வேப்பந்தழை நீவி, துயர்நீக்கும் நிலை இன்றும் உள்ளமையின் இதை உலகியல்மேல் நோக்கி, அகமெனவே கொள்ள வேண்டும். (இன்றும் வேம்பு அவ்வகையில் பல புண், நோய், அம்மை ஆகியவற்றிற்குப் பயன்படுவதறிவோம்)

எட்டாவதாக அமைவது குறிஞ்சிப்பாட்டு (261). இது 'குறிஞ்சிக்குக் கபிலர்' எனப் போற்றப் பெறும் அப்பெரும் புலவரால் பாடப்பெற்றது. அதிலும் இது தமிழறியா ஆரிய அரசன் யாழ்பிரகத்தனுக்குத் தமிழறியப் பாடியதாகும். அகப் பொருளின் முதலிடமாகிய 'குறிஞ்சி'யினை—புணர்ச்சி நிலை யினை விளக்கிக் காட்டியபின் அவன் தமிழறியாதிருப் பானோ! களவொழுக்கம் பற்றியும் அறத்தொடு நிற்கும் திறம் பற்றியும், தலைவன் தலைவி வாயில்கள் பற்றியும் பிற களவொழுக்கம் பற்றிய செய்திகள் பற்றியும் இதில் கூறப்

பெறுகின்றன. இதில் அக்காலத்தின் பழக்கவழக்கங்களும் சுட்டப்பெறுகின்றன. சங்கப்பாடல்களுள்—குறிஞ்சி பற்றிய வற்றுள் இது நீண்டதாக உள்ளமையாலும் இதன் பொருட் செறிவாலும் இதனைப் 'பெருங்குறிஞ்சி' என்றே பேசுவர் புலவர்.

ஒன்பதாவது உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப் பாலை. (301) இவர் பாடிய பெரும்பாணாற்றுப்படை வழியே காஞ்சியின் சிறப்பு விளங்கிற்று. இதனால் மறைந்த பூம்புகார் (காவிரிப் பூம்பட்டினத்தின்) சிறப்பு விளங்கிற்று. பாடற்குரியோன் கரிகாற்பெருவளத்தான். இவனைப்பாடி பதினாறுலட்சம் பொன் பரிசு பெற்றநாகக் கலிங்கத்துப் பரணி பாடுகிறது (இராச 25). தலைவனைப் பிரிய விரும்பாத தலைவன் 'பூம்புகாரைப் போன்ற பட்டினம் பெறினும் வாரேன்' என்று சொல்லும் வகையில் இப்பாடல் அகப் பொருள் அமைதியில் செல்லுகிறது. இதில் காவிரிப்பூம் பட்டினப் பல்வேறு வகைச் சிறப்புகளைப் பாராட்டுவதோடு சோழன் கரிகாற் பெருவளத்தானின் கொடை, வீரம், பண்பாடு, புகழ் அனைத்தையும் காட்டியுள்ளார் புலவர். 'கானம் அவன் வேலினும் வெய்யவாயின' (200) என்றும், 'இவள் தோள் அவன் கோலினும் தண்ணியவாயின' (301) என்றும் நெஞ்சுக்குக் கூறும் முகத்தான் இந்த அகப்பாடல் அமைகின்றது. இது வரலாற்றுக்கு உதவும் பான்மையது.

பத்தாவது மலைபடுகடாம் (583). இது கூத்தராற்றுப் படை எனவும் பெரும் பரிசு பெற்ற கூத்தன் ஒருவன் பெறாத கூத்தனைச் செங்கண்மா (வடஆர்க்காடு மாவட்டம்) வள்ளல் நன்னன் சேய் நன்னனிடத்து ஆற்றுப்படுத்துவது. இதன் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கவுசி கனார். இவர் மலைப்பகுதியைச் சேர்ந்தவ ராதலின் சேயாறு மலையிடைத்தோன்றி செங்கண்மா எல்லையில் தரையிடை

ஊரும்வரையில் மலையில் உண்டாக்கும் ஒலிகளையும் பிற ஒலிகளையும் விளக்கிக் கூறுவதால் இது 'மலைபடுகடாம்' (கடாம்—ஒலி) எனலாயிற்று. இதில் நன்னன் வணங்கும் நவிரமலைக் காரியுண்டிக் கடவுளின் நிலையும் சேயாற்றின் சிறப்பும் செங்கண்மாநகர் நலனும் நன்னன் கொடைத்திறனும் பிறவும் பேசப் பெறுகின்றன. இசைநலமும் மக்கள் விருந்தினரைப் புரக்கும் பண்பும், நன்னனைக் காண வருவார் வாயிலில் வரிசை பெறக் காத்து நிற்கும் நிலையும் அவன் அவர்களுக்கும் விறலியர் கூத்தருக்கும் வாரி வழங்கும் வள்ளல் தன்மையும் காட்டப் பெறுகின்றன.

இவ்வாறு இப்பத்துப் பாட்டு, சங்க காலத்திலும் அதை ஒட்டிய காலத்திலும் வாழ்ந்த எட்டுப் புலவர்களால் மூன்று பெருமன்னர்கள், இருவள்ளல்கள், குன்றெறிந்த குமரவேள் ஆகியோரையும் அகம் பற்றியும் (இருபாடல்கள்) பாடப் பெற்றவையாம். சங்ககாலத் தமிழகத்தையும் அதை ஒட்டிய கால இயல்புகளையும் கண்டறிய இவை உதவுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் பின் 'மலை, கடல் நாடு, வளநகர், பருவம்' ஆகியவற்றை இணைத்துக் காப்பியம் எழக்காரணமாக இவை முதல் திருப்பமாக அமைகின்றன எனலாம். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய நல்ல உரை உண்டு. இதை (1889ல்) உலகுக்கு அச்சிட்டுத் தந்த பெருமை டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருக்கு உரியது. இப்பத்துப்பாட்டு காலத்தை வென்று கதிரவன் ஒளியென விளங்கும் என்பது உறுதி.

# மணிமேகலை—காப்பிய நயம்

தமிழ் இலக்கிய நெடுந்தெருவில் எத்தனையோ திருப்பங்கள் உள்ளன. அவற்றுள் முதன் முதலாக நம் கண்ணுக்குத் தெரியும் பெருந்திருப்பம் சங்க கால எல்லையில் அமைந்த

காப்பிய இலக்கியத் திருப்பமேயாகும். தனித்தனிப் பாடல் களாக அரசரையும் பிறரையும் முன்னிறுத்திப் பாடிய பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் நிற்க, ஒரு தலைவனை முன் னிறுத்தி, பலப்பல அடிகளில் பலப்பல காதைகளாகப் பகுத்துப் பெருங்காப்பியம் கண்ட திருப்பமே அதுவாகும். அத்திருப்பத்தில் நமக்கு முதலில் தெரிவன சிலம்பும் மேகலை யுமேயாம். ஐம்பெருங்காப்பியங்களுள் பிற மொழிபெயர்ப்புக் காப்பியங்களாக அமைய, இவை இரண்டு தமிழில் முதல் நூலாகவே அமைந்த பெருமைக்குரியன. முன்னது தாயைப் பாட, பின்னது சேயைப் பாடும் பான்மையினை யாவரும் அறிவர். இவற்றை இரட்டைக் காப்பியம் எனவே அழைப் பரன்றோ!

தமிழில் சமய உண்மையினை விளக்கும் அடிப்படையில் அமைந்த பெருங்காப்பியம் மணிமேகலையாகும். சிலம்பில் கவுந்தி அடிகள் தம் சமயமாகிய சமணத்தின் உண்மையினை ஆங்காங்கே சுட்டிக் காட்டுவதோடு, பிற சமயங்களின் ஏற்றத் தையும் பாராட்டுகிறார். ஆனால் சாத்தனாரோ தம் சமய மாகிய பௌத்தத்தின் சிறப்பினைக் காட்டவே இக்காப்பியம் எழுதினாரோ என எண்ணத்தக்க வகையில் இம்மணிமேகலை அமைகின்றது. எனினும், பௌத்தம் வளர்த்த தமிழ் வரிசையில் இம்மணிமேகலை முதலிடம் பெற்று, காப்பிய நயமும் முக்கிய வளமும் பெற்று, பிறசிறப்பியல்புகளும் உற்றுச் சிறந்த காப்பியமாகத் திகழ்கின்றது. அதனாலேயே மேலைநாட்டு அறிஞராகிய டாக்டர் போப் அவர்களும் நம் நாட்டு அறிஞர்களாகிய கனகசபைப்பிள்ளை, கிருஷ்ணசாமி ஐயங்கார், A,S.P. ஐயர் போன்றாரும் பிறரும் இதைப் பொன்னேபோல் போற்றிப் பாராட்டுகின்றனர்.

அறிஞர்களால் போற்றப்பெறும் அளவிற்கு இக்காப்பியம் சிறப்பதற்கு அதன் இலக்கியவளமே காரணமாகும். காப்பிய இலக்கண அமைதிக்கேற்ப அழகுற அமைந்து, முப்பது காதை

களால் ஆக்கப்பெற்ற இந்நூல் இலக்கிய வளமும் வரலாற்றுக் கருத்துக்களும் பிறவும் கொண்டு சிறக்க அமைகின்றது. மணிமேகலை துறவு நூல் என்று கொள்ளப்பெறினும், சாத்தனார் இல்லறமே துறவறத்திலும் ஏற்றமுடையது என்பதையும் அவ்வாழ்வில் அமைவார் வழியே வையம் சிறக்கின்றதென்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அப்படியே சாத்தனார் தமக்கு முன் வாழ்ந்த பேரறிஞர் தம் கொள்கைகளையும் வாய்மொழிகளையும் பொன்னே போல் போற்றித் தம் காப்பியத்தில் இடம்பெறச் செய்து, அதை வாழும் காப்பியமாக்கி விட்டார். அவர் காலத்துக்குப் பின் இன்றுவரையில் இலக்கியம் வடிக்கும் எண்ணற்ற புலவர்கள் இச்சாத்தனார் வாய்மொழியினையும் வாரி வழங்கிய கருத்துக் களையும் அப்படி அப்படியே தத்தம் இலக்கியங்களில் ஏற்றிப் போற்றியுள்ளனர். சாத்தனார் வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டிய சமுதாய நெறிமுறைகளையும், வழக்காறுகளையும், பண்பாடு நாகரிகம் போன்ற பலவற்றையும் தம் காப்பிய வழியே தெள்ளத்தெளியக் காட்டுவதன் மூலம் தாமும் நிலைத்து வாழ்ந்து காப்பியத்தையும் என்றென்றும் வாழ வைத்து விட்டார். மக்கள் வாழ்வுக்கென வகுக்கப்பெற்ற அறங்களைச் சூத்திரங்களின் வழியே விளக்கும் திறனும், அவற்றை விளக்கிக் காட்டக் கையாளும் உவமை நலனும், இடையிடை எடுத்தாளும் சிறுகதைகளின் ஏற்றமும் இயைபும், இயற்கையோடு இயைந்த வாழ்வின் எழில் நலம் தோய்ந்த கூறுபாடுகள், வாழ்வியல், அரசியல், சமூகவியல், பொருளியல் ஆகியவற்றின் விளக்கங்களும் இக்காப்பியம் சிறக்கக் காரணமாகின்றன. எனவேதான் சாத்தனார் தம் சமயநெறி விளக்க இதைப் பாடினார் எனக் கொள்ளினும், இது யாவரும் போற்றும் வாழ்விலக்கியமாகி விட்டது. அவர் தம் காப்பிய நயத்தில் இரண்டொன்று கண்டு அமையலாம்.

எல்லா உயிர்களும் வாழ இன்றியமையாதது உணவாகும். 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' என்பது சங்கச் சான்றோர் வாக்கு. அந்த உணவினையே சாத்தனார் 'ஆருயிர் மருந்து' என்கிறார். 'ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து' என்பது அவர் வாக்கு. மணிமேகலை தன் அமுத சுரபியோடு ஆதிரையின் வீட்டு வாயில் நிற்க, 'பாரக மடங்கலும் பசிப்பிணி அறுக' என வாழ்த்தி, ஆதிரை உணவினை அதில் இட்டாள். கற்புடை நல்லாளாகிய அவள் இட்ட அந்த உணவே, இறுதி வரை எடுக்க எடுக்கக் குறையாது வளர்ந்து உலகை உண்பித்தது. உயிர்களிடத்து யாதொரு வேறுபாடுமின்றி உண்டியும் உடையும் உறையுளும் தருதலே அறம் என்ற சமுதாய நெறியினைச் சாத்தனார்,

'அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இது கேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்' (25,228-31)

எனக் காட்டுகிறார். ஆம்! இன்றளவும் உலகச் சமுதாயம் இந்த மூன்றின் நிறைவைத் தேடித் தானே திரும்பத் திரும்பத் திட்டங்கள் தீட்டுகிறது.

ஆதிரையை முன்னிறுத்தி இல்லற நெறியினையும் கற்பின் திறனையும் புகழ்ந்த சாத்தனார், இல்லற வாழ்வினை மேற்கொள்ளாதவன் எத்தனை அறஞ்செயினும் பயனில்லை என்ற உண்மையினை,

'பத்தினி இல்லோர் பல்லறம் செயினும்
புத்தேள் உலகம் புகார்' (22,117-8)

என்று வள்ளுவர் வழி நின்று விளக்க உரைக்கிறார்.

உணவின் இன்றியமையாத பாலின் சிறப்பினையும் அதைத் தரும் பசுவின் சிறப்பினையும் காட்டி, அத்தகைய நல்ல பசுவினை யாகத்தின் பொருட்டு கொலை செய்தல் தக்கதன்று என்பதனையும் வள்ளுவர் வழிநின்று விளக்குகின்றார்.

'விடுநில மருங்கின் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட்கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை' (13,51-55)

என்பது அவர் வாக்கு.

அவ்வாறே வள்ளுவர் வழிநின்றும் அவர் வாய்மொழியினைக் காட்டியும் இருமுறை சிறந்த வகையில் கற்பின் பொற்பினைக் காட்டுகிறார்.

'மண்டிணி ஞாலத்து மழை வளம் தரும்
பெண்டி ராயின் பிறர்நெஞ்சு புகார்' (22,44-45)

என்ற அடிகளால் பிறர் நெஞ்சு புகாத பெருங்கற்பினைக் காட்டி.

'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்' (22,59-61)

என்று வள்ளுவர் வாய்மொழி காட்டி, அவரையும் பொய்யில் புலவர் எனப் புகழ்கின்றார்.

மக்கள் வாழ்வில் நீக்க வேண்டிய பத்துக் குற்றங்கள் எவை எவை என்பதையும் மக்கள் கடிய வேண்டிய கொடுமைகள் ஐந்து எவை என்பதையும் விளக்கி, அவை அனைத்தும் சமூக வாழ்விலிருந்து நீங்கினாலன்றி உயிர்களுக்கு உய்வில்லை என்பதனை அறவணவடிகள் வாயிலாகச் சாத்தனார் விளக்குகிறார். ஆயினும் மனித இனம் இவற்றை நீக்காத காரணத்தினால்தான் அல்லல் சகதியில் ஆழ்ந்து துயர் உறுகின்றது.

நாட்டில் மக்கள் பசியும் பிணியும் பகையும் நீங்கி வாழ்ந்தாலன்றி விழாக்கள் பல கொண்டாடுவதில் பயனில்லை

எனவும் செற்றமும் கலாமும் செய்யாது அவற்றை விட்டு நீங்க வேண்டியது மக்கள் கடமை எனவும் வற்புறுத்துகிறார்.

இலக்கிய மரபில் போற்றப்பெறும் இயற்கையினைப் பாராட்டும் சிறப்பினையும் சாத்தனார் கைவிடவில்லை. பூம்புகாரினைப் பூங்கொடியாகிய பெண்ணாகவே கண்டு பாதாதிகேச வருணனை செய்யும் அடிகள் (5/109-122) உள்ளத்தைத் தொடுவனவாம். அப்படியே இந்திரதனுவென இயங்கும் அகழியின் இயற்கையினைக் காட்டும் எழிலோவியமும் எண்ணி எண்ணிப் போற்றற்குரிய ஒன்றாகும்.

சாத்தனாருடைய உவமை நயம் உயர்ந்த வகையில் அமைவதாகும். மணிமேகலை வாடிக் கண்ணீர்விட மாதவி தன் கையால் அவள் முகத்தில் கண்ணீர் துடைத்து நின்றதை,

'மாதவி மணி மேகலை முகம் நோக்கி
தாமரை தண்மதி சேர்ந்தது போல
காமர் செங்கையின் கண்ணீர் மாற்றி' (3,11-13)

என்று விளக்குவது ஓர் எடுத்துக்காட்டு.

சாத்தனாருடைய கிளைக் கதைகளும் இலக்கிய நயம் வாய்ந்தவை. இவ்வாறு எல்லா வகையான காப்பிய வளமும் நலமும் சார்ந்ததோடு, தன் காவியத்தைச் சமுதாய வாழ்விற்கு வழிகாட்டியாகவே அமைத்துப் பாடிய காரணத்தால் தான் மணிமேகலை இன்றும் வாழ்கிறது; என்றும் வாழும். அவர் வாய்மொழியைப் பின்பற்றி வாழ்வாங்கு வாழ்ந்து, உலகை உயரச் செய்ய வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

# இறைநிலை

குப்பம் என்பது 'கும்பம்' என்பதன் திரிபு என்பர். அதாவது கூடி வாழும் இடம் என்பதாகும். கும்பல், குவியல், கூட்டம் எனக் கொள்ளும் நிலையில் சிலரோ பலரோ கூடி வாழிடங்களைத் தமிழ்நாட்டில் குப்பம் என்ற பெயரால் பண்டைநாள்தொட்டு வழங்கிவருகின்றனர். எத்தனையோ குப்பங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றுள் ஒருசில சிறப்புற்றனவாக, தக்க காரணங்களுடன் தம்முடன் இணை யாகச் சொற்களைக் கொண்டு விளங்குகின்றன. நெய் குப்பம், பள்ளிகுப்பம், நெற்குப்பம், நொச்சிக்குப்பம், நெல்லிக் குப்பம் எனப் பலவகையில் ஊர்கள் உள்ளன. இறைவரொடு சார்த்தி வழங்கப் பெறும் குப்பங்களும் உள்ளன. பொன் னேரிக்கருகில் ஆண்டவனாகிய முருகன் தங்கிய சிற்றூருக்கு ஆண்டார் குப்பம் என்றே பெயர். அப்படியே முருகன் வள்ளியம்மையாரை ஒருநாள் இருத்திச் சென்று வந்தமை யால் (வள்ளி) அம்மையார் குப்பம் என்ற ஊர் தணிகைவரை அருகிலே அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த அம்மையார் குப்பத்தில் இருபெருந்தேவியரும் ஒருபுடை அமர்ந்து காட்சி தந்து கொண்டிருக்கும் கந்தன் திருக் கோயிலுக்கு ஐந்து நிலைக்கோபுரம் அமைத்து, அதற்கும் அதன்வழியே திருக்கோயிலுக்கும் குடமுழுக்குவிழா— கும்பாபிடேகம் செய்ய ஏற்பாடு செய்யப் பெற்றுச் செய லாற்றும் அன்பர் அனைவரும் பாராட்டுதலுக்கும் போற்று தற்கும் உரியவராவர்.

அம்மையார் குப்பத்தும் குன்றுதோறும் தணிகையிலும் பிறயாண்டும் நீக்கமற நின்ற இறைவன்—முருகன் விளை யாட்டின் ஒருபகுதியே இத்தலத்தில் வள்ளியம்மையாரைத் தங்க வைத்தது. அந்த இறைவன் நிலையினைக் கந்தபுராண ஆசிரியர் பலப்பல வகையில் விளக்கிக் காட்டுவதை எண்ணிப் பார்க்க இன்பம் சுரக்கிறது. வளமான வைய வாழ்வையும் மாசற்ற உள நலத்தையும் இந்த உலகில் தந்து, 'பின் பேரின்ப

வீட்டிலிசைந்து 'துயில் கொள்மின் என்று' தாலாட்டி அணைக்கும் அந்த அறுமுகன் ஆடலையும் அளவிலா ஆற்றலுடைமையையும் கச்சியப்பர் பலபடக் காட்டுவர். ஒன்றிரண்டு ஈண்டு கண்டு அமையலாம் என எண்ணுகிறேன்.

'மாலயன் தனக்கும் ஏனை வானவர்தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்றமூர்த்தி இம்மூர்த்தி அன்றே'

என்று சுரபதுமனாலேயே போற்றி வணங்கப் பெற்றவனாகிய முருகன், எல்லாவற்றுக்கும் மேலாக—அப்பாற்பட்டவனாக—ஒருவனாய் உலகேத்த நின்றவனாக இருக்கின்றான் என்பது உண்மை. அவனை அரன்மைந்தனாகக் கண்டு—அரக்கரை அழிப்பவனாகக் கொண்டு—வள்ளி மலையில் வள்ளியை மணந்தவனாக மகிழ்ந்து போற்றுகின்றனர் அடியவர். அப் பெருமான் அருள் ஆடலை யாரே விளக்கவல்லார்? ஆலமர் செல்வன் மகனாக உலகில் புலவர் போற்றும் தணிகாசலத்து இறைவன் தாளிலேயே சத்தவிகார உலகனைத்தும் ஒடுங்கும் என்பர் வள்ளலார்.

'பித்தப் பெருமான் சிவபெருமான்
பெரிய பெருமான் தனக்கரிய
பிள்ளைப் பெருமான் எனப்புலவர்
பேசிக்களிக்கும் பெருவாழ்வே
மத்தப்பெருமால் நீக்குமொரு
மருந்தே எல்லாம் வல்லோனே
வஞ்சச் சமணர் வல்லிருளை
மாய்க்கும் ஞானமணி விளக்கே
அத்தக் கமலத்து அயிற்படைகொள்
அரசே மூவர்க் கருள்செய்தே
ஆக்கல் அளித்தல் அழித்தலெனும்
அம்முத் தொழிலும் தருவோனே
சத்த விகார உலகனைத்தும் தாளில்
ஒடுக்கும் தனிப் பொருளே!
தணிகாசலமாம் தலத் தமர்ந்த
சைவமணியே சண்முகனே!

என்பது அவர் வாக்கு. எனவே முருகன் அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாய், அனைத்தையும் தன்னுள் அடக்கி, வாழவைக்கும் அளவிலா ஆற்றலுடைய அண்ணலாவான். அத்தகைய இறைவன் அடியவர் பொருட்டால் ஆற்றிய ஆடல்கள் பலப்பல. அவற்றுள் ஒன்றே வள்ளியம்மையார் திருமணம்.

பக்குவப்பட்ட உயிரினைத் 'தானே வந்து தலை யளித்து ஆட்கொண் டருளும்' சிறப்பே இதில் பேசப்பெறுகின்றது. இந்த நிலை பற்றிப் பலப்பல அறிஞர்கள் விளக்கியுள்ளனர். எங்கோ கிடந்து, யாவற்றுக்கும் மேலாய் இறையை எண்ணி ஏங்கும் உயிரைநாடி 'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க் கிங்கே என்றருள் செய்யும்' நிலையில் வள்ளியினை உள்ளி வந்து உடன் இணைத்துக் கொண்ட வரலாறே நம் வரலாறுதான்.

முருகன் திருவிளையாடல்களைப் பாடிய கச்சியப்பர் அவன் ஆடலை நல்ல உவமையால் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றார். தினைப்புனத்தில் காவலில் இருந்த வள்ளியம்மையாரிடம் காதலால் உருகும் நிலையினைப் படம் பிடித்துக் காட்டும் பாவலர், சாதாரண மனித நிலையிலேயே அவனைக் காட்டுகிறார். தமிழ்நாட்டு மரபுப்படி களவு மணத்தில் வள்ளியைக் கைக் கொண்ட வரலாற்றினை அத் தமிழ் மரபின் அடிப்படையில் விளக்குகிறார். ஊர்வினவி, பேர்வினவி, உற்ற வழி வினவி, தன்னை ஏற்றுக் கொள்ள இறைஞ்சுகின்றான். அவன் அவ்வாறு இறைஞ்சும் நிலையை நினைத்தே அருணகிரியார் 'மதிவாணுதல் வள்ளியை அல்லது பின் துதியா விரதா' என அனுபூதியில் பாடுகிறார் என எண்ண வேண்டியுள்ளது.

அத்தகைய இறைவன் தன்மையினைக் கச்சியப்பர்,

'உலைப்படு மெழுகதென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான்போல வருந்தியே இரங்காநின்றான்
கலைப்படு மதியப்புத்தேள் கலங்கலம் புனலில்தோன்றி
அலைப்படு தன்மைத்தன்றோ அறுமுகன் ஆடல்
எல்லாம்' (வ. திரு. படலம் 7)

எனக் காட்டி உண்மை நிலையினை விளக்குவர். நெருப்பிடையிட்ட மெழுகென உருகி, அவள் காதல் வலைப்பட்டு இரங்கி வருந்துகிறான் இறைவன். ஆம்! ஆனால் உண்மையில் அவன் நிலை என்ன? அன்னையின் நிலை என்ன? அந்த அருட் சக்தியினை ஆண்டவன் பிரிவ தேது! 'பிரியின் உலகம் ஏது?' ஆனால் இவ்வாறு விளையாடு நிலை!

கச்சியப்பர் அந்த நிலையினை அழகிய உவமையால் விளக்கிவிட்டார். வானத்திலே சந்திரன் வட்டமிடுகின்றான். அவன் தன் அறுதியிட்ட கோட்டில் அமைதியாக உலகைக் கண்டு சென்று கொண்டே இருக்கின்றான். ஆனால் தரையில் உள்ள தண்ணீரில் அவன் உருவம் தெரிகின்றது. நீரில் இறங்குபவர்கள் அந்நீரை அலைக்கிறார்கள். நீர் அலைய உடன் அந்த நிலவொளி காலும் சந்திரனும் அசைகின்றான், அலமருகிறான். அந்த அசைவினைக் கண்டு, இதுதான் சந்திரன் நிலை என்று யாரே முடிவு கட்டுவார்கள்? சந்திரன் எங்கோ வானவீதியில் வட்டமிடுகிறான். அவன் சாயல் இங்கே நீர் அசைய நிலை அசைகின்றது. இந்த ஒரு நீர்நிலையினைப் போன்று பலகோடி நீர் நிலைகளிலும் இச் சந்திரன் அசைவு பரந்து இருக்குமல்லவா! 'ஆம்' அறுமுகன் நிலையும் அத்தகையதே. யாண்டும் நீக்கமற நிறைந்து யாவற்றையும் இயக்கி, அவற்றின் உள்ளும் புறமும் ஒருங்கிருந்து உயிர்தொறும் பரந்த கள்ளனாய் நின்ற அவன் இங்கே இவ்வாறு ஆடல் புரிந்து உயிர்களை ஆட்கொள்ளுகிறான் என்பதைக் கச்சியப்பர் நன்கு உவமை வாயிலாகக் காட்டி விட்டார். மானைக் காட்டி மானைப் பிடிக்கும்

மரபினைப்போல், மனித உருவில் உள்ள உயிரைப் பிடிப்பதற்கு மனித உருவில் வரும் அந்த முருகன் எல்லா உருவுகளுள்ளும் இருந்து, அவற்றைத் தன்னுள் அடக்கி, அவற்றுக்கு அப்பாலும் யாண்டும் நிறைந்து நிற்கும் தன்மையைக் கச்சியப்பர் பல விடங்களில் விளக்குகிறார். மற்றோரிடத்தில் இந்தக் காதல் காட்சியினைக் 'குமரற் கீது திருவிளையாடல் போலாம்' (வ. திரு. பாடல் 160) என இவரே குறிக்கின்றார். எனினும் தன் நூலில் இறுதிப்பாடலில் அந்த இறைவனுடைய ஒப்பற்ற எல்லையற்ற—சொல்லுக்கடங்காத—தூய தன்மையினைக் காட்டி, உலகம் அந்தச் செம்பொருள் அடிபற்றிச் சிறக்க வேண்டும் என வாழ்த்தித் தம் நூலை முடிக்கின்றார் கச்சியப்பர். இதோ அவர் பாடல்.

'பாராகி ஏனைப்பொருளாகி உயிர்ப்பன்மையாகிப்
பேராஉயிர்கட்கு உயிராய்ப் பிறவ்ற்றுமாகி
நேராகித் தோன்றல் இலதாகி நின்றான் கழற்கே
ஆராத காதலோடு போற்றி அடைதும் அன்றே'

(வ. திரு. படலம்—267)

உலகமும் அதைச் சுற்றியுள்ள பிறவும் அவற்றிற் கப்பாலமைந்த வானமுகடும் பரவிய அண்ட கோளங்கள் அத்தனையும் அவனே. எனவே அத்தகைய பஞ்ச பூதங்கள் ஒன்றிய பாரினைக் கூறி, உடன் அப்பாரில் கலந்த ஏனைப் பொருள்களாகிய—மண் நீங்கலாகிய—நீர், நெருப்பு, காற்று, வான் ஆகியவற்றைக் கூறி அவை அனைத்தும் அறுமுகனே என முதலில் நாம் கண்ணால் காணும் உலகினைச் சான்று காட்டிய கச்சியப்பர் மேலே செல்கிறார்.

இத்தகைய பரந்த அண்ட கோளத்தில் இப்பூவுலகம் ஒரு சிறு துளி—தூசு, இது போன்று இன்னும் பல உலகங்களில் வாழும் எல்லா உயிரும் அவனே என்கிறார். உயிரில் வேறுபாடு இல்லா நிலையையும் அவைதம் ஒன்றிய உணர்

வினையும் பிறவற்றையும் உள்ளடக்கி 'உயிர்ப்பன்மையாகி' என்றும் காட்டி 'எவ்வுயிரும் பராபரன் சன்னிதியாகும்' என்ற உண்மையினைத் தெளிவாக்குகின்றார்.

பின், அவ்வுயிராகி நின்றதோடமையாது, அவ்வுயிரினும் வேறாகி அவ்வுயிர்களின் உற்பவ காரணமாகி நின்று அவ்வுயிர்களுக்கு உயிராகி நிற்கின்ற பெருநிலையினையும் சுட்டுகின்றார் ஆசிரியர். இறைவேறு உயிர்வேறு என்ற தத்துவமும்' 'நீயும் நானுமாய் ஏகபோகமாய்' இரண்டறக்கலக்கின்ற தத்துவமும், அவன் ஒருவனே அவையாய் இவையாய் அல்லனவாய் அப்பாலுக்கப்பாய் நிற்கின்ற நிலையும் பிறவும் இவற்றால் விளக்கமுறுகின்றன வன்றோ! பின் அந்த இறையவனே 'வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும்' தன்மையனாய்—காட்சிப் பொருளாகி நேராகி நிற்கின்ற நிலையினையும் 'அல்லார்க்கு அல்லனாய்' அப்பாற்பட்டு மறைந்து நிற்கும் நிலையினையும் 'நேராகித் தோன்றல் இலதாகி நின்றார்' எனக் காட்டுகின்றார். இவ்வாறு வெள்ளிமலையில் வள்ளியின் காதலுக்கு ஏங்கி நின்ற கள்வனே, யாவுமாய் எல்லாமாய் நீக்கமற நிறைகின்ற இறைவன் என்பதையும் அவனே அடியவர் பொருட்டு மானுடமாய், பிற உயிர்களாய்ப் பிறப்பதுபோல் காட்டி ஆட்கொள்வான் என்பதையும் காட்டி அவனைப் பணிய வேண்டிய இன்றியமையாத் தன்மையினைச் சுட்டி, தம் கந்தபுராணத்தை முடிக்கின்றார் கச்சியப்பர்.

ஆம்! அத்தகைய நல்லவன் பாதத்தை அடைய நாம் செய்ய வேண்டுவது, ஆராத காதல் கொள்ள வேண்டுவதே. வள்ளியம்மையார் காதல் கொண்டார்—ஆராத காதல் கொண்டார்—அவன் வந்து அவரைக் கொண்டு சென்றான். நாமும் அவனே அனைத்தும் என்ற உணர்வோடு, தூய உளத்தோடு, வேற்றுமையும் விருப்பும் வெறுப்பும் அற்று, ஆராத காதல் கொண்டு அவனை நினைத்தால் அவன்

வருவான்—நம்மை அணைப்பான்—போற்றுவான்-புரப்பான் - பிறவாத பெருநெறியைத் தருவான். அனைவரும் முயல்வோமாக!

இத்தகைய தெய்வத் தொண்டு சிறக்கும் வகையில் அம்மையார் குப்பத்தில் ஐந்நிலைக் கோபுரம் எழுப்பி ஆண்டவன் கோயிலை அணி செய்து குடமுழுக்கிட்டுக் கும்பிடும் அன்பர்தம் அடி பணிந்து, அவர்கள் பணி சிறக்க என வாழ்த்தி அமைகின்றேன்.

## எங்கும் சிவனருள்! யாவினும் அவனருள்

தம்மை மறந்த மெய்யடியார்கள் யாண்டும் இறைவனையே காண்பர். 'அங்கிங்கெனாதபடி எங்கும்' பரவியுள்ள இறைவன் தம் அடியவர் பொருட்டு பல அருட் செயல்களைச் செய்து கொண்டே இருக்கிறான். 'பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்க மறநிறைகின்ற' பரமன் தன்மையை அடியவர் அனைவரும் ஐம்புலங்களாலும் உற்று உணர்ந்து போற்றுகின்றனர். எனவே அவர் செயலனைத்தும் அருளாகவே படுகின்றன. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்பார் மணிவாசகர். இதன் வழி அனைத்தும் அவனருள் என்று உணர்த்துகிறார். அவன் அருள் நிலையினை இரண்டாக 'அறக்கருணை, மறக்கருணை' என்பர் நல்லோர். ஆகவே அடிப்பதும் அணைப்பதும் அவனருளேயாகும். 'அடித்தடித்து அக்காரம் முன் தீற்றிய அற்புதம்' என்கிறார் மணிவாசகர்.

சேக்கிழார் அத்தகைய தெய்வ நலம் சார்ந்த பண்பாட்டு அடியவர் மரபில் வந்தவர். அவர் அடியார் வரலாறுகளைப் பாடும்போது எங்கும் அருள் நிலையினையே காண்கின்றார்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் போன்றார் வரலாற்றிலும் பிற செயற்கருஞ் செய்கை செய்த அடியவர் வரலாறுகளிலும் இந்த அருளை விளக்கக் காட்டுகிறார்.

அப்பரடிகள் தம் தமக்கையாரைத் தமக்காக வாழ வேண்டுமென வேண்ட, அத் திலகவதியாரும் வாழ இசைந்தார். ஆனால் சேக்கிழார் 'தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயாவினால் அவர் வாழ்ந்தாலும், அவர் 'அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி' (திரு 34) வாழ்ந்தார் என்றே குறிக்கின்றார். இறைவன் அருளை மறைத்து, பின் அந்த அருள் வெளிப்பட்ட நிலையினை அப்பர் வாழ்வில் சுட்டிக்காட்டச் சேக்கிழார் தவறவில்லை. அப்பர் சமண சமயம் சார்ந்த பொழுது 'நம்பர் அருளாமையினால்', (திருநா 37) என்று முன்னர் கூறிய சேக்கிழார், பின் அவர் சைவமாம் சமயம் சார்ந்து திருவதிகை வீரட்டானத்தில் தேவாரத்தின் முதற் பாவாகிய, 'கூற்றாயினவாறு' தொடங்குமுன் 'தம்பிரான் திருவருளால் உரைத் தமிழ்க் கலைகள் சாத்தும் உணர்வு பெற்றார்' (திரு 69) எனக் காட்டுகிறார். எனவே அருளை மறைத்தும் வெளிப்படுத்தியும் ஆண்டவன் எவ்வகையானும் உயிர்களை உடனிருந்து காத்து ஓம்புகிறார் என்று, எங்கும் சிவனருள் எதிலும் அவனருள் என்பதை உலகுக்கு உணர்த்துகிறார் சேக்கிழார் பெருமான்.

சுந்தரர் வாழ்க்கை அனைவரும் அறிந்த ஒன்றே! ஒரு மணத்தைச் சிதைவு செய்த இறைவனைக் கொண்டே இரு பெண்களை மணந்தவரல்லவா அவர். இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று, திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறையில் சென்று புக்கபின்-ஆம்-திரு அருள் துறை தான்—கண்டிலர்—திகைத்து நின்றார். பின் இறைவன் விண்ணிடைத் தோன்றி அருளினார். அதைச் சேக்கிழார் 'அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார்'

(தடு—69) என்று கூறி, மேலும் பித்தா எனப் பாடுமாறு கூறிய இடத்தில்' 'அன்பினை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்' (தடு 73) என்று நோக்கிலும் சொல்லிலும் இறையருள் பரிவதைச் சுட்டிக் காட்டுகிறார். பின் சுந்தரர் 'பித்தா பிறைசூடி' என்று பாட வரலாறு செல்கிறது.

இதே சுந்தரர் திருவாரூர் பரவையாரைக் கண்டபோதும் பரவையார் இவரைக் கண்டபோதும் இறையருளாகவும் இறையருள் பெற்றவராகவும் சேக்கிழார் நமக்குக் காட்டு கிறார். சுந்தரர் பரவையாரைக் கண்டதும்,

'கற்பகத்தின் பூங்கொம்போ! காமன் தன் பெரு வாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ!
புயல் சுமந்து
விற்குவளை பவள மலர் மதி பூத்த விரைக் கொடியோ!
அற்புதமோ! சிவனருளோ! அறியேன் என்றதிசயித்தார்'
(தடு 140)

என்று கூறுவதாகச் சேக்கிழார் காட்டுகிறார். ஏதேதோ எண்ணி இறுதியில் அது சிவனருளே என முடிவு செய்யும் வகையில் 'சிவனருளோ' என இறுதியில் அமைத்துக் காட்டு கிறார். அப்படியே சுந்தரரைக் கண்ட பரவையார்,

'முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ!
பெருகொளியால்
தன்னேரில் மாறனோ! தார் மார்பின் விஞ்ஞையனோ!
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்
பெற்றுடையவனோ!
என்னே என் மனம் திரித்தது இவன் யாரோ என
நினைந்தார்!'

என்று கூறியதாகக் காட்டி இறைவன் அருள் பெற்றவன் தான் (தடு-144) என்பதை இறுதியாகக் கூறி நிறுவுகிறார்.

பின் பரவையார் சென்ற திக்கை நோக்கி, அவர் மறைய 'ஈசனார் அருள் எந்நெறிச் சென்றதே' (தடு. 152) என்று

கூறுகிறார் சுந்தரர். எனவே காதல் வாழ்விலும் கடவுள் அருள்—சிவனருள் சேர்ந்திருக்கும் தன்மையைச் சேக்கிழார் இங்கே தெளிவாகக் காட்டியுள்ளார்.

அப்படியே ஞானசம்பந்தர் கருவில் தங்கிய நிலையறிந்த அவர்தம் பெற்றோர், அந்தச் சிறப்பினை, 'ஆளுடையாளுடன் தோணி அமர்ந்த பிரான் அருள்' (திருஞான 21) என்றே போற்றுகின்றனர். பின் பிள்ளையார் பிறந்ததை 'ஆளுடைய திருத்தோணி அமர்ந்த பிரான் அருள்பெருகப்' (திருஞான 25) பிறந்தார் எனக் காட்டுகிறார். அப்படியே சம்பந்தருக்குப் பாலூட்டி அழுகையை மாற்றி ஞான சம்பந்தராக்கிய நிலையினைக் 'கண்மணி நீர் துடைத்தருளிக் கையிற் பொற்கிண்ண மளித்து அண்ணலை அங்கு அழுகை தீர்த்து அங்கணார் அருள் புரிந்தார்' (திருஞான 687) எனப் பாடுகின்றார்.

அப்பரும் சம்பந்தரும் சீர்காழியில் இணைந்து தோணி யப்பரை வணங்கச் சென்ற நிலையில், சேக்கிழாருக்கு அப்பன் அருளோடு அன்னையின் அருளும் பிணைந்த காட்சி அமைகிறது. இக் காட்சியை ஞானசம்பந்தர் வரலாற்றில் குளக்கரையில் பால் தந்தவிடத்துக் காட்டியுள்ளார். இங்கே திருநாவுக்கரசர் புராணத்தில்,

'அருட் பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்பு செறி கடலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற் சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம் உய்ய
இருட்கரு உண்டவர் அருளும் உலகமெல்லாம்
ஈன்றாள்தன் அருளுமாம் எனவும் கூடத்
தெருட்கலை ஞான கன்றும் அரசும் சென்று
செஞ்சடை யானவர் கோயில் சேர்ந்தார் அன்றே'
(திருநா 185)

என்று காட்டுகின்றார். முதலடியில் 'அருளென்னும் அன்பீன் குழவி' என்ற வள்ளுவர் வாக்கின்படி அன்பினையும் அருளை

யும் இணைத்த சேக்கிழார், மூன்றாவது அடியில் 'உலகம் உய்ய இருட்கடு உண்ட இறைவன்' அருளையும் உலகீன்ற கன்னியாம் அன்னையின் அருளையும் இணைத்து இவ்வுலகு உய்ய அந்த அருள் நிலை என்றும் நம்மைச் சூழ்ந்து வழி காட்டுவதை உணர்த்துகிறார்.

இவ்வாறு தேவாரம் பாடிய மூவர் வாழ்க்கையில் எங்கு நோக்கினும் இறையருள்—சிவனருளே சேக்கிழார் பாவில் தெரியக் காண்கிறோம்.

பிற நாயன்மார் வாழ்விலும் இந்த அருளே ஆட்சிபுரி கின்றது. மாறுபட்ட போர் நிலையிலும் தன்னைக் கொல்லும் மாற்றானைக் காப்பதிலும் இந்த அருளே களி நடம்புரியக் காண்கிறோம். மெய்ப்பொருள் நாயனாரை மாறு வேடத்தில் கொல்ல வந்த முத்திநாதனை 'இடை தெரிந்தருள வேண்டும்' என்று தத்தனும், பின் மெய்ப் பொருளார் முத்திநாதனைக் 'கண்டு ஆகமத்தைக் கூற வந்ததாகச் சொன்னபோது, பிரான் அருள் செய்த இந்த மாறிலா ஆகமத்தை வாசித்தருள் செய வேண்டும்' என்று மெய்ப்பொருளாரும் கூறியதாகக் காட்டி, அவன் கொலை செய்ய வந்ததும் 'இறையருளே' என்னுமாறு வடிக்கிறார் சேக்கிழார். பின் வென்றவர் மெய்ப்பொருளாரே என்பதனை 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார்' எனவும் காட்டுகின்றார்,

ஏனாதி நாதனார் பகைவன் நீறணிந்த காரணத்தாலே அவன் கருத்தை முடிவிக்கத் துணையாக நின்றதோடு, அவன் நிராயுதனைக் கொன்றான் என்ற பழியுண்டாகாதவாறு, 'இரும் பலகை கைவாளுடன் அடர்த்து நேர்வாற் போல் நின்றார்' எனக் காட்டி, முடிவில்

'மற்றினிநாம் போற்றுவதென் வானோர் பிரான் அருளைப்
பற்றலர் தம் கையால் பாசம் அறுத்தருளி
உற்றவரை என்றும் உடன் பிரியா அன்பருளிப்
பொற்றொடியார் பாகனார் பொன்னம்பலம்
அணைந்தார்' (ஏனாதி 41)

என்ற பாடலில் அருளைப் பற்றாதவர் தம் கையால் இறைவன் தன் பாசத்தை அறுத்துநின்ற தன்மையினையும் பின் அந்த இறைவன் தன்னைப் பிரியாப் பேரின்பம் அருளியதையும் சுட்டிக் காட்டி எந்த நிகழ்ச்சியும் இறையருளே என விளக்க வைக்கிறார்.

இயற்பகை நாயனார் தம் மனைவியாரை வந்த அடியவருடன் அனுப்பி, சுற்றத்தையெல்லாம் மாய்த்து, பின் அவருடன் தன் மனைவியை விட்டுத் திரும்பியும் பாராமல் சென்ற நிலையினைச் சேக்கிழார்,

'இவன் அருள் பெறப் பெற்றேன் என்று இயற் பகையாரு மீண்டார்' (இயற் 27) என்று காட்டி, அதுவும் சிவனருள்—சிவனடியார் அருள் எனப் பேசவைக்கின்றார், பின் இறைவன் தானே வந்து தலையளித்து ஆண்ட நிலையினைக் காட்டிய போது, இயற்பகையார் வாயால்,

'சொல்லுவதறியேன் வாழி தோன்றிய தோற்றம் போற்றி
வல்லவந் தருளி என்னை வழித் தொண்டு கொண்டாய்
போற்றி' (இயற் 32)

என்று பாட வைத்துச் சிவனருளைச் சிந்தித்துப் போற்ற வைக்கின்றார்.

இவ்வாறு பெரியபுராணத்தில் எங்கே நோக்கினும்—எதை நோக்கினும், அங்கங்கே—அறத்தும் மறத்தும்—சொல்லிலும் செயலிலும் — எண்ணிலும் எழுத்திலும் — சிவனருளையே காட்டி, அந்த அருளைப் பெற நம்மையெல்லாம் ஆற்றுப் படுத்துகின்றார் சேக்கிழார். அன்று வாழ்ந்த அனபாயனை

மட்டும் சைவ நெறி நோக்கி ஆற்றுப்படுத்தவில்லை அவர். ஆம்! அவனி உள்ளளவும் வாழ்கின்ற உயிரினங்களை வள்ளலாம் தானே வந்து தலையளித்து அருள் காட்டி ஆட்கொள்ளும் இறைவன் அருளைப் பெற ஆற்றுப்படுத்துகின்றார். நாமெல்லாம் அவர் காட்டிய தெய்வ நெறியில் எது வரினும் அல்லது எது போகினும் எல்லாம் சிவனருளே என்னும் தவஞானம்—தலைஞானம்—மெய்ஞ்ஞானம் வரப் பெற்றவர்களாய் வாழ்வாங்கு வாழக் கடமைப் பட்டவர்களாகின்றோம். ஆம்! இந்த அடிப்படை உண்மையை விளக்கி உலகுக்கு வழிகாட்டவே கோவை சேக்கிழார் பண்பாட்டுக்கழகம் செயலாற்றி வருகின்றது. வையத்தை வாழ வைக்கும் சிவ நெறியை—சிவனருளைப் போற்றுவதே அதன் பண்பாடு—பணி. அக் கழகத்தின் தொண்டு சிறக்க என வாழ்த்தி அமைகின்றேன்.

# முருகன்

முருகு என்ற சொல்லுக்கு 'அழகு' என்பது பொருள். எங்கெங்கே அழகுநடமாடுகிறதோ அங்கெல்லாம் முருகன் நிலவுகிறான் என்று கொண்டனர் முன்னோர். 'செங்கேழ் முருகன் காதலித்த வான் தங்கிய வரை சூழ் உலகமும்' என்று நச்சினார்க்கினியர் 'சேயோன் மேய மை வரை உலகமும்' என்ற தொல்காப்பியர் அடிக்கு (திணைநிலத் தெய்வமாக)ப் பொருள் கொண்டார். முருகனுக்குச் சேயோன் என்ற ஒரு பெயர் உண்டு. உயர்ந்த வானோடு கலந்த மலைகளின் உச்சியில் இம்முருகன் கோயில் கொண்டு தங்கியுள்ளான் என இதனால் அறிகிறோம். (செய்மையில் உள்ளவன், செய்யவன்) முருகு என்பதற்கு 'அழகு' என்ற பொருளோடு, இளமை, எழுச்சி, மணம் என்ற பொருள்களும் உள்ளன. ஆகவே

முருகன் அழகனாக இருப்பதோடு, இளையனாகவும் எழுச்சி ஊட்டுபவனாகவும் இனிய மணம் வீசுபவனாகவும் உள்ளான் என அறிதல் வேண்டும். கரிய காடும் வரண்ட பாலையும் வற்றா வளமுடை மருதமும், பரந்த நெய்தலும் சிறக்க இம் மலைகளும் அவற்றின் வளங்களுமே அடிப்படை என்று உணர்ந்ததோடு, அம்மலைகளே மஞ்சு சூழ வானோங்கிப் பிறவற்றோடு அழகுற விளங்குவதை நன்கு கண்ட பண்டைய தமிழ் மக்கள் மலையினை முருகன் தங்கும் இடமாகக் கொண்டனர். இன்றும் முருகன் தங்குமிடம் பெரும்பாலும் மலைகளாகவே உள்ளன. வேங்கடத்து உறையும் இறைவனை, இளையனான முருகனை உணர்த்தும் 'பாலாஜி' என்ற சொல்லாலே வழங்குவர். 'முருகன் அல்லது அழகு' என்ற நூலில் இந்த அழகொடு அணைந்த முருகன் சிறப்பினைத் 'திரு.வி.க.' நன்கு விளக்கியுள்ளனர். சிலப்பதிகாரம் 'குன்றக்குரவை'யிலே முருகனை நன்கு காட்டு கிறார் இளங்கோவடிகள்.

முருகனைத் தமிழ்க் கடவுள் என்பர்; கலியுகக் கடவுள் என்பர். மிகப் பழைய தமிழ் இலக்கியங்கள் பெயரொடு காட்டப் பெறுகின்ற ஒரே தெய்வம் முருகனேயாம். சக்தியும் சிவனும், திருமாலும் வெவ்வேறு குறியீடுகளால் குறிக்கப்பெறினும், இம்முருகன் 'பெரும் பெயர் முருக' என்று பரிபாடல் காட்டியபடி 'முருகன்' என்ற பெயரோடே விளங்கு கின்றனன். இறைவனை முன்னிறுத்திப் பாடிப்பரவும் பாடல் களுள் மிகப்பழைமை வாய்ந்த 'திருமுருகாற்றுப்படை'யும் இம்முருகனைப் பற்றியதே.

இம்முருகனைப் பற்றிய வரலாறு வடமொழிக் கந்த புராணத்திலும் சங்க காலத்தை ஒட்டிய பரிபாடலிலும் இரு வகையாக உள்ளன. எனினும் இவன் சிவனுக்கும் உமைக்கும் மைந்தனாகவே காட்டப் பெறுகின்றான். தமிழ்நாட்டுத் தனித் தெய்வமாகிய 'முருகன்' 'முருகேசன்' ஆகிப் பின்

வடநாட்டுப் புராண மரபில் காட்டப் பெறும் சுப்பிரமணியனாகி, பின் பிரிக்க முடியா வகையில் ஒன்றிக் காட்சி தருகின்றான். இம்முருகன் சிவன் மைந்தனாக காட்டப் பெறினும், இவன் மும் மூர்த்திகளுக்கு அப்பாற்பட்டு நின்று, அவர்களுக்கும் அருள் செய்பவன் என்பதைக் கந்த புராணத்தின் பிற்பகுதியாகிய உபதேசகாண்டம் நன்கு விளக்குகிறது. கந்த புராணத்திலும் கச்சியப்பர், முருகனின் எதிரியாகிய சூரபதுமன் வாக்கிலேயே,

'கோலமா மஞ்ஞை மீது குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அன்னான் பரிசிவை
உணர்ந்திலேன் யான்
மாயவன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ'

எனக் காட்டுகின்றார். சில அறிஞர்கள் சிவனாகிய ஐந்து முகமுடைய சங்கரனே ஆறுமுகமுடைய முருகனாக மாறி நின்றார் என்பர். இராமலிங்க வள்ளலார் முருகன் அனைத்தினுக்கும் அப்பாற்பட்ட 'அனாதி' என்ற உண்மையை,

'பித்த பெருமான் சிவபெருமான் பெரியபெருமான்
தனக்கரிய
பிள்ளைப் பெருமான் எனப்புலவர் பேசிக்களிக்கும்
பெருவாழ்வே
மத்தப் பெருமால் நீக்குமொரு மருந்தே எல்லாம்
வல்லோனே
வஞ்சச் சமணர் வல்லிருளை மாய்க்கும் ஞான மணி
விளக்கே
அத்தக்கமலத்து அயிற்படைகொள் அரசே மூவர்க்கருள்
செய்தே
ஆக்கல் அளித்தல் அழித்தல் எனும் அம்முத்தொழிலும்
தருவோனே
சத்த விகார உலகனைத்தும் தாளில் ஒடுக்கும்
தனிப்பொருளே
தணிகாசலமாம்தலத்தமர்ந்த சைவ மணியேசண்முகனே!

என்று விளக்குகிறார். அனைத்துக்கும் அப்பாற்பட்ட முருகனை—மும்மூர்த்திகளையும் படைத்து அவர்களுக்கு முத்தொழிலும் தந்து இயக்கும் முருகனை, அதே வேளையில் இளங்குழந்தை ஞான சம்பந்தனாகப் பிறந்து சமயக் காழ்ப்பை நீக்கிய முருகனை—புலவர்கள் சிவன் பெருமான் புதல்வன் எனப் பேசி மகிழ்வர் எனக் காட்டுகிறார். எனவே முருகன் அழகன் என்பதனோடு அனைத்துக்கும் அப்பாற் பட்ட ஒப்பற்ற இறைவன் என்பதும் முந்தையோர் கண்ட முடிவு.

இனி, இம் முருகன், சிவபெருமான் மகனாகக் கந்த புராணம் காட்டுவதையும் காணல் வேண்டும். மாயையின் மைந்தனாகிய சூரபதுமன் ஆகிய அரக்கன் சிறந்த சிவபக்த னாயினும் தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுமைகள் செய்ய, அவனை அழித்து அருளுமாறு தேவர்கள் சிவனை வேண்டினர். தன் சக்தியன்றி வேறு யாரும் அச்சூரனை அழிக்க முடியாது என்று அவனுக்கு வரம் தந்த சிவன், 'தன் ஐந்து முகத்தோடு அதோமுகமும் தோற்றி' ஆறுமுகங்களி லிருந்து ஆறு தீப்பொறிகளை உண்டாக்கினான். அவை சரவணப் பொய்கையில் படிந்து ஆறுகுழந்தைகளாக, பின் சிவனும் உமையும் சென்று எடுத்துத் தழுவ, ஆறும் ஒன்றாக ஆறுமுகனானான். பின் சக்தியாகிய வேல் கொண்டு தம் தம்பியராகக் கருதப் பெற்ற நவ வீரர்களுடன் தெற்கே சென்று சூரனையும் அவன் உடன்பிறந்தவர்களையும் ஒடுக்கி, தேவர் சிறை மீட்டு உலகில் அமைதியை நிலை பெறச் செய்து, தணிகையில் தங்கினான். சினம் தணிந்து தங்கிய தாலேயே 'தணிகை' என்றும் 'திருத்தணி' என்றும் அத்தலம் பெயர்பெற்றதென்பர். முருகன் திருமால் மருகனும் ஆவன். தம்மை மணக்கத் தவம் செய்திருந்த திருமால் மகளிர் இருவரும் பின் தேவயானை, வள்ளி என அமைய, அவர் களை மணம் செய்து கொண்டு இருபுறம் இருமகளிர் என்றும்

நீங்காது நின்று மக்களுக்கு அருள் செய்வான் என்பர். இதுவே கந்தபுராண வரலாறு. வள்ளியைத் தமிழ் மரபுப் படி களவு மணத்தில் கைக்கொண்டான் என்றும் அதுவே அவனைத் தமிழ்க் கடவுளாகக் காட்டச் சான்று என்றும் கொள்வர்.

முருகன் அகத்தியருக்குத் தமிழ் அருள, அவர் பொதிய மலையிலிருந்து மாணவர் பன்னிருவருக்குத் தமிழ் இலக்கணம் உணர்த்த, அவர்களுள் சிறந்தவரான தொல்காப்பியர் எழுதியதே தமிழில் தொன்மை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியம் என்பர். 'தழற்புரை நுதற் கடவுள் தந்த தமிழ் தந்தான்' என்ற அடியின்படி சிவனே அகத்தியருக்குத் தமிழை அறிவுறுத்தினான் என்பதும் ஒரு மரபு).

தமிழ் நாட்டில்தான் முருகனுக்கு எங்கும் கோயில்கள் உள்ளன. வடக்கே இமயத்திலிருந்து தெற்கே கடல் நடுவில் இருந்த சூரன் மாநகரை நோக்கி வந்தான் என்று கந்த புராணம் கூறினும், அவனுக்குத் தமிழ்நாட்டுக்கு வடக்கே அமைந்த திருத்தணி முதல் தெற்கே திருச்செந்தூர் வரையில் தான் எண்ணற்ற கோயில்கள் உள்ளன. அவற்றுள் சிறந்த வற்றை ஆறுபடை வீடுகள் எனப் பாடுவர் அறிஞர். 'குன்றுதோறாடலில்' எல்லா மலைகளும் அடங்கும். கடைச் சங்கத் தலைவர் நக்கீரர் திருமுருகாற்றுப்படை என்ற நூலில் ஆறுபடை வீடுகளைப் பற்றியே பாடுகிறார். திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், திரு ஆவினன்குடி, (பழநி அடிவாரம்) திருஏரகம் (சுவாமிமலை—சிலர் மலை நாட்டில் உள்ள ஒரு தலம் என்பர்) குன்று தோறாடல், பழமுதிர் சோலை (மாலிருஞ்சோலை, அழகர் கோயில்) என்பனவே அந்த ஆறும். இதில் ஐந்தாவதாக வரும் 'குன்று தோறாடல்' என்ற தொடர் முருகன் தங்கிய மலைகள் அனைத்தையுமே குறிக்கும். 'ஊர் ஊர் கொண்ட சீர் பெறு விழாவில்' முருகனை வழிபட்டனர் என்பர் நக்கீரர். 'காடும் காவும்

கவின்பெறு துருத்தியும், ஆறும் குளமும் வேறுபல வைப்பும் சதுக்கமும் சந்தியும் புதுப்பூம் கடம்பும், மன்றமும் பொதியி னும் கந்துடை நிலையினும்' முருகனை மக்கள் வழிபட்டனர் என்பர். அகப்பொருளில் வரும் வேலன் வெறியாடலும் முருகனைப் பற்றியது. மரநிழலில் வேலை நட்டு வழிபடும் வழக்கமும் உண்டு. எனவே மிகப் பழைமையான முருகன் வழிபாடு, முதலில் மலையிலே அமைந்த போதிலும் பின் யாண்டும் நிலவ, எல்லாராலும் எங்கும் நன்கு வழிபடு நிலையில் அமைந்துள்ளது எனக் காண்கிறோம்.

முருகனுக்குப் பலபெயர்கள் உள. ஆறுமுகன், கந்தன், குமரன், குமரவேள், சாமி, செவ்வேள், சேந்தன், மயிலூர்தி மைந்தன் போன்ற பல பெயர்கள் உடையவன் முருகன். 'முருகன்' என்ற பெயர் முருகு அல்லது அழகு என்ற பொருளின் அடிப்படையில் அமைந்தமை போன்றே, எல்லாப் பெயர்களும் அவனுக்குக் காரணப் பெயர்களாகவே அமை கின்றன. இம்முருகனுக்கு வாகனம் மயில். சூரன் மாமரமாக நிற்க அவனை வேல் கொண்டு பிளந்தான் முருகன். ஒரு பகுதி மயிலாகவும் மற்றொன்று சேவலாகவும் ஆர்த்தெழுந்து வர, அவற்றின் ஆணவம் அடக்கி, சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் கொண்டான், அதற்குமுன் ஆட்டுக்கிடா அவனுக்கு வாகனமாக அமைந்தது என்பர்.

முருகன் ஆறுநாள் போரிட்டு ஆறாம் நாளாகிய சஷ்டியில் சூரனை ஆணவம் கெடுத்து வாகனமாகவும் கொடியாகவும் கொண்ட அந்த நாளையே 'சஷ்டி' விரத நாளாகக் கொள்வர். ஆண்டுதோறும் ஐப்பசியில் அமாவாசை முதல் ஆறு நாட் களில் அவ்விழா கோயில் தொறும் நடைபெறும் விழா வாகவும், மக்கள் அனைவரும் போற்றும் விரத நாட்களாகவும் அமைகின்றது. அப்படியே சரவணப் பொய்கையில் பாலூட்டி வளர்ந்த 'கார்த்திகை'ப் பெண்களைப் போற்றும்

வகையில் மாதந்தொறும் அக்கார்த்திகை நாளை முருகன் நாளாகக் கொண்டு மக்கள் விரதமிருக்க, கோயில் தொறும் விழாவும் நடைபெறுகின்றது. இம்முருகன் பிறந்த வைகாசி விசாகத்தே பல கோயில்களில், சிறப்பாகத் திருச்செந்தூரில் பெருவிழா இன்றும் நடைபெறுகின்றது. இவ்வாறு கந்த புராண சுப்பிரமணியனும் தமிழ்க்கடவுள் முருகனும் ஒன்றாக இணைய, தமிழகமே அவனுக்கு எங்கும் கோயில் அமைத்துப் பல விழாக்கள் கொண்டாடுகின்றது. முருகன் இளையனாக வழிபடத் தண்டாயுதபாணியாகிறான்.

முருகனுக்குத் தமிழ் நாட்டிலேதான் கோயில் அதிகம். ஆயினும் தற்காலத்தில் தமிழர்கள் சென்று வாழும் தில்லி போன்ற நகரங்களில் அவர்கள் முருகன் கோயிலை அமைத்து வழிபடுகின்றனர். அப்படியே தமிழ் நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்குச் சென்று வாழ்வோர் அங்கங்கே முருகன் கோயிலை அமைத்துள்ளனர். பாரிஸ் நகரிலும் இலண்டனி லும் அமெரிக்காவில் சில ஊர்களிலும் முருகன் கோயில்கள் உள்ளன. கீழை நாடுகளில் தமிழர் பெரும்பாலராக வாழும் மலேயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அதிகமாகவும் பிற விடங்களில் அருகியும் முருகன் கோயிலும் முருகன் சிலைகளும் (சிவன் கோயில்களில்) உள்ளன. இலங்கையிலும் முருகனுக்குப் பல கோயில்கள் உள்ளன. இவ்வாறு தமிழர் வாழும் இடங் களிலெல்லாம் முருகன் கோயில் உள்ளமையால் முருகன் தமிழ்க் கடவுள் என்பது தேற்றமாகிறது.

முருகனைப் பற்றிக் கந்தபுராணம் மட்டுமன்றி வேறு எத்தனையோ இலக்கியங்கள் உள்ளன. முருகன் அழகனாக வும் இளையனாகவும் உள்ளமையின் அவனைப் பற்றிய பிள்ளைத் தமிழே அதிகம் எனலாம். இராமலிங்க அடிகளார் தம் ஆறுதிருமுறைகளில் ஐந்தாம் திருமுறை முற்றும் தணிகை முருகனைப் பற்றியதே. சங்க இலக்கியங்களில்

முருகன் பேசப் பெறுவதோடு, தேவாரம் போன்ற பிற்கால இலக்கியங்களிலும் முருகன் இடம் பெற்றுள்ளான். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அருணகிரிநாதர் சந்தத் திருப்புகழ் பல்லாயிரத்தால் முருகனைப் பாடியுள்ளார். அது 'திருப்புகழ்' என்றே போற்றப்பட்டு, பலராலும் பாராயணம் செய்யப் பெறுகின்றது. பின் வந்த தேவராயப் பிள்ளை பாடிய கந்த சஷ்டி கவசமும், குமர குருபரர் பாடிய கந்தர் கலிவெண்பாவும் சங்க கால நக்கீரர்தம் திருமுருகாற்றுப் படையும் பாராயண நூல்களாகப் போற்றப் பெறுகின்றன. இன்றும் எத்தனையோ அடியவர்கள் புத்தம் புதிய பாடல் களை அந்தாதியாக, கோவையாக, கலம்பகமாக, பிள்ளைத் தமிழாகப் பாடிப் பரவுகின்றனர். திருச்செந்தூர் போன்ற தலங்களில் இந்துக்கள் மட்டுமன்றிப் பிற சமயத்தவர்களும் முருகனுக்குக் காணிக்கை செலுத்தி வழிபடுவதை இன்றும் காணலாம். முருகனை அன்றி அவன் மயிலையும் வேலையும் கூடப் பாடுபவர் உளர்.

எனவே சங்க காலத்துக்கு முன்பிருந்து இன்று வரையில் தமிழ் நாட்டுத் தெய்வமாக, அதே வேளையில், கந்த புராண சுப்பிரமணியனாக மக்களால்—சிறப்பாகத் தமிழ் மக்களால் போற்றப் பெறும் முருகன் வரந்தரு தெய்வமாக—வாழ் வளிக்கும் தெய்வமாக—பலர் பாடுவது போன்ற கண்கண்ட தெய்வமாக—கலியுக வரதனாக விளங்குகிறான்—விளங்கு வான் என்பது தெளிந்த உண்மையாகும்.

# திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

காலம் :

தமிழ்நாட்டில், சங்ககாலத்துக்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுள் முக்கியமானது சமய மாறுபாடு. கி. பி. மூன்று நான்காம் நூற்றாண்டுகளில் பௌத்தம் தலை தூக்கி நிற்க, ஐந்து ஆறாம் நூற்றாண்டிலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சமணம் தழைத்தோங்கி நின்றது. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்கே பாண்டியனும் வடக்கே பல்லவனும் சமணம் போற்றும் பெருமன்னராகி, தாமே அச்சமயத்தைச் சார்ந்தவராக நின்றனர். அந்த வேளையில்தான் அப்பர் என்னும் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தமிழ்நாட்டில் தோன்றினர். அவர்கள் வழியே தமிழ்நாட்டில் மீண்டும் சைவசமயம் தழைத்தது என்பது வரலாறு.

இவர் வரலாற்றைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் 1256 பாடல்களால் விளக்கியுள்ளார். அறுபத்து மூன்று நாயன்மாரைப் பாடும் (தொகை அடியாருடன் 72) பெரிய புராணம் முழுவதுமே 4286 பாடல்களாக அமைய இவர் வரலாற்றுக்கு மட்டும் சேக்கிழார் இத்தனைப் பாடல்கள் ஒதுக்கி உள்ளமை இவர்தம் ஏற்றத்தை விளக்குவதாகும், இவரது வரலாறு பெரியபுராணத்துள் இரண்டாம் காண்டத்துள் ஆறாவது. 'வம்பறா வரிவண்டுச்' சருக்கத்தின் முதல் வரலாறாக அமைகின்றது.

வரலாறு :

திருஞானசம்பந்தர் சோழ நாட்டிலே (தஞ்சை மாவட்டம்) சீர்காழியிலே அந்தணர் குலத்திலே சிவபாத இருதயருக்கும், பகவதி அம்மையாருக்கும் மகனாய்த் தோன்றினர். 'பிள்ளையார்' என்பது பிள்ளைத் திருநாமம் என்பர். இவரை முருகனது அவதாரம் என்றே கூறுவர்.

இவரது மூன்றாம் வயதில், திருக்கோயிலுக்குச் சென்ற தந்தையாருடன் தானும் சென்றார். இவரைக் குளக்கரையில் இருத்தி, தந்தையார் நீருள் மூழ்கி நெடுநேரம் வெளிவராமையால், இவர் அழுது நிற்க, இறைவன் உமை அம்மையாருடன் தோன்றி, அவர்தம் பாலுடன் சிவஞானத்தையும் குழைத்து ஊட்டி மறைந்தனர் என்பர். ஞானப்பால் உண்ட உடனே சம்பந்தர் பெற்ற தெய்வப் பெரு நிலையைச் சேக்கிழார்,

**'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்'**
(70)

எனச் சிறப்பிக்கின்றார். பின் தந்தையார் வெளிவந்து, பிள்ளை வாயில் பால் ஒழுகவும் கையில் பொற்கிண்ணமும் கண்டு, 'யார் பால் ஊட்டியவர்?' என அதட்டிக் கேட்டனர். உடனே சிவஞானம் வரப்பெற்றமையால், 'தோடுடைய செவியன்' என்ற பதிகத்தைப் பாடி 'பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே' பால் ஊட்டியவர் என உள் கோபுரத்தைக் காட்டி அறிவிக்க, இறையருள் நினைந்து, இவருக்குத் 'திருஞான சம்பந்தர்' எனப் பெயர் சூட்டினர். பின் இவர்தம் பெருமை நாடு முழுவதும் பரவலாயிற்று. இச்செயலைத் தம் தேவாரத்திலேயே சம்பந்தர் 'போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்' (3-24.2) எனக் குறிக்கிறார்.

பின், அந்த இளமையிலே தன் தந்தையார் தோளில் அமர்ந்து அருகிலே உள்ள பல தலங்களைத் தரிசித்தார். இறைவனிடமிருந்து பொற்றாளம், பொற்சிவிகை, முத்துக் குடை, முத்துப்பந்தர் போன்றவற்றைப் பெற்று, இளமையில்

தளர்ச்சி இன்றிப் பல தலங்களைத் தரிசித்தார். இறைவனிடம் பொருள் பெற்றுத் தந்தையின் யாகத்துக்கு உதவினார். அருட்பாடல் பாடி அடியவர் தம் விடநோயை நீக்கினார். தமிழ்நாடு முழுவதும் உள்ள சிவத்தலங்களைத் தரிசித்தார். இவர் காலத்து வாழ்ந்த அடியவர் பலர். அவருள் மிக முக்கியமானவர்கள் திருநாவுக்கரசரும் சிறுத்தொண்டரும் திருநீலகண்ட யாழ்ப்பாணருமாவர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தாழ்வாக எண்ணப்பெறும் பாணர் குலத்துப் பிறந்தவராயினும், சம்பந்தர் அவருடனேயே எல்லாத் தலங்களுக்கும் சென்றார். இவர் பதிகம் பாட, அவர் அதை யாழில் இசைப்பார். அதை அறிந்த பாணனார் சுற்றத்தார் பெருமையுற, அவர்தம் ஊராகிய தருமபுரத்திலேயே யாழில் அடங்காத 'யாழ்முறி'ப் பாடலைப் பாடினார். திருமருகலில் ஒரு பெண்ணை மணம் புரிய இருந்த கணவன் பாம்புக் கடியால் இறக்க பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தார். திருவீழிமிழலையில் திருநாவுக்கரசருடன் தங்கிய போது பஞ்சம் உண்டாக, இறைவனிடம் காசுபெற, தம் காசு வாசி பெற வேண்டிய நிலையில் அமைய, 'வாசி தீரவே காசு நல்குவீர்' என்று பாடி வாசி நீங்கப் பெற்றார். திருமறைக்காடு எனும் வேதாரணியத்தில் இவரால் 'அப்பர்' என அழைக்கப் பெற்ற திருநாவுக்கரசர், வேதத்தால் மூடப் பட்டுக் கிடந்த கதவினைத் திறக்கப் பாட, இவர் மூடப் பாடினார்.

பின் பாண்டிய நாட்டில் கூன் பாண்டியனும் அவன் மக்களும் சமண நெறி நிற்க, அவன் துணைவியாராகிய சோழர் மகளாம் மங்கையர்க்கரசியார் சைவ நெறி நின்று சம்பந்தரை அங்கே அழைத்தனர். அமைச்சர் குலச்சிறையாரும் பிற சைவர்களும் இவரை வரவேற்றனர். இவரும் அங்கே சென்று சமணருடன் அனல் வாதம், புனல் வாதம் ஆகியவற்றில் வென்று, பாண்டியனின் வெப்பு 'நோயினைப்

போக்கி, கூனையும் நிமிர்த்தி 'நீன்றசீர் நெடுமாறனாக்கி' பாண்டியநாடு முழுவதையும் சைவ நெறிக்கு மாற்றி அமைத்தார்.

பின் வடக்கே தொண்டை நாட்டுத் தலங்கள் பலவற்றைத் தரிசித்து. காளத்திவரையில் சென்று, அங்கிருந்தபடியே கயிலாயம், கேதாரம். கோகர்ணம், இந்திர நீலபருப்பதம், பருப்பதம், அநேகதங்காபதம் ஆகிய வடநாட்டுத் தலங்களையும் பாடி, திரும்பவும் பலவிடங்களில் இறைவனை வழிபட்டுத் திருஒற்றியூர் அடைந்தார். பின் திருமயிலை சென்று சிவநேசர் மகளார்—பூம்பாவையை — எலும்பாக இருந்த குடத்தை முன் வைத்து, 'மட்டிட்ட புன்னையங்கானல்' என்ற பதிகம்பாடி, இறைவனின் பலவிழாக்களைக் காணாதே 'போதியோ பூம்பாவாய்' என விளித்து எழுப்பித் தந்தனர்.

பின் பல தலங்களைத் தரிசித்து, தம் ஊர் சீர்காழியினை அடைய, அப்போது அவருக்கு வயது பதினாறு ஆயிற்று, எனவே தந்தையார் மணமுடிக்க நினைத்து ஏற்பாடு செய்ய. திருநல்லூர் நம்பியாண்டார் நம்பியின் திருமகளை மணக்க இசைந்தார். மணநாளில் அவ்வூர்த் திருக்கோயிலிலே வந்திருந்த அடியார்களுடனே இறைவன் அருட்சோதியில் வைகாசி மூலத்தில் ஒன்றிக் கலந்து உயர்நிலையுற்றார். 'தீதகற்ற வந்த திருஞான சம்பந்தர்'. இவர் சோதியுட்புக்க நிலையினைச் சேக்கிழார்

> 'காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலம் செய்தருளித்
> தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
> நாதனெழில் வளர்சோதி நண்ணிஅதன் உட்புகுவார்
> போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்'
>
> (2531)

எனக் காட்டுவர்.

பாடல்கள் : (முதல் மூன்று திருமுறைகள்)

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப்பதிகங்கள், சைவத் திருமுறை பன்னிரண்டில் முதல் மூன்று திருமுறைகளாகப் போற்றப் பெறுகின்றன. அவற்றுள் முதல் பாடல் இவர் பாலுண்டு பாடிய 'தோடுடைய செவியன்' என்பதாகும். இவர் பதினாறாயிரம் பதிகங்கள் பாடினார் என நம்பியாண்டார் நம்பி கூறினும் தற்போது உள்ளவை முன்னூற்று எண்பத்து நான்கு பதிகங்களேயாகும். தேவாரத் தொகுதியிலே இவர் பாடல்களே அதிகம் உள்ளன. இவர்தம் பாடல்களில் இவர்தம் வாழ்வு பற்றிய அகச்சான்றுகள் பல உள்ளன. மற்றும் இவர் இறையருளை அகத்துறைப் பாடலாகவும் அமைத்துக் காட்டியுள்ளார். அவற்றுள் 'சிறையாரும் மடக்கிளியே' என்பது (1-60-10) சிறந்ததாகப் போற்றப் பெறுகின்றது. இவர்தம் பதிகங்கள் பதினொரு பாடல்களாகவே அமைகின்றன, கடைசிப் பாடல் திருக்கடைக் காப்பாகி நிற்க, அதில் தன்னைப் பற்றிக் கூறி, அப்பதிகம் ஓதுவதால் உண்டாகும் பயனையும் சுட்டுவர். மேலும் எட்டு, ஒன்பது, பத்து ஆகிய பாடல்களில் முறையே இராவணன், திருமால் பிரம்மன் அடிமுடி தேடியநிலை, சமண சாக்கியர் பற்றிய குறிப்புகள் காணப்பெறுவது தனிச் சிறப்பாகும். மற்றும் தாளச் சதி, யாழ் முறி, கோமூத்தரி, மாலை மாற்று, ஏழு கூற்றிருக்கை, ஏகபாதம், நாலடி மேல் வைப்பு, திருமுக்கால் ஈரடி, திருவிருக்குறள் போன்றவற்றையும்—அக்காலத்தில் பிறர் பாடாத வகையில் பாடியுள்ளார். மேலும் பல்வேறு வகைப் பண்களிலே இவர்தம் பாடல்கள் அமைந்துள்ளன. இவர்தம் பாடல்களில் இயற்கை வருணனைகள் மிக்கிருப்பதைக் காணலாம்.

'வரைசேரும் முகில் முழவ மயில்கள் பல
நடமாட வண்டு பாட
விரைசேர் பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலை யாமே' (1,132-4)

என்ற ஒரு சான்று போது மென்றமைகின்றேன்.

இவர்தம் பாடல்வழி இறைவனைப் பற்றிய பல்வேறு பண்புகளையும் அருளிச் செயல்களையும் அறிந்து கொள்வதோடு, அக்காலத்தில் திருக்கோயில்களில் முழங்கிய பல்வேறு வாத்தியங்கள் பற்றியும் வழிபாட்டு முறை பற்றியும், சமுதாய வழக்காறுகள் பற்றியும் பிறபற்றியும் அறிந்து கொள்ளலாம். இவர்தம் தேவாரத்தினைச் சமயநூல் என்று சொல்லுவதோடு, சைவ சித்தாந்த சாத்திரங்களின் நுட்பங்களை விளக்குவதால் சாத்திர நூலெனவும் கொள்ளலாம். மேலும் கி. பி. ஆறாம், ஏழாம் நூற்றாண்டின் தமிழ்நாட்டு நிலையினை அறிந்து கொள்ள இவர்தம் பாடல்கள் பயன் படுவதால் இதை வரலாற்று நூல் எனினும் மிகையாகாது.

### அறியப்பெறுவன

இவர் பாடல் வழியே இவர் காலத்தில் வாழ்ந்த பிற நாயன்மார்கள் பற்றியும் அறியலாம். சிவபெருமான், உமையம்மையார் தவிர்த்து பிற தெய்வங்களைப் பற்றியும் அறியலாம். விநாயகரை இவர்தம் 'பிடியதனுரு உமைகொள' என்ற பாடல் வழியே (1.123-5) முதல் முதல் தமிழில் பாடினார் என்பர். இவர் காலத்துப் பல்லவர் சேனாதிபதியாக வாழ்ந்த சிறுத்தொண்டர், சாளுக்கிய புலிகேசியை (II) வென்று, வாதாபியைக் கைக் கொண்ட போது, அங்கிருந்து விநாயகரைக் கொண்டு வந்து தம் ஊராகிய திருச்செங்காட்டங்குடியில் நிறுவினார் என்றும் அதனாலே அக்கோயில் கணபதீச்சரம் எனப் பெயர் பெற்றதென்றும் அறிகிறோம்.

எனவே அக்காலத்தில் சம்பந்தர்தான் முதல் முதல் விநாயகர் பற்றித் தம் தேவாரத்தில் குறிப்பிட்டார் என்பது பொருந்தும்.

சம்பந்தர் காலத்தில் செந்தமிழில் திருக்கோயிலில் வழி பாடு நடந்ததென்றும் (3-80-4) அனைவரும் மலர் தூவி இறைவனை வழிப்பட்டனர் என்றும் (3-79-2, 1-32-2, 1-64-5, 1-85-1) பல்வேறு வகைப்பட்ட வண்ணப்பாடுகளும் சுண்ண வேலைகளும் திருக்கோயில்களில் சிறந்திருந்தன என்றும், பல்வேறு விழாக்கள் திங்கள்தோறும் நடைபெற்றன என்றும் அவர்தம் பாடல் வழி அறிகிறோம். இக்காலத்தில் வழக்கிழந்த பல அரிய சொற்களும் இலக்கண வழக்குகளும் இவர்தம் பாடல்களில் உள்ளன. இவர்தம் பாடல்களில், தமிழ்நாதன் ஞானசம்பந்தன் (3-39-11) தமிழ் ஞான சம்பந்தன் (1-15-11) (1-131-11) கலை ஞான சம்பந்தன் (1-16-11) திருநெறிய தமிழ் (1-1-11) ஞான சம்பந்தன் செந் தமிழ் (1-135-11) தமிழ்க் கிளவி பத்தும் (2-31-11) தமிழ் மாலை பத்தும் (2-35-11) செந்தமிழ் மாலை (2-48-11) குற்றமில் செந்தமிழ் (1-113-11) குன்றாத் தமிழ் (1-18-11) என்று வரும் தொடர்கள் இவர் தம்மைத் தமிழ் விரகராய்—கலைவல்லவராய்க் காட்டுவதோடு, இவர்தம் பாடல்களும் நல்லதமிழ்ப் பாடல்கள் என நமக்கு அறிமுகம் செய்து வைக் கின்றன.

திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதும் பெரும் சமயப் புரட்சி செய்தவர் என்பதும் இறை யருளால் பல அற்புதங்கள் நிகழ்த்தியவர் என்பதும் அக்காலக் கோவில் அமைப்பு, வழிபாட்டுமுறை, வாத்திய ஒலி, பிறவகை முறைகள் இவற்றைத் தம் பாடல் வழிப் படமெடுத்துக் காட்டியவர் என்பதும். அக்காலச் சமுதாய வாழ்வைச் சித்தரித்தவர் என்பதும் அக்காலத் தமிழக

வரலாற்றை அறிய இவர்தம் பாடல்கள் மிகவும் பயன்படு கின்றன என்பதும் அறியக் கிடக்கின்றன.

(இவ்வரலாற்றுக்குச் சென்னை, சைவ சித்தாந்த சமாசம் 1937ஆம் ஆண்டின்; வெளியிட்ட 'திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரப் பாடல்' என்ற நூலே துணை நின்றது. இதில் குறிக்கப்பெறும் திருமுறை, பதிகம் பாடல் எண்கள் அப்பதிப்பை ஒட்டியனவே).

# திருக்கோவையார்

'**கோ**வை' என்பது அகப்பொருள் பற்றிய நூல். பல பொருள் பற்றிய கருத்துக்களை இணைத்துச் செய்யப்பெறும் நூல்கள்—ஆசாரக் கோவை, மும்மணிக் கோவை போன்ற நூல்கள் பல இருப்பினும், 'கோவை' என்று தனியாகக் கூறும் போது இச்சொல் அகப்பொருள் பற்றிய நூல் ஒன்றையே குறிக்கும். சங்க காலத்துக்குப் பின் தமிழில் பல்வேறு வகைப் பட்ட சிற்றிலக்கியங்கள் தோன்றின. அவற்றைத் தொண் ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் எனப் பிரித்தனர். அவற்றுள் கோவை என்பதும் ஒன்று. திருக்கோவையாரும் இந்தப் பிரிவில் அடங்கும். இதற்குத் 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்றும் பெயர் உண்டு. பிற கோவைகளெல்லாம் பாட்டுடைத் தலைவன் பெயரொடு இணைந்தோ வேறு பெயர்களொடு இணைந்தோ நின்று 'கோவை' யாகக் கூறப் பெறினும், இந்நூல் மட்டும் இதன் தொன்மையும் சிறப்பும் கருதி 'திரு' என்ற அடை மொழி ஒன்றுடனே நின்று, 'திருக் கோவையார்' என்ற சிறப்புப் பெயரொடு 'ஆர்' விகுதி பெற்றும் போற்றப் பெறுகின்றது.

இத் திருக்கோவையாரை இயற்றியவர் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று இறைவன் கட்டளையிட, அவர் மொழிப்படி இத் திருக்கோவையாரை மாணிக்கவாசகர் பாடினர் என்பர். இவர் தம் திருவாசகத்தே அமைந்த 'திருவெம்பாவை' என்ற பாவையும் பிறவும் இவர் தம்மைத் தலைவியாகக் கொண்டு, தலைவனாம் இறைவனை எண்ணிப் பாடியனவாக அமைகின்றன. அதை ஒட்டியே, முழு நூலாக இதைப் பாட வேண்டும் என இறைவன் ஆணையிட்டனர் போலும்.

மாணிக்கவாசகர் காலம் பற்றி இருவேறு கருத்துக்கள் உள்ளன. எனவே இந்நூலின் காலம் பற்றியும் அக்கருத்துக்களைக் காண வேண்டியுள்ளது. இவர் சங்க காலத்துக்குப் பின்னும் தேவாரம் பாடிய மூவருக்கு முன்னும் மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனவும் மூவருக்கும் பிற்பட்டவர் எனவும் இருவேறு கருத்துக்கள் உள்ளன. எனினும் முன்னதே ஏற்புடைத்தாகும் என்பது ஆய்வாளர் முடிவு.

இக்கோவையாரில் 306, 327ஆம் பாடல்களில் வரகுணன் பற்றிய குறிப்பு வருவதால், பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியன் வரகுணனை இது குறிக்கும் என்றும் எனவே இவர் மூவருக்குப் பின் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கூறுவர். மேலும் பாமுறையாலும் பிற தொடர்களாலும் இக்கொள்கையினை வலியுறுத்துவர். எனினும் ஆய்ந்து நோக்கின் மூவருக்கு முந்தியும் சங்க காலத்துக்குப் பிந்தியும் தமிழக வரலாற்றில் குறிக்கப்பெறும் இருண்ட காலத்தில் காரைக்காலம்மையார், கோச்செங்கட் சோழர் போன்றார் வாழ்ந்த காலத்தை ஒட்டி வாழ்ந்தவர் என்பது வலியுறுத்தப்பெறும். அந்த இருண்ட காலத்தில் 'வரகுணன்' என்று ஒருவன் வாழ்ந்திருக்க மாட்டான் என்று எப்படிச்

சொல்ல முடியும்? அக்காலத்தில் எண்ண முடியாத எத்தனையோ மாறுபாடுகள் நிகழ்ந்துள்ளன. சங்ககால இலக்கிய அமைப்புக்கும் பின் தெளிந்த தேவார காலத்து இலக்கிய அமைப்புக்கும் பெரும் வேறுபாடுகள் உள்ளன. எனவே மாணிக்கவாசகர் தம் பாவகைகள் அந்த இருண்ட கால இலக்கிய மாற்றத்தால் அமைந்தவை எனக் கொள்ள லாம். மேலும் மணிவாசகர் புத்தரை வாதில் வென்றவர் எனப் பெறுவதாலும் மகாவம்சம் இதைக் குறிப்பதாலும்[1] தமிழகத்தே புத்த சமயம் தழைத்தோங்கிய கி. பி. மூன்று நான்காம் நூற்றாண்டில் இவர் வாழ்ந்தார் என்பது பொருந்தும். மலையாளச் செப்புப்பட்டயம் ஒன்றும் மூன்றாம் நூற்றாண்டில் இவர் இந்தியக் கிறித்தவரைச் சைவ ராக்கினார் என்றும் குறிப்பிடுகிறது.[2] எனவே மணிவாசகர் கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டினர் என்பது உறுதி செய்யப் பெறுகின்றமையின் இத்திருக்கோவையாரும் அக்காலத்தியதே யாகும்.

சிலர் மாணிக்கவாசகர் இத்திருக்கோவையாரை இயற்ற வில்லை எனவும் சிவபாத்தியர் என்ற ஒருவர் எழுதினார் என்றும் கூறுவர். ஆயினும் அவர்தம் கூற்றுக்கு ஆதாரம் இல்லை. மேலும் திருக்கோவையாரில் வரும் தில்லைக் கூத்தனைப் பற்றிய பல தொடர்கள் திருவாசகத்தை நமக்கு நினைவூட்டுகின்றன. வேறு அடைமொழி இன்றி 'திரு' ஒன்றி னாலேயே இரண்டும் குறிக்கப் பெறுவதும் எண்ணத் தக்கது. மற்றும் திருவாசகத்தில் குறிக்கப்பெறும் பல முக்கிய தலங்கள் இதிலும் குறிக்கப் பெறுகின்றன. கழுக்கன்று (170) குற்றாலம் (94,135) ஈங்கோய்மலை (113) திருப்பனையூர் (137) பரங் குன்று (144, 178, 279, 292) இடைமருது, ஏகம்பம், வாஞ்சியம் (268) திருப்பூவணம் (300, 338) ஆகிய தலங்கள் இத்திருச்சிற்

1, 2. சமாச வெளியீடு-4 (1932) 8, 9ஆம் திருமுறை பக்கம் 8,

றம்பலக்கோவையில் குறிக்கப் பெறுகின்றன. எனவே இதை மணிவாசகர் இயற்றினார் எனக் கொள்ளலே பொருந்தும், இந்நூல் சைவத் திருமுறைகளுள் எட்டாம் திருமுறையில் திருவாசகத்தொடு இணைக்கப் பெற்று உள்ளமை இக்கருத்தினை உறுதியாக்கும்.

இனி, இப்பாவை பாவமைப்பில் பிறவற்றொடு ஒன்றாக இருப்பினும் பின் வந்த பல பாவைகளிலும் வேறுபட்டுள்ளதைக் காணலாம். வைப்பு முறையிலும் துறை அமைப்பிலும் இது வேறுபட்டுள்ளது. இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப் பாடு, பாங்கற்கூட்டம் என்ற நிலைமாறி இடந்தலைப்பாடு பின் வருகின்றது; அதுவும் ஒரே பாட்டுடன் முடிகின்றது. வண்டோச்சி மருங்கணையும் துறையும் நாணிக்கண் புதைத்தலும் பாங்கர்க் கூட்டத்தில் உள்ளது. தழைமறுத்தலுக்குப் பல துறைகள் (91-104) உள்ளன. சிலதுறைகளின் பெயர்கள் மாறுபட்டுள்ளன. இன்றும் பலவகையிலும் வேறுபாடுகள் காணலாம். இந்நூல் முதல் வந்த காரணத்தாலே பின்வந்த இலக்கண இலக்கிய அமைதிகளுக்குச் சற்று மாறுபடுவது இயற்கையே.

இத்திருக்கோவையார் வெறும் காமநூல் அன்று எனவும் கற்போர் உளத்துக்கு ஏற்ப, இதுவே வேதமாகவும், சிவாகம மாகவும், இலக்கண நூலாகவும், இலக்கிய நூலாகவும் அமையும் எனவும் பின்வந்த ஒரு பாடல் நமக்கு உணர்த்து கிறது. எனவே திருவாசகத்தைப் போன்றே இதுவும் திருவுடை நூலாகும். இதுதான் அப்பாடல்.

**'ஆரணங்காண் என்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்**
**காரணங்காண் என்பர், காமுகர் காம நன்னூலதென்பர்;**
**ஏரணங்காண் என்பர் எண்ணர்;**
**எழுத்தென்பர் இன்புலவோர்**
**சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே!**

# பெரிய புராணம்

பெரிய புராணம் சைவ அடியவர்தம் வரலாற்றை விளக்கும் பாநூல். தனி அடியார் அறுபத்துமூவர், தொகை அடியார் ஒன்பதின்மர் ஆக எழுபத்திரண்டு அடியார்கள் வரலாறுகள் இதில் அடங்கியுள்ளன. இதைப் பாடியவர் தொண்டைநாட்டுக் (செங்கற்பட்டு மாவட்டம்) குன்றத்தூரில் பிறந்து, சோழன் அனபாயன் அமைச்சராக இருந்த சேக்கிழார் என்பவர். இறைவனுடைய தொண்டர்கள் பற்றிய வரலாறு ஆதலால், இதற்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்ற பெயரும் உண்டு. இதற்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'மாக்கதை' என்பதாகும்' 'எடுக்கு மாக்கதை' என (பாயிரம் 3) அவரே இதற்குப் பெயரிட்டுள்ளார். அதுவே பின் விரிவடைந்து விளங்கும் வகையில் 'பெரிய புராணம்' ஆயிற்று எனக் கொள்ளலாம்.

இப்பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழார் பதினோராம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தார் என்றும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தார் என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன. எனினும் திருத் தொண்டர் பாடல்களாலும் (பாயிரம் 8, சண்டேச்சுர நாயனார் 8 புகழ்ச்சோழர் 8) கல்வெட்டுக்களாலும் தில்லை அம்பலத்துக்குப் பொன்வேய்ந்த சோழன் இரண்டாம் குலோத்துங்கன் என அறியப்பெறுதலாலும் அவனே அனபாயன் என அழைக்கப் பெற்றமைக்குச் சான்றுகள் உள்ளமையாலும் அவன் காலமாகிய (1113—1150) பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேக்கிழார் வாழ்ந்தார் எனக் கொள்ளல் பொருத்தம் என்பது ஆய்வாளர் முடிவு.

சோழன் அனபாயன் நந்த சைவனாயினும், அக் காலத்தில் பெரிய சைவ இலக்கியம் (தேவாரம் போன்ற தோத்திரப் பாடல்கள் தவிர்த்து) இன்மையால், சைன

இலக்கியமாகிய சீவக சிந்தாமணியில் ஈடுபாடு கொண்டிருந் தான். சேக்கிழார் அவனுக்கு அடியவர் பெருமையை விளக்கிச் சொல்ல, அரசன் அதைக் காவியமாக்கித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். இவரும் தில்லையில் உள்ள கூத்தப் பெருமான் முன் நின்று பாடத் தொடங்க அருள் வேண்ட, இறைவனே 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுத்தார் என்பதும் பின் தொடர்ந்து இப்பெரு நூலை இவர் பாடி முடித்தார் என்பதும் வரலாறு. நிறை வுற்றபின் சோழமன்னன் தில்லை வந்து சிறந்த வகையில் அரங்கேற்றி இந்நூலை, தான் போற்றியதோடன்றி, உலகறியச் செய்தான். பின்னர் இப்பெரு நூல் சைவ இலக்கிய வரிசையில் பன்னிரண்டாம் திருமுறையாக அமைக்கப்பெற்று, தேவாரம் திருவாசகம் போன்ற நல்ல தோத்திர இலக்கியங்களோடு இணைந்து சைவ உலகில் சிறந்து போற்றப் பெறுகின்றது.

இந்நூல் இலக்கண மரபுப்படி சார்புநூல் என்பர். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர், திருவாரூரில் அடியவர் பெருமையினைத் 'திருத்தொண்டத் தொகை' யாகப் பாடினார். இதை முதலாகக் கொண்டு பின்வந்த திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி 'திருத்தொண்டர் திருவந்தாதி' என எண்பத்தொன்பது பாடல்கள் பாடி யுள்ளார். அதில் தனியடியார், தொகையடியார், பற்றிக் கூறி, பின் பதிகக் கவிகளின் முதல் குறிப்பு (திருத்தொண்டத் தொகை அடிப்படையில்) முதலியவற்றையும் குறித்துள்ளார். இதை வழிநூலாகவும் திருத்தொண்டத் தொகையினை முதல் நூலாகவும் (பாசுரம்) கொண்டு, சேக்கிழார் தம் பெரிய புராணத்தை இயற்றினார். எனவே இது சார்புநூல் எனப் பெறுகின்றது.

சேக்கிழார் இவற்றின் அடிப்படையில் தம் நூலைப் பன்னிரண்டு சருக்கங்களாக அமைத்து 4286 பாடல்களில் எழுதியுள்ளார். முதல் சருக்கமாகத் திருமலைச் சருக்கம் அமைய (கயிலை மலை நிகழ்ச்சி, நாட்டுவளம், நகர்வளம் திருத்தொண்டத்தொகை பாடியது வரை சுந்தரர்தம் தொடக்க வாழ்வு முதலியன), பின் பதினொரு சருக்கங்களை யும் சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையின் ஒவ்வொரு பாடலின் முதல் தொடரையே சருக்கப் பெயராக அமைத் துள்ளார். தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம் திருநின்ற சருக்கம், வம்பறாவரிவண்டுச் சருக்கம், வார்கொண்டவன முலையாள் சருக்கம், பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல்சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம். மன்னியசீர்ச் சருக்கம் என அவை அமைகின்றன. அவற்றுள் முன்னவை ஐந்தும் முதற் காண்டமாக அமைய, பின்னவை ஏழும் இரண்டாம் காண்ட மாக அமைகின்றன.

பெருங்காப்பியத்துக்கு ஒரு முக்கியத் தலைவன் இருக்க வேண்டுமாதலாலும் இந்நூலில் அவ்வாறாய தலைவன் இல்லாமல் பலர் வரலாறு கூறப்பெறுவதாலும் இது பெருங் காப்பியமாகாது என்பர் சிலர். சிலர் இறைவனே இதன் பாட்டுடைத் தலைவனாவன். எனவே இது பெருங் காப்பியமே என்பர். ஆயினும் இதில் பாட்டுடைத் தலைவர் சுந்தரமூர்த்தி நாயனார் என்பதும் அவர் வரலாறே நூல் முழுவதும் தொடர்ந்து வருவதென்பதும் அறியக்கிடக் கின்றது. சுந்தரர் திருநாவலூரில் பிறந்தவராயினும் பெரும் பாலும் பரவையாருடன் திருவாரூரில் வாழ்ந்தவராதலாலும் இந்நூலுக்கு மூலகாரணமாகிய திருத்தொண்டத் தொகை இத்திருவாரூர்தேவாசிரிய மண்டபத்தை அடுத்தே தோன்றிய தாதலாலும் இந்த ஊரும் இந்த நாடுமே 'காப்பியத்தின்

இலக்கண மரபிற்கு ஏற்ப திருநகரச் சிறப்பு. நாட்டுச்சிறப்பு எனக் காட்டப்பெற்றுள்ளன. பின் சுந்தரர் போற்றும் திருத் தொண்டர் பெருமை கூறப் பெற்று, அடுத்து சுந்தரர் வரலாறு தடுத்தாட்கொண்ட புராணத்தால் தொடங்கப் பெறுகின்றது. அவ்வரலாற்றில் அவர் திருவாரூரில் அடிய வரைப் பாடிய 'திருத்தொண்டத்தொகை' வரையில் எழுதி, பின் அவர் பாடிய நாயனார் பலர்தம் புகழைப் பாடுகின்றார். சேக்கிழார் (ஒவ்வொன்றும் தனித்தனியே புராணம் என்று அமைகின்றது) இங்கே திருத்தொண்டத் தொகைக்கும் இறைவன் 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடிஎடுத்துக் கொடுத்தமை எண்ணத் தக்கது. பின் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத் திலும், சேரமான் பெருமாள் நாயனார் புராணத்திலும், கடைசியில் சடையனார் இசை ஞானியார் என்று அவரைப் பெற்ற தாய் தந்தையரை நினைந்தும், இறுதியாக வெள்ளி யானைச் சருக்கத்திலும் அவர் வரலாற்றைக் கயிலாயம் சென்ற வரையில் காட்டி முடிக்கிறார். தொடக்கத்திலும் அவர் கயிலையிலிருந்து வந்து உலகில் பிறந்த காரணத்தையும் இருவரை மணக்க இருந்த நிலையினையும் திருமலைச் சருக்கம் என்ற முதல் சருக்கத்தில் காட்டுகிறார். எனவே தொடக்கமுதல் தொடர்ந்து இறுதி வரை இணைந்துநிற்கும் வரலாற்றின்படி சுந்தரரே இக்காப்பியத் தலைவராகின்றார். எனவே இது பெருங்காப்பியமாகும்.

சேக்கிழார் சோழப் பேரரசரின் சிறந்த அமைச்சராக இருந்த காரணத்தால், தம் வரலாறுகளில் வரும் அடியவர் கள் வாழ்ந்த—சென்ற இடங்கள் பலவற்றிற்கும் தாமே நேரில் சென்று பல செய்திகளைச் சேகரித்தார் என்பது அறியத்தக்கது. பல இடங்கள் பற்றிய விளக்கங்களும் வழித் துறைகளும் அவ்வழிகளிடையில் அமைந்த திருத்தலங்களும் அவற்றின் சிறப்புக்களும் அவர் நேராகக் கண்டு எழுதிய

மைக்குச் சான்று பகருவனவாம். இச்சேக்கிழார் வரலாற்றைப் பாடிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் இந்நூல் வந்த வரலாற்றையும் இதன் பெருமையையும் பலப்பல பாடல் களால் விளக்கிக் காட்டுகிறார். இந்நூல் ஓராண்டில் சித்திரைத் திங்களில் ஞானசம்பந்தர் ஞானப்பாலுண்ட திருவாதிரை நாளில் தொடங்கப்பெற்று, அடுத்த ஆண்டு அதே நாளில் முடிவுற்றது என்று குறித்துள்ளார் (சேக்கிழார் நாயனார் புராணம்௯80). இதன் புகழைப் பாடவந்த உமாபதி சிவனார்,

'கருங்கடலைக் கைநீத்துக் கொள எளிது முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை எண்ணி அள
விடலாம்
பெருங்கடல் மேல் வரும் திரையை
ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பெயர்த்துவிடலாகும்
தருங் கடலின் மீனை அளவிடலாகும் வானத்
தாரகையை அளவிடலாம் சங்கரன்தாள் தமது
சிரங்கொள் திருத் தொண்டர் புராணத்தை அளவிடநம்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே'
(சே. புரா-51)

என்று விளக்குகிறார். இதில் இறுதியில் உள்ள தேவர் என்பதை இருவகையில் விளங்க வைக்கிறார். தேவலோக வாசிகளாலும் முடியாது என்பதும், அனபாயன் போற்றிய சிந்தாமணியைப் பாடிய திருத்தக்க தேவராலும் முடியாது என்பதும் அமையப் பாடியுள்ளார். மேலும் இச்சேக்கிழார் புராணத்தின் வழியே தனி அடியார், தொகையார் எண், திருக்கூட்டவகை, பல்வேறு வகையில் இறையருள் உற்றவர் தொகை, இல்லறம், துறவறநெறி நின்றவர் என்ற பல வகை விளக்கங்களைத் தந்து, பெரியபுராணத்தை நன்கு அலசி ஆராய்ந்து ஒரு விளக்கமாகத் தம் நூலை யாத்துள்ளார்.

இவர்தம் புராணம் இல்லையாயின் பெரியபுராணத் தோற்றம் பற்றியும் பிற சிறப்பியல்பு, வரலாறு முதலியன பற்றியும் தெளிவாக அறிய முடியாது.

தமிழிலேயே முதல் முதல் மொழி பெயர்ப்பற்ற வகையில் விருத்தப்பாவில் விரிந்த நூல் செய்தமையால் சேக்கிழாரை 'நன்னூலாசிரியர்' என்றும் தேவாரம் முதலிய பாசுரங்களும் அவற்றுக்குரிய மூவர் வரலாற்றை விரித்துக் கூறும்போது உரைவிளக்கம் போலப் பாடியதால் 'உரையாசிரியன்' என்றும் இன்னும் பல வகையாலும் இந்நூலையும் ஆசிரியரையும் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாராட்டியுள்ளனர். மேலை நாட்டிலிருந்து வந்த போப்பாதிரியாரும் இவர் நூலைப் போற்றியுள்ளார். ஏறக் குறைய நூறு ஆண்டுகளுக்குமுன் இந்நூலைப் பதிப்பித்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் ஒவ்வொரு புராணத்துக்கும் சூசனம் எழுதியுள்ளார்கள். சூசனம் என்பது அந்தந்த வரலாற்றால் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மையும் போதனையும் கலந்த ஒன்றாகும். ஆயினும் முற்றும் எழுதுவதற்குள் நாவலர் மறைந்துவிட்டார். காரைக்கால் அம்மையார் புராணம் வகையிலேயே சூசனம் உள்ளது. எழுதியவற்றுள்ளும் சில திருத்தங்கள் செய்ய நினைத்திருந்தவர் முற்றும் எழுத முயன்றவர் இடையில் மறைய, சூசனம் இடையில் நின்று விட்டது. திரு.வி.க அவர்கள் இந்நூலுக்குக் குறிப்புரை ஒன்று எழுதி வெளியிட்டுள்ளனர். கோவை சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவர்கள் விரிந்த உரையும் தந்துள்ளனர்.

சேக்கிழார் நாட்டுப்பற்றும் இனப்பற்றும் மிக்கவர் என்பது பெரியபுராணத்தால் நன்கு விளங்கும். தம் தொண்டைநாட்டில் வாழ்ந்த திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தைப் பாடும்போது, அந்த நாட்டின் வளத்தினையும்

நானில ஐந்திணைச் சிறப்பையும் அவற்றில் வாழ்ந்த வேளாளர் பெருமையையும், தலைநகராம் காஞ்சியின் உயர்வையும் ஆங்கே அம்மையார் அருந்தவமியற்றி அறம்பல புரிந்த தன்மையினையும், தழுவக்குழைந்த நிலையினையும், பிற சிறப்பியல்புகளையும் பாடியுள்ளார். 128 பாடல்கள் உடைய அப்புராணத்தே 110 பாடல்கள் மேற்கூறிய சிறப்பு களையே காட்டுகின்றன.

சேக்கிழார் சமயத்திலும் தமிழ்மொழியிலும் ஆழ்ந்த பற்றுள்ளவர் என்பதை நூல் முழுதிலும் காண இயலும். சைவ சமய அடிப்படை உண்மைகள், சாதி பேதமற்ற கோயில் வழிபாடு, அடியவர் வழிபாடு, பெண்கள் ஆண்களை ஒத்த உணர்வினராய்ச் சம உரிமை உடையவராய் வாழ்ந்து சமுதாயத்தையும் சமயத்தையும் பேணிக் காத்த நிலை, அரசர்கள் ஆட்சிமுறை, ஆளப்படுவோர் வாழ்க்கை நெறி முதலியவற்றை விளக்கிக் காட்டியுள்ளார். அப்படியே வரலாற்று அடிப்படையிலும் நிலநூல் அடிப்படையிலும் தமிழ்நாட்டில் இருந்த பல்வேறு சிறு நாடுகள், கோட்டங்கள் இவற்றின் பிரிவுகளையும் ஆங்காங்கே ஆண்ட அரசர்களின் வாழ்வு, நிலை முதலியவற்றையும் பல்வேறு சாதிகள் இருந்தும் அவற்றுள் வேறுபாடில்லாத சமுதாயநெறியினையும் விளக்கியுள்ளார். இப்பெரியபுராணத்துக்கு மூலமாகிய திருத்தொண்டத் தொகையினைப் பாடிய சுந்தரர், இறைவனை நோக்கி 'யாதினை அறிந்து என் சொல்லப் பாடுவேன்' என வேண்ட 'சொற்றமிழ் பாடுக' என இறைவன் அருளியதாக (தடுத்தாட். 70) கூறியதிலிருந்தும் வேறு பல இடங்களில் தமிழ்நலம் பாராட்டிய வகையிலும் இவர் தமிழ் உள்ளம் நன்கு விளங்கும். அப்படியே பல தேவாரப் பாசுரங் களுக்கு உரையென்னுமாறு அவரவர் வரலாற்றுக்கிடையில் இவர் பாடல்கள் சமய உண்மைகளையும் விளக்கங்களையும்

கொண்டு உள்ளமையின் இவர் உரையாசிரியர் எனவும் சமய போதகர் எனவும் போற்றப் பெற்றார்.

சந்தர்ப்பத்திற்கேற்ற சந்தத்தில் பெரியபுராணப் பாடல்கள் அமைகின்றன; சமணர்கள் ஏவிய யானை வந்த வேகத்திலும் (திருநா. 111—114) வேறுபல இடங்களிலும் இந்த உண்மை விளங்கக் காணலாம். சுடுசொற்களையோ, கடுஞ்சொற்களையோ சேக்கிழார் கையாண்டார் என்று கூறவியலாது. மெய்ப்பொருள் நாயனாரைக் கொலை செய்ய வந்த தத்தன் அவரைக் கொன்றான் என்பதை, 'தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய' என்ற விடத்திலும் வேறுபல விடங்களிலும் இவ்வுண்மையினைக் காணலாம். 'அந்தணர் வேறோர் அந்தணர்க் கடிமையாதல் இல்லை' என்றதைத் தடுத்தாட்கொண்டபுராணத்தால் மறுத்தும் அப்பூதி அடிகளார் அப்பரை வழிபட்டவிடத்தில் சாதிவேறுபாடற்ற நிலையை விளக்கியும் பிறவிடங்களிலும் சமுதாயச் சீர்திருத்தத்தைப் பெரியபுராணம் காட்டியிருக்கிறது.

சிந்தாமணிக்கு மாறுபட்ட வகையில் அமைந்த நூலாக இருந்தமையாலும் தம் சமயத்தில் மேலிருந்த ஆழ்ந்த பற்றினாலும் அப்பர், சம்பந்தர் போன்றார் வரலாறுகளில் சமணர்களைச் சற்றே அதிகமாய்ப் பழித்த நிலைகள் எண்ணத்தக்கனவாம். ஆயினும் சாக்கியநாயனார் புராணத்தில் அவர் அச்சமய (புத்த) நிலை நின்றே தம்மைத் தொழுதபோதும் கல்லால் தம்மை எறிந்த போதும் மகிழ்ந்து முத்தி அளித்த சிவனருள் நிலையைக் கூறும் போது தம் சமரச உணர்வைக் காட்டுகிறார்.

பெரிய புராணம் சமய நூலாக அமையினும், இது அக்கால வரலாறு, சமுதாய நிலை, ஆட்சிமுறை, தமிழக இயற்கைவளம் பரந்த பாரதத்தின் எல்லை, (திருநாவுக்கரசர் புராணம் முதலிய இடங்களில்) இனப்பற்று, நாட்டுப்பற்று

இவை கொள்ள வேண்டிய நெறி அனைத்தையும் விளக்கும் ஒருபெரு நூலாகும். இந்நூல்வழி இன்றும் பல அறிஞர்கள் தமிழ் நாட்டு வரலாற்றை ஆராய்தல் கண்கூடு. தமிழ் உள்ள வரையில் பெரியபுராணமும் சிறந்து விளங்கும் என்பது தெளிந்த உண்மையாகும்.

# நந்தனின் ஆதனூர்

நந்தனார் பிறந்த ஊர் தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை யினைச் சார்ந்த ஆதனூர் என்றே கொள்ளல் பொருந்துவ தாகும். மேலா நல்லூர்—மேற்கா நாட்டு ஆதனூர்— என்பதே அவர் ஊராகும். மேற்கா நாடு என்பது அரசாங்கப் பதிவேடுகளில் குறிக்கப் பெற்றிருக்கும் என எண்ணுகிறேன். இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே (1921-30 அ 1931-40) ஊர்களை மாவட்டங்கள் தோறும் வகைப்படுத்தி அன்றைய அரசு வெளியிட்ட அரசாங்க ஏடுகள் அந்த மாவட்ட அலுவலகங்களிலும் சென்னை-எழும்பூர் தொல் ஆவணக் காப்பகத்திலும் இருக்கின்றன. அப்படியே திருப்புன்கூர் புள்ளிருக்குவேளூர் ஆகியவற்றிற்குக் கிழக்கே கிழக்கா நாடு அல்லது கீழ்நாடு என்ற ஊரோ அல்லது வட்டமோ அல்லது நாட்டாண்மைத் தலைநகரோ இருக்க வேண்டும். அந்த கிழக்கா நாட்டிலும் ஓர் ஆதனூர் இருந்திருக்க வேண்டும். தென்திருமுல்லைவாயில் வடதிருமுல்லைவாயில், வடகாசி தென்காசி, காஞ்சி, வடகாஞ்சி என்பன போன்று மேல்கீழ்— தெற்கு வடக்கு எல்லையிலமைந்த ஒரே பெயருடைய ஊர்களை அவ்வத்திசைகளைக் கொண்டு அவ்வத் திசையிலும் நாடு அல்லது நாட்டாண்மை எல்லை கொண்டும்— அவற்றுடன் இணைத்தும் வழங்கி இருப்பர் (தஞ்சை

மாவட்டப் பழைய அரசிதழ்—Guzzeeter) ஆயின் உண்மை வெளிப்படும். நந்தனார் வாழ்ந்து ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. இந்த இடைவெளியில் பல ஊர்களின் பெயர்கள் உருமாறி உள்ளன. மயிலாடுதுறை, மறைக்காடு, தில்லை போன்றவை சான்றாகும். எனவே மேற்கா நாடு, கீழ்க்கா நாடு போன்றவையும் மாறி இருக்கலாம். அவ்வாறு மாறுவது இயற்கை என்பதை மொழிநூற் புலவர்களும் ஆய்ந்து கண்டுள்ளனர். என்றாலும் ஆதனூர் என்ற பெயர் இன்னும் வழக்கத்தில் உள்ளது. அக்காலத்தில் நாடு, மண்டலம், கோட்டம், வட்டம், நாடு, நாட்டாண்மை என ஒன்றினுள் ஒன்று அடங்கிய பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தமை வரலாற்று உண்மையாகும். 'நாடு' என்பது கோட்டம் அல்லது வட்டத்தின் உட்பிரிவாகும்.

நான் வைத்தீஸ்வரன் கோயில், திருப்புன்கூர் ஆகிய இடங்களுக்குச் சென்ற போது அங்குள்ளார் அனைவரும் நந்தனார் பிறந்த ஊர் அருகே உள்ளதெனக் கூறினர். (நான் விரைந்து பூம்புகார் செல்ல நேர்ந்தமையின் அவ்வூரைச் சென்று காண விழைந்தும் காலமின்மையால் திரும்பி விட்டேன்,)

சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் திருப்புன்கூர் நந்தி விலகியதைக் குறிக்கின்றார். (பாடல் 16) அதற்கு முன் நான்கு பாடல்களிலே நந்தனார் கோயில்தோறும் (13) கோயில்களின் திருவாயில் புறத்தும் (13) பறை திருமஞ்சம் முதலியவற்றிற்கு உரிய தோல், கோரோசனை முதலியன தந்து வந்தார் எனச் சேக்கிழார் குறிக்கின்றார். தம் ஊரில் இருந்து கொண்டே, தம் கடமையைவிடாதும் பல கோயில் களில் கடவுள் தொண்டும் செய்யும் அந்நாளில்தான் திருப்புன் கூர் சென்றார் என்கின்றார். எனவே நந்தனார் பிறந்த ஊர் திருப்புன்கூருக்கு அருகே இருக்க வேண்டுமேயன்றி, சில காத தூரம் கடந்த நிலையில் இருக்க இடமில்லை. அப்படியே காட்டு

மன்னார் கோயில் பக்கத்தில் இருக்குமானால் அங்கிருந்து திருப்புன்கூருக்குச் சுமார் 30கல் கடந்து அந்நாளில் சென்றிருக்க மாட்டார். அப்படியே சிதம்பரத்தை ஒட்டியோ சற்று விலகிய வழியிலோ சென்றார் என்று கொண்டாலும் தம் ஊர் அருகிலுள்ள அப்போதே வழியில் சிதம்பரத்தைக் காணத் துடித்திருப்பார். ஆனால் திருப்புன்கூர் நந்தி விலகிய பின்பு தான் தில்லை பற்றியே சேக்கிழார் குறிப்பிடுகின்றார். மேலும் பல கோயில்களுக்கு அறப்பணி ஆற்றியதாகக் கூறப் படுகின்றது. ஆனால் திருப்புன்கூர், புள்ளிருக்குவேளூர் பக்கத்திலேதான் பல தலங்கள் உள்ளமையின், காட்டு மன்னார் கோயில் பக்கத்திலே தலங்கள் இல்லை. மேலும் அவ்வூரும் அதன் பக்கத்தில் உள்ள ஊர்களும் வயல் வளமும் பிற வளங்களும் பெற்ற நிலையை முதல் ஐந்து பாடல்களில் சேக்கிழார் விளக்குகிறார். அத்தகைய வளம் காட்டுமன்னார் கோயில் பக்கத்தில் பெருமளவு இல்லை என்பதை நான் இரண்டு இடங்களையும் நேரில் கண்டவனாதலால் திட்ட மாகச் சொல்லுவேன். இதனாலும் மயிலாடுதுறை வட்டத்தைச் சார்ந்த ஆதனூரே நந்தனார் பிறந்த ஊராகக் கொள்ளலாம்.

மேலும் அவர் ஊர் கொள்ளிடம் திரைக் கரத்தால் நலம் வாரி அளிக்கும் நீர் நன்னாட்டில் இருந்ததாகச் சேக்கிழார் குறிக்கிறார். (1)காட்டுமன்னார் கோயிலோ அதைச் சார்ந்த நிலத்தையோ அவ்வாறு அன்றும் இன்றும் யாரும் கூறுவ தில்லையே!

மற்றும் அவ்வூரிலிருந்து தில்லை நோக்கிப் புறப்பட்ட நந்தனார் தில்லை எல்லையில் மதில் புறத்து இருக்க. இறைவன் ஆணையால் தில்லை வாழ் அந்தணர் தீ வளர்த்து அதில் மூழ்கச் சொல்லுகிறார். பின் நந்தனார் அத்தீயில் மூழ்கி அம்பலவனைக் கண்டு இரண்டறக் கலக்கிறார்.

அவ்வாறு அவர் சென்ற வாயில் தெற்கு நோக்கிய வாயில் எனச் சேக்கிழார் குறிக்கிறார். 'தென்திசையின் மதிற் பறத்தும் பிறை உறிஞ்சு திருவாயில் முன்னாக' (பாட்டு 31) என்பது சேக்கிழார் வாக்கு. எனவே, நந்தனார் தம் ஊரிலிருந்து நேரே வடக்கு நோக்கி வந்து தெற்கு வாயிலில் துயின்ற பொழுதே அந்தணர் அவரை எதிர் கொண்டனர் எனக் கொள்ளல் வேண்டும். காட்டுமன்னார் கோயில் மேற்கே உள்ள ஊர் அன்றோ!

இவ்வாறு பல வகையில் எண்ணிப் பார்க்கின் நந்தனார் பிறந்த ஊர் தில்லைக்குத் தெற்கே உள்ள—திருப்புன்கூருக்கு அருகில் உள்ள—மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்த-மேற்கா நாட்டு ஆதனூர் என்றே கொள்ளல் வேண்டும்.

# வேற்காடு—சக்திவேற்காடே

தமிழ்நாட்டுப் பலதலங்கள் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு மிகச்சிறப்புற விளங்குகின்றன. தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களும் ஆழ்வார்தம் மங்களா சாசனம் பெற்ற திவ்விய தேசங்களும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலே தமிழ் நாட்டையும் தமிழரையும் தமிழையும் வாழ வைத்து வளர்த்து வருகின்றன. தென்பாண்டி நாடு தொடங்கி, தொண்டைநாடு வடநாடு வரையில் நம் நாயன்மாரும் ஆழ்வார்களும் அந்தப் பழைய காலத்தில் கால்கடுக்க நடந்தும் உருண்டும் உழன்றும் ஊர்தொறும் சென்று இறைவன் புகழ்பாடி இன்று வரையிலும் இனி மேலும் நாமெலாம் வாழ வழி காட்டியுள்ளனர். அத்தகைய பெருந்திருத்தலங்களுள் ஒன்றே இன்று மிகவும் சிறப்பாகப் போற்றப் பெறும் திருவேற்காடு எனும் அருள்தலம்.

மூன்றாம் நூற்றாண்டின் வாழ்ந்த சோழப் பெருமன்னன் 'எண்தோளீசர்க்கு எழில்மாடம் எழுபது செய்தோன்' எனப் பேசப் பெறுகின்றான். அதற்குமுன் தல விருட்சங்களின் கீழே தங்கி அருள்புரிந்த இறைவனுக்கு, அவனும் அவன் வழி வந்த தமிழகப் பெருமன்னரும் ஊர்தோறும் பலப்பல கோயில் களைப் பலப்பல வகையில் நிறுவி, சைவத்தையும் வைணவத் தையும் வளர்த்தனர். பின்வந்த வடுகரும் பிறரும் மேலை நாட்டவரும் அத்தெய்வநிலைக் களன்களைப் போற்றிப் புரந்தனர். இன்று நம்மை நாமே ஆளுகின்ற நிலையிலே நம் சமயம் அந்த அளவில் மன்னர்களால்—தலைவர்களால்—ஆட்சியாளர்களால் போற்றி வளர்க்கப் பெறுகிறதா என எண்ண வேண்டியுள்ளது. எனினும் பொதுமக்களும் ஆங்காங்கே உள்ள தம்மை மறந்து சமயத்தொண்டு செய்யும் நல்லவர்களும் தொன்மை நெறி வாழ வழி காணுகின்றமை ஓரளவுக்கு மனத்துக்கு அமைதி தருகின்றது. அந்த வகையில் தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்கள் முயற்சியால் நம் திருவேற்காடு திருக்கோயில்கள் செப்பம் செய்யப் பெற்று குடமுழுக்கும் நடக்க ஏற்பாடு செய்யப் பெறுவது போற்றுதற் குரியது.

திருவேற்காடு தொன்மை வாய்ந்த தலமாகும். ஏழாம் நூற்றாண்டில் ஞான சம்பந்தப் பெருமானால் பாடப் பெற்று பெருஞ் சிறப்பு வாய்ந்தது. தேவாரம் பாடிய மற்றைய இருவர்களாகிய அப்பரும் சுந்தரரும் இவ்வழியாகச் சென்றிருக்கின்றார்கள். இருவரும் ஒரு சில இடங்களில் தங்கியபோது அதைச் சுற்றியுள்ள தலங்களையும் தரிசித்தனர் என்று சேக்கிழார் பாடுகின்றார். திருநாவுக்கரசர் திருப்பாச்சூரில் தங்கியிருந்த காலத்தே பல பதிகளுக்குச் சென்று இறைவனை வணங்கிய தன்மையினை,

'அம்மலர்ச்சீர்ப் பதியை அகன்று அயல்உளவாம் பதி
அனைத்தும்
மைமலரும் களத்தாரை வணங்கி மகிழ்வோடும் போற்றி'
(திருநா-34)

என்றும், சுந்தரர் காளத்தியிலிருந்து ஒற்றியூர் வரும் வழியில் பல தலங்களைத் தரிசித்தார் என்பதை,

'அங்குச் சிலநாள் வைகியபின் அருளாற் போந்து
பொருவிடையார்
தங்கும் இடங்கள் எனைப்பலவும் சார்ந்து தாழ்ந்து
தமிழ்ப்பாடி
பொங்கு புணரிக் கரைமருங்கு புவியுட் சிவலோகம்
போலத்
திங்கள் முடியார் அமர்ந்த திருவொற்றியூரைச்
சென்றடைந்தார்' (ஏயர்கோன் 199).

என்றும் சேக்கிழார் கூறுவார். எனவே அவர்கள் இருவரும் இத்தலத்திற்கும் வந்து இறைவனைப் பாடியிருக்கக்கூடும் எனவும் அவை மறைந்துபோன பலவற்றுள் கலந்து போயிருக்கும் எனவும் எண்ண இடமுண்டாகிறது. எப்படி யாயினும் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே 'வேற்காடு' அம்மையும் அப்பரும் மகிழ்ந்துறையும் பெருந் தலமாக இருந்தது மறைக்க முடியாத ஒன்றன்றோ! ஞானசம்பந்தர் அந்த ஏழாம் நூற்றாண்டில் வேற்காட்டு வித்தகரைப் பாடியபோது,

'வேற்காடு
உள்ளியர் உயர்ந்தார் இவ்வுலகினில்'

என்றும்

வேற்காடு
'ஈறிலா மொழிய மொழியா எழில்
கூறினார்க் கில்லை குற்றமே'

என்றும்

,ஞானசம்பந்தன்

செந்தமிழ் கொண்டு பாடக் குணமாமே'

என்றும் இசைத்துப் போற்றுகின்றனர். எனவே இத்திருவேற்காட்டினைப் பாடியவர்கள் இவ்வுலகில் உயர்ந்தார் ஆவர் என்பதும் அவர்தம் குற்றங்கள் இல்லையாகக் கழியும் என்பதும் யாவும் நல்ல குணமாகவே அமையும் என்பதும் எடுத்துக் கூறி, வழிபடுவார் அகவாழ்வு புறவாழ்வு இரண்டும் தூய்மையாக அமைய, நில்லா உலகில் நிலைத்த புகழொடு உயர்வார் என்பதை விளக்குகிறார். இவ்வுண்மை ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்டு முன் மாத்திரமன்றி, இன்றும் நம் கண்முன்பும் உண்மையாகி உள்ளதைக் காண்கின்றோம்.

'வேற்காடு' என்னும் பெயர் பற்றிச் சற்றே எண்ணத் தோன்றுகின்றது. பழங்காலத்தில் தமிழ்நாட்டை நானிலமாக்கி அவற்றுள் முல்லை சார்ந்த இடத்தைக் 'காடெ'ன உரைப்பர் எனக் காண்கிறோம். பழங்காலத்தில் 'காட்டகத்தில் வேடன் கடலில் வலைவாணன்' என்றபடி காடுகளில் வேடுவர்கள் வாழ அவர்கள் சக்தியை வழிபட்டு வந்தார்கள் எனவும் காண்கின்றோம். முல்லைத்திணை நிலக் கடவுள் மாயோனாயினும் சத்தி வழிபாடு அங்கெல்லாம் சிறந்து நின்றமை தெளிவு. பின் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலை நிலமாகிய பின்னர் முல்லையை அண்ணனுக்கும் குறிஞ்சியை மகனுக்கும் தியாகத்தொடு தந்த கொற்றவை தியாக வல்லியாய்ப் பாலை நிலத்துக்குக் குடியேறிவிட்டாள். போலும். எனினும் 'சத்தி'யாகிய அன்னையினை வேலாகக் கையிலேந்திய குமரனும் திருமாலுடன் தத்தம் இடத்திலேயும் அச்சக்திக்கு இடம் தந்துள்ளமை நாட்டின் பல இடங்களில் காணும் முறையாகும்.

இறைவன் தங்கிய காடுகள் பல. வேற்காடு, ஆலங்காடு, மறைக்காடு, கடம்பவனம், தில்லைவனம், பனங்காட்டூர்

எனப்பல தலங்கள் தேவாரத்தால் போற்றப் பெறுகின்றன. எனினும் 'வேற்காடு' என்ற இந்த ஊரின் பெயரிலே அன்று மட்டுமன்றி இன்றும் வேலாய் நின்று குமரனுக்கு வெற்றி தந்த சக்தியும் இணைந்தே கருமாரியாய் வீற்றிருப்பதைக் காண்கிறோம்.

சூரபதுமனை வென்று நிற்க, முருகனை அனுப்பிய வேதபுரீசன் சுடர் வேலைத் தந்து அனுப்பினான் என்பது வரலாறு.

**(சூரன) மாயிருந்திறலும் வரங்களும் இந்த மன்னுயிர்**
**உண்பது, எப்படைக்கும்.**
**'நாயகமாவ தொரு தனிச் சுடர்வேல் நல்கியே**
**மதலை கைக் கொடுத்தான்'** (விடைபெறு 38)

என்று காட்டுவர் கச்சியப்பர். 'கொடுத்தான்' என்ற ஒரு சொல்லே பொருளைக் குறிக்கப் போதுமானதாக இருக்க, **'நல்கியே** மதலை கைக் கொடுத்தான்' என்று என்று 'நல்கியே' என மற்றொரு சொல்லையும் பெய்வானேன்? 'நல்கை' என்பது திராவிட மொழிகளிலேயே தமிழிலும் மலையாளத் திலும் மட்டும் உள்ள ஒரு சிறந்த சொல் (29897 page 240 ETY Dic). தன்னையே ஈவதற்கு ஒப்பாக உள்ள ஒன்றினைக் கொடுப்பதையே இது குறிக்கும். உடனுறை சக்தியையே வேலாக்கித் தன் மைந்தனிடம் கொடுத்ததையே கச்சியப்பர் இவ்வாறு குறிக்கின்றார். ஆம்! முன் சூரபதுமனுக்கு இறைவன் வரம் கொடுத்தபோது தன் சக்தியல்லால் வேறொன்றால் அம்மூவரையும் (சூரபதுமன், தாரகன், சிங்கமுகன்) வெல்ல இயலாது எனவே வரம் கொடுத்துள்ளன ரன்றோ!

**'தேவர் யாவரும் சென்று தொழப்படு**
**மூவராகி மொழிந்திடு நுங்களைத்**
**தாவிலாத நம் சக்தி ஒன்றே யலால்**
**ஏவர் வெல்வர் என்று விளம்பி'** (வரம்பெறு 27)

வரந் தந்தான் என்பர் கச்சியப்பர். 'தாவிலாத நம் சக்தி என்கின்றார். அவருக்குரிய சக்தி என்பதை 'நம்' என்ற சொல்லாலும் அந்த அருட்சத்தியும் தன்னைப் போல் என்றும் உளநிலையினை 'தாவிலாத' என்ற சொல்லாலும் தெளிய வைக்கின்றார். அறுமுகன் கையில் உள்ள வேல் அருட்சத்தி வேலன்றே,

அத்தகைய அருட்சக்தியாகிய வேல் சூரபதுமன்மேல் சென்ற செயலைக் கச்சியப்பர்,

**தேயுவின் எடுத்த அண்டத் திறங்களும் பிறங் ஞாலத்து,**
**ஆயிரங்கோடி அண்டத்து அங்கியும் ஒன்றிற் றென்ன**
**மீயுயர்ந் தொழுகி அன்னோர்வெருவருந் தோற்றங்கொண்டு**
**நாயகன் தனது தெய்வப் படைக்கலம் நடந்த தன்றே'**
(சூரபது வனை 481)

என்கின்றார். இங்கும் 'நரயகன் தனது தெய்வப்படைக்கலம்' என்று திரிபுரம் எடுத்த விரிசடைக் கடவுளின் சக்தியாகிய தெய்வப்படைக்கலம் என்பதை நினைவூட்டி, முன்வரம் பெறுபடலத்தில் குறித்த 'தாவிலாத நம் சக்தி' என்ற தொடரை எண்ண வைக்கிறார்.

ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டுயுகங்கள் ஆண்ட குருபதுமனை முன்னிறுத்தி, அடுத்த அண்ட கோசப் படலத்தில் அண்டங்களின் அளப்பரிய எல்லையினையும் தொல்லை நிலையினையும் எண்ணலாகா இயைபினையும் விளக்குகிறார் கச்சியப்பர். அதில் கோடியில் ஒரு கூறு கூட இன்றைய விஞ்ஞானிகள் கண்டு தெளியவில்லை. அண்மையில் ஒரு நாளிதழ் அறிவியல் ஆய்வாளர்கள் பல அண்ட கோளங்கள் உண்டென்று கூறியதையும் அவற்றுள் எண்ணற்ற கோளங்கள் உருண்டு கொண்டே இருப்பதையும் அவற்றின்

விரிவையும் தொலைவையும் பிற இயல்புகளையும் காண முடியாது திகைப்பதையும் வெளியிட்டிருந்தது. பழங்காலப் புராணக்காரர்கள் நம் அண்டத்தில் நாம் காணும் சூரியனைப் போல் பன்னிரண்டு சூரியன்கள் உண்டென்றும் ஒவ்வொரு சூரியனைச் சுற்றியும் எண்ணற்ற கோளங்கள் உருள்கின்றன என்றும் கூறுவர் (இந்த எல்லையை இன்றைய விஞ்ஞானிகள் தொட முடியவில்லை), இத்தகைய அண்ட கோளங்களை எண்ணிப் பார்ப்பின்—கச்சியப்பரைக் காணின், ஒரு சிறு நிலப்பகுதியை ஒருசில ஆண்டுகளே ஆளவருபவர்கள் தம்மை மறந்து தரணி வாழச் செயலாற்றுவர். ஆனால் இன்று அத்தகைய நல்லவர் நாட்டில்—உலகில் இல்லையே.

ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆண்ட சூரபதுமனுக்குத் தன் தொல்லுருவை அறுமுகன் காட்டுகின்றான். மாயை நீங்கி மதி பிறக்கிறது; வாய் பாடுகிறது.

> 'மீயுயர் வடிவங் கொண்டு மேவிய துதன் சொற்ற
> வாய்மைகள் சரதம் அம்மா! மற்றுயான் பெற்ற அண்டம்
> ஆயவை முழுதும் மற்றும் அறுமுகம் படைத்த செம்மல்
> தூயபொற் பதரோமத்தில் தோன்றியே நிற்குமன்றே'
> (சூர. வதைத்-435)

என்று காட்டிய கச்சியப்பர் 1008 அண்டங்களை ஆண்ட சூரபதுமன் நிலையே இதுவானால் நம் போன்றோர் நிலை எத்தகையது என உணர்த்தித் தெளியவைக்கிறார். தெளிவார் யார்?

எங்கோ சென்று விட்டேன். இன்றும் சூரபதுமர்களும் இரணியர்களும் இராவணர்களும் உள்ளதாலே சக்தியாகிய வேல் என்னை எங்கோ ஈர்த்துச் சென்று உணர்வு தந்தது. மன்னியுங்கள். இந்த வேற்காட்டில் இன்று அச்சக்தியாகிய வேலே கருமாரியாகி நின்று காட்சிதந்து, நம்புவர்களுக்கு நல்லருளை நாளும் நாளும் வாரி வழங்குகின்றாள். இந்த

ஊரின் தலபுராணம் இப்பெயரைப் பற்றி என்ன விளக்கம் தருகின்றதென்பதை நானறியேன். ஆயினும் வேற்காடு சக்தியாகிய வேற்காடாகவே உள்ளது என்பதை உணர்கின்றேன். எனினும் தன்னினும் சக்தி வேறல்லள் என்பதை உலகுக்கு உணர்த்தவே பாலாம்பிகை உடனுறை வேதபுரீசர் கருமாரியினையும் அன்பர்களுக்குக் கருணை புரியத் தனியாக விட்டு, அறம் வளர்க்கும் அந்நாயகியின் திறங்கண்டு அருகியே வீற்றிருக் கின்றார். கற்றார் வாழ் காஞ்சியிலே காமாட்சி தனித்து நின்று தண்ணளி சுரப்பதைப் போன்று கருமாரி அருளை வாரி வழங்குகின்றார். எனினும் அருகிலே அண்ணல் உள்ளதை எண்ணி எண்ணி உளமகிழ்வாளன்றோ! பிரிந்தறியாப் பெரு நிலையில் ‘சத்தியாய்ச் சிவமாய்’ ஒளிவிடும் சிறப்பு மிக்க இத் திருத்தலம் இன்று அச்சக்தியின் அருள் நலத்தாலே ஆயிர மாயிரம் மக்களைத் தன்னிடம் ‘வருக’ என ஈர்த்து, பயன் பெறத் தக்கவகையில் சிறக்கின்றது. கருமாரிதாசர் தவத்திரு இராமதாசர் அவர்களும் அவரொடு இணைந்த நல்லன்பர் களும் இன்று கோயில்களைச் செப்பம் செய்து குடமுழுக்கும் செய்கின்றனர் என்பது சிறந்து போற்றக் கூடிய ஒன்றாகும். கருமாரி பாலஅம்பிகையாகவே தனித்து இருந்து அருளை வாரி வழங்கும் திறத்தினையும் அக்கொடை அளியினையும் சற்றே தூரத்திலே இருந்து உளங்கொளக் கண்டு உவக்கும் வேதபுரீசன் அருள் நோக்கையும் கண்டு களித்துக் கொண்டு போற்றும் அடியவர் குழாம் நாளுக்கு நாள் பெருகி நாட்டுக்கு நலம் செய்யும் என்பது உறுதி. சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள இலட்சக் கணக்கான மக்களைத் தன் அருள் திறத்தால் ஈர்த்துப் புரக்கும் அன்னையையும் அப்பனையும் வணங்குகிறேன். திருப்பணி இயற்றி குட முழுக்கும் செய்யும் நல்லன்பர்கள் தம் தொண்டு சிறக்கவும் தூய உள்ளமும் வாழ்வும் செழிக்கவும் வாழ்த்துகிறேன்.

வாழி! நீடூழி!

# சமயம் வளர்த்த தமிழ்—பௌத்தம்

சமுதாய வாழ்வொடு பொருந்தியது சமயம்; மொழியும் அப்படியே! எனவே சமுதாயம் வளரும் நெறிநின்றே சமயமும் மொழியும் வளர்தல் வேண்டும். அதுவே நியதியும் கூட. உலகம் தோன்றிய நாள்தொட்டு—மனித வாழ்வு மலர்ந்த நாள் முதல்—உலகில் எத்தனை எத்தனையோ சமயங்களும் மொழிகளும் தோன்றின. ஆயினும் சமுதாய வாழ்வு நெறிக்கு மாறுபட்ட பல சமயங்களும் மொழிகளும் கால வெள்ளத்தில் எதிர் நீச்சல் இட்டு, அச்சமுதாயத்தொடு ஒன்றி வளர முடியாமல் மறைந்து விட்டன. அவற்றுள் ஒரு சிலவே இன்றும் வாழ்கின்றன. அவ்வொரு சிலவற்றுள் பௌத்த சமயமும் தமிழ் மொழியும் இங்கே வாழ்கின்றன.

தமிழ்ச் சமுதாய வாழ்வில் எத்தனையோ சமயங்கள் இடம் பெற்று நின்றன—நிற்கின்றன. அவற்றுள் ஒன்றே பௌத்தம். ஒரு காலத்தில் தமிழகத்தையே கட்டி ஆண்ட வகையில் சிறக்க வாழ்ந்திருந்த பௌத்தம் இன்று வாழ் விழந்துவிட்டது. எனினும் அதுவிட்டுச் சென்ற அடிச்சுவடுகளாகிய, தமிழ் மொழியிலமைந்த, இலக்கிய இலக்கணங்களும் பிறவும் தமிழ் மொழி இலக்கிய வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் வாழ்ந்து வீழ்ந்த சமயங்களும் இன்று வாழும் சமயங்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை ஒத்தே பௌத்தமும் இம் மொழி வளர்ச்சியில் பங்கு கொண்டுள்ளது. அதில் ஒரு பகுதியினைக் காண்பதே இன்றைய என்பணியாகும்.

பௌத்தம் அசோகர் காலத்திலேயே—கி மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே—தமிழ் நாட்டின் வழியே இலங்கைக்குச் சென்ற அந்தப் பழைய நாளிலேயே—தமிழ் நாட்டிலும் பரவி நின்றதெனினும் அக்காலத்திலெல்லாம் தமிழில் அச்சமயம் பற்றிய இலக்கியங்களோ பிறவோ எழுதப் பெறவில்லை எனலாம். எழுதி மறைந்திருக்கலாம் என்று எண்ண இட

மில்லை. ஏனெனில், அக்காலத்திலெல்லாம், அவர்கள் தமிழ் மொழியினையோ பிற மொழிகளையோ பற்றுக் கோடாகக் கொள்ளவில்லை என்பது அக்காலத்திய கல்வெட்டுக்களாலும் பிறவற்றாலும் அறிய முடிகின்றது. ஆயினும் சமயம் மக்கள் வாழ்வில் நிலைக்க வேண்டுமானால், அம்மக்கள் மொழி வழியே அதைப் பரப்ப வேண்டும் என்ற உண்மையினை உணர்ந்த பிறகே—கடைச் சங்க காலத்துக்குப் பின்பே—பௌத்தர்கள் தமிழில் கருத்திருத்தினர். அதன் அடிப்படையிலேயே 'மணிமேகலை' என்ற பெருங்காப்பியம் உருவாயிற்று. அதற்கு முன்னரோ அக்காலத்தினை ஒட்டியோ ஒரு சில பாடல்களும் சில இலக்கியங்களும் தோன்றியிருக்கக் கூடும். ஆயினும் அவை பற்றித் திட்டமாக நம்மால் ஒன்றும் கூற இயலாது. எனவே பேரிலக்கியமாக இன்று வாழும் சாத்தனாரது மணிமேகலையே தமிழில் உண்டான முதல் பௌத்த இலக்கியம் என்பது உறுதி ஆம்! அந்த இலக்கியம் மொழி வளத்தாலும் இலக்கிய நலத்தாலும் என்றும் வாழும் இலக்கியமாக அமைந்து விட்டது.

பௌத்த சமயத் துறவிகள் தமிழகமெங்கணும் விரவி இருந்தார்கள் என்பதும் பல்வேறு பௌத்த சங்கங்களை அமைத்து வாழ்ந்தார்கள் என்பதும் வரலாறு காட்டும் விளக்கமாகும். எனவே அவர்கள் ஆங்காங்கே மக்களோடு தொடர்பு கொண்டு தம் சமய உண்மைகளை விளக்க, சிறு சிறு நூல்கள் தமிழில் எழுதியிருக்கலாம். எனினும் அவை சமுதாயப் பொது நெறிக்கு மாறுபட்ட துறவினை வற்புறுத்தியனவாக அமைந்திருந்த காரணத்தால் காலம் கடந்து வாழவில்லை போலும். சாத்தனாரும் மணிமேகலையினைத் துறவு நூலாக ஆக்க விழைந்து அதன் வழியே தலை சிறந்தது எனக் காட்ட விழைந்தாராயினும், துறவறத்தினும் இல்லறமே ஏற்றமுடையது என அவர் விளக்க நேர்ந்தமையானும் சமுதாய அடிப்படைக்குத் தேவையான பிற அற

நெறிகளை வற்புறுத்தியமையானுமே அந்நூல் தமிழில் இன்றளவும் சிறக்க வாழ்கின்றது. அதனாலேயே அந்த நூலினை மேலை நாட்டு அறிஞராகிய 'போப்' அவர்களும் நம்நாட்டு அறிஞர்களாகிய கனகசபைப்பிள்ளை, கிருஷ்ண சாமி ஐயங்கார், ASP ஐயர் போன்ற பலரும் போற்றிப் பாராட்டியுள்ளனர். மேலும் பௌத்தம் தமிழ் நாட்டில் நிலை கெட்ட போதிலும் மணிமேகலை அதன் சீரிளமைத் திறம் குன்றாவகையில் சிறக்க வாழ்கின்றது.

தற்போது மணிமேகலையைத் தவிர்த்து மற்றொரு பௌத்தர்தம் தமிழ் முழு நூலாகக் காண்பது 'வீரசோழியம்' என்னும் இலக்கண நூலேயாகும். இதன் ஆசிரியர் புத்த மித்திரனார். தம்மை ஆதரித்த வீரராஜேந்திர சோழன் பெயரால் இதை அமைக்க நினைத்தமையின் 'வீரசோழியம்' என இதை அமைத்தார். இது மணிமேகலையைப் போன்று சிறக்க வாழவில்லை. இந்நூலுள் தமிழ் மரபுக்கு ஒவ்வாத சில இலக்கண மரபுகளை எடுத்துக்காட்டி இதன் ஆசிரியர் விளக்க நினைத்தமையே அதற்குக் காரணமாகும். தமிழ் மரபுக்கு மாறுபட்ட வகையில் அமைந்ததேனும், கச்சியப்ப முனிவரின் முதல் பாடலின் முதல் தொடராகிய 'திகடச் சக்கர' என்னும் சொற்றொடரின் புணர்ச்சி இலக்கணத்துக்கு இந்நூலே ஏதுவாக நின்றமை நாடறிந்த ஒன்று. இந்த வீரசோழியத்தை திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை அவர் கள் 1881இல் அச்சிட்டிராவிட்டால் இதுவும் பிற பௌத்த நூல்களே போன்று முற்றும் கிடைக்கா வகையில் மறைந் திருக்கக்கூடும்.

இந்நூலைத் தவிர்த்து வேறு பல நூல்களையும் பௌத்தர்கள் இயற்றித் தமிழுக்கு வளம் சேர்த்தனர். எனினும் அவையாவும் வாழவில்லை. சிலவற்றுள் ஒரு சில பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. ஒரு சிலவற்றுள் ஒரு

சில வரிகளே கிடைக்க ஒரு சில பெயரளவில் வாழ்கின்றன. எனவே பௌத்தம் வளர்த்த தமிழ் ஓரளவு வரையறுக்கப் பெற்றுவிட்டது.

தமிழ் மகளாகிய மணிமேகலையைப் பற்றிய பெருங் காப்பியம் போன்றே, வடநாட்டில் புத்தர் காலத்தில் வாழ்ந்த 'குண்டலகேசி' என்னும் மகளை—துறவியைப் பற்றி எழுந்த நூல் ஐம்பெருங்காப்பியத்துள் மற்றொரு காப்பிய மாகிய 'குண்டலகேசி'யாகும். இதன் ஆசிரியர் நாத குத்தனார் ஆவர். இதில் ஒரு சில பாடல்களே இப்போது நமக்குக் கிடைக்கின்றன. மணிமேகலையைப் போன்று அகவற்பாவிலன்றி விருத்தத்தால் ஆகிய காரணத்தால் இது 'குண்டலகேசி விருத்தம்' எனவும் வழங்கப்பெறும். எனவே இது காலத்தால் பிந்திய நூலாகும் என்பது வெளிப் படை. மேலும் மணிமேகலையில் 'சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதை' வழியே தொடங்கப்பெற்ற சமயங்கள் பற்றிய தருக்கநெறி வளர்ச்சியடைய, பின்வந்த இந்த நூலை தருக்க நூல் என்னுமாறு அமைத்து, பிற சமயங்களைக் கண்டிக்கும் வகையில் எழுதப்பெற்றது போலும். எனவே தான் இது காலத்தை வென்று வாழவில்லை.

இந்நூலே யன்றி, வேறுசில பௌத்த நூல்களும் ஆங்காங்கே உரைகளில் காணும் மேற்கோள் பாடல்களாலும் பிறவற்றாலும் பெயரளவில் வாழ்கின்றன. அவற்றுள் 'சித்தாந்தக் கொள்கை' என்னும் சமயக் கொள்கை விளக்கும் நூல் 'திருப்பதிகம்' என்னும் பௌத்தர் போற்றும் தோத்திர நூல், புத்தருக்குப் பலவகையில் உதவிய 'விம்பசாரன்' என்னும் அரசனைப்பற்றிய 'விம்பசாரன் கதை' என்ற நூல் போன்றவை குறிப்பிடத்தக்கனவாம். இவையன்றி பௌத்தர் தம் அறிவும் ஆற்றலும் உள்ளிட்டு உணர்த்திய எத்தனையோ தமிழ் நூல்கள் காலவெள்ளத்தால் அடித்துச்

செல்லப் பெற்றிருக்கும். இந்த நூல்களையெல்லாம் பெரும்பாலும் பௌத்த சமயத் துறவிகளே இயற்றியமையும், அவர்களும் துறவு நிலையினையும் அதைச் சார்ந்த பிற கொள்கைகளையும் உணர்த்தியதோடு அமைந்து விட்டமையும், தமிழ்ச் சமுதாய அடிப்படை நெறியினின்று அவை முற்றும் மாறுபட்டமையும் இவை போன்ற பிற காரணங்களுமே அவை வழக்கிழந்தமைக்குக் காரணங்களாக அமைந்திருக்கலாம். எனினும் பௌத்தர் தமிழுக்குச் செய்த தொண்டினை என்றும் உலகுக்குக் காட்டி உயர்ந்து நிற்பது மணிமேகலை என்ற பெருங்காப்பியமாகும். எனவே அந்நூலுள் அமைந்த சமுதாய நெறிபற்றிய விளக்கங்களில் இரண்டொன்று கண்டு அமையலாம் என்று கருதுகிறேன்.

மணிமேகலை துறவுநூல் என்று கூறப்பெறினும், சமுதாய வாழ்வின் அடிப்படை நெறியாகிய இல்லறத்தைத் திட்டமாக வற்புறுத்துகின்றது.

> 'பத்தினி இல்லோர் பல்லறம் செயினும்
> புத்தேள் உலகம் புகார்' (22—117 18)

என்ற அடிகளில், இல்லற வாழ்வை ஏற்காதவர் என்ன அறம் செயினும் பயனில்லை என்பதைச் சாத்தனார் வற்புறுத்திக் காட்டுகிறார். மேலும் துறவியாகிய மணிமேகலையின் கையுள்ள வெற்று 'அமுதசுரபி', சிறந்த இல்லறத்தாளாகிய ஆதிரையின் கையினாலே சோறிடப் பெற்ற பிறகே எடுக்க எடுக்கக் குறையாத நல்ல உணவைத் தந்தது எனக் காட்டி அந்த இல்லற நெறியைப் போற்றுகிறார். அப்படியே துறவறத்தினையும் அதனொடு சார்ந்த பிறவற்றையும் அறமெனக் காட்டாது, உலகில் இன்றியமையா உணவினை அளிக்கும் சிறப்பினையே அறமெனக் காட்டுகிறார்.

'அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதுஇல்' (25—228 மு 31)

எனக் காட்டுவதோடு. இந்த உணவிடும் அறத்தாலேயே மணிமேகலை உயர்வடைந்ததாகச் சுட்டுகிறார். மேலும் வள்ளுவர் போற்றும் தெய்வக் கற்பு நெறியினைச் சுட்டி, பத்தினிப் பெண்டிர் ஏவல் வழியே இயற்கையும் செயலாற்றும் திறனைத்

'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்' (25-57 to 61)

எனச் சுட்டி. நாட்டில் பெண்கள் மேற்கொள்ளும் நல்ல கற்பு வாழ்வினை விளக்குகிறார்.

இப்படியே சாதாரண மக்கள்—சமுதாயத்தொடு பொருந்திய மக்கள் வாழவேண்டிய வாழ்க்கை நெறிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டிய அறங்களையும் ஆங்காங்கே விளக்கிக் காட்டிச் செல்லும் சாத்தனார் தம் வாழ்வொடு பொருந்திய வாய்மொழிகளே 'மணிமேகலை'யை வாழவைக்கின்றன. சிலம்பும் மேகலையும் தமிழில் ஆசிரியப் பாவில் எழுந்த முதல் காப்பியங்கள். அவை இரண்டும் இந்த அறநெறி அடிப்படையிலேயே, காலத்தால் பின் தோன்றிய பல மறைய, சிறக்க வாழ்கின்றன. எனவே சாத்தனார் தம் சமய உண்மையொடு சமுதாய வாழ்வின் அடிப்படை உண்மைகளையும் உணர்த்திச் சாகாவரம்பெற்றுவிட்டார்.

மேலும் பௌத்தர், அக்காலத்தில் கி.பி. தொடக்கத்துக்கு முன்பே, முதன் முதலாகத் தமிழ்நாட்டில் கல்வெட்டுக்களைச் செதுக்கினர். அவற்றில் 'பிராமி' எழுத்தே கையாளப்

பெற்றது. அந்த எழுத்தை நாடு முழுவதும் பரவச் செய்தவர் கள் பௌத்தரே என்பர். எனவே தமிழ்நாட்டிலும் இலங்கை யிலும் அவர்கள் கல்வெட்டுகள் பல உருவாயின. தமிழ் மொழியின் இன்றைய எழுத்து வழங்கும் மரபுக்கு அப் 'பிராமி' எழுத்தும் அதன் வழி எழுந்த வட்டெழுத்தும் அதற்குப்பின் கிரந்த எழுத்தும் பிறவும் காரணமாயின என அறிஞர்கள் சுட்டிக் காட்டுவதால் தமிழ்மொழியின் எழுத்தின் செம்மைக்கும் அமைப்பிற்கும் பௌத்தம் சிறந்த பணி செய்துள்ளது எனவும் கொள்ள இடமுண்டாகிறது.

இவ்வாறு ஒரு காலத்தில் தமிழகம் முழுவதும் பரந்து நின்று மக்களைப் பிணித்து ஆண்டு வாழ்ந்த பௌத்தம் பல சமய, சாத்திர, தருக்க இலக்கியங்களையும் இலக்கணங்களை யும் இயற்றியதுடன் எழுத்து வகையினையும் முறைப் படுத்தித் தமிழை வளர்த்து உதவிற்று என்பது உணரத்தக்க தாகும். ஆம்! அப்பௌத்தர் தம் தொண்டின் திறத்தாலே தமிழ் வளர்த்த மரபினை மணிமேகலையும் பிறவும் என்றும் உலகுக்கு விளக்கிக் கொண்டிருக்கும் என்பது உண்மை எனக் கூறி, அவர் தம் தொண்டு சிறக்க என வாழ்த்தி அமைகின்றேன்.

வணக்கம்.

# வ.வே.சு. ஐயர் தமிழ் இலக்கியப் பணி

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் ஓர் மகிமை இல்லை
திறமான புலமைஎனில் பிற நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'

என்று இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் பாடி, தமிழன் செய்ய

வேண்டிய ஆக்கப் பணியினை நினைவூட்டிச் சென்றார். ஆம்! அத்தகைய தமிழர் தம் திறமான—திண்ணிய—வாழ்வொடு பொருந்திய-சமுதாயத்தின் அச்சுவேரான தமிழ்ப் புலமையை உலகுக்குக் காட்டி, அதன் வழியே பிறநாட்டோரை வணங்கச் செய்யும் ஒரே வழி, நல்ல புலமையால் விளைந்த இலக்கியங் களை ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் மொழி பெயர்த்து, உலக மக்களுக்கு அளிப்பதேயாகும். இத்தகைய நல்ல திறமான இலக்கியப்பணியினைச் செய்தவர் அப்பாரதியா ரொடு நாட்டு விடுதலைப் போராட்டத்திலும் இலக்கியப் பணியிலும் கலந்து தொண்டாற்றிய திரு. வ.வே.சு. ஐயர் அவர்கள் ஆவார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே அன்னை பாரததேவியின் அடிமைத் தளையை நீக்குவதற்கு நாட்டில் உள்ளார் அனைவரும் சாதி, இன, மொழி, சமய, மண்டல வேறுபாடு ஒன்றும் இன்றி ஒரே உணர்வினராய்ப் பாடு பட்டனர். தமிழகத்திலும் அத்தகைய நிலையில் பல தலைவர்கள் தம் உயிரையும் பொருட்படுத்தாது தியாகத் தீயில் குதித்துப் போராடினர். அத்தகைய நல்லவருள் ஒரு சிலர் நாட்டுக்கு மட்டுமன்றித் தம்தாய் மொழிக்கும் தொண்டு செய்து, அன்னைத் தமிழினை அவனிக்கு அறிமுகப் படுத்தினர். தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியாரும் செக்கிழுத்த வ.உ.சிதம்பரனாரும் திரு. வ.வே.சு. ஐயர் அவர் களும் அந்த வரிசையில் முன் நிற்பவராவர். அவருளும் நம் ஐயர் அவர்கள் பணி ஒரு வகையில் உயர்ந்ததாக அமைந்தது.

தமிழில் சிறந்த நல்ல இலக்கியங்கள் மிகப் பழங்காலந் தொட்டே வழிவழியாக வளர்ந்து வந்துள்ளன. அவற்றுள் சிறந்ததாகவும் தமிழுக்குக் 'கதி'யாகவும் இருபெரு நூல் களையே அறிஞர்கள் போற்றுவார்கள். 'கதி' என்ற அச் சொல்லிலேயே அப்பெரு நூல்களை ஆக்கிய இருபெரும்

ஆசிரியர்களும் இடம்பெற்றுள்ளமையைப் பல புலவர்கள்—செல்வகேசவராய முதலியார் போன்ற பல அறிஞர்கள் சுட்டியுள்ளார்கள். ஆம்! அவர்கள் கம்பரும் திருவள்ளுவருமே ஆவார்கள். கம்பரது இராமாயணமும் திருவள்ளுவரது திருக்குறளும் இன்று உலக அரங்கேறி உயர்ந்த தமிழ் இலக்கியங்களாக — வாழ்விலக்கியங்களாக விளங்குகின்றன என்பதை யாரே அறியாதார்! நம் வ.வே.சு. ஐயர் அவர்கள் அந்த இரண்டு இலக்கியங்களை உலகுக்கு அறியச் செய்ய பெருமைக்கு உரியவராவர்.

வ.வே.சு. ஐயர் அவர்கள் பல வடநாட்டுப் பெருந்தலைவர்களுடனும் தென்னாட்டுத் தலைவர்களுடனும் சேர்ந்து ஆற்றிய சுதந்திரப் போராட்டம் பற்றி யாவரும் அறிவர். என்றாலும் அவர் செய்த சிறந்த இந்த இலக்கியப் பணியினை நாடு நன்கு அறிந்து கொள்ளவில்லை. இவர்தம் கம்பராமாயண ஆய்வு பற்றிய ஆங்கில நூலின் முன்னுரையில் சந்தானம் அவர்கள் இவர்தம் இலக்கியப் பணியினைப் பாராட்டிப் பேசிய போதிலும், அப்பணியினைத் தேசத் தொண்டிற்கு இரண்டாவதாகவே குறிக்கின்றார். 'The author V.V.S. Aiyar, who undertook this difficult task of Presenting the study in English of Kambaramayana was a remarkable personality' எனப் புகழ்ந்து 'Aiyar's love of Tamil Language and his eagerness to enrich it and interpret it to the non Tamils was second only to his passion for Indian Independence' என அவர்தம் தமிழ்ப் பற்றினுக்கு இரண்டாம் இடமே கொடுக்கின்றார். (P. 16 Ed. 1950) எனினும் ஐயரின் வரலாற்றைக் குறித்த திரு. R. A. பத்மநாபன் அவர்கள், ஐயர் அவர்கள் காசிக்குச் சென்று இறைவனை வழிபட்டு இரண்டுவரங்கள் வேண்டியதாகவும் அவற்றுள் ஒன்று—முதலாவது 'தாய்மொழியை வளம்பெறச் செய்யும் வகைக்கு வழி காணுவது' என்றும், இரண்டாவது

ஆரியசமாச அமைப்பில் குருகுல முறையில் கல்விக்கூடம் அமைப்பது என்றும் குறிக்கின்றார். எனவே ஐயர் அவர்கள் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்துவதையே முதற்பணியாகக் கொண்டார் எனத் தெளிதல் வேண்டும். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே' என்ற பாரதியார் பாடிய அடிகளின் முறையிலேயே தாய்மொழியும் தாய்நாடும் இருகண்களென ஐயரால் போற்றப்பெற்றன எனக் கொள்ளல் பொருத்தமாகும். எப்படியாயினும் அந்த நாளில் ஐயர் அவர்கள் கம்பனையும் வள்ளுவரையும் உலகுக்கு மொழி பெயர்த்து வழங்கிய அரிய தமிழ் இலக்கியப் பணியினை நாடு நன்கு அறியும். எனினும் அந்த இருநூல்களும் இன்று தமிழ் நாட்டில் தமிழ் ஆய்வாளருக்கும் பிறநாட்டு அறிஞர்களுக்கும் கிடைக்கா நிலையினை எண்ணி வருந்த வேண்டியுள்ளது. தமிழக அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ இத்தகைய நூல் மக்களிடை என்றும் கிடைக்கும் வகையில்அச்சிட்டு வழங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஐயர் தம் இப்பணி உலகுக்கு விளக்கும் வகையில் இப் பேச்சினை ஏற்பாடு செய்த சென்னை வானொலி நிலையத்தைப் பாராட்டு கிறேன்.

ஐயர்தம் இருபெரு மொழிபெயர்ப்பு நூல்களைத் தொடுமுன் அவர்தம் பிறபணிகளையும் ஓரளவு காணல் ஏற்புடைத்தாகும் என எண்ணுகிறேன். ஐயர் அவர்கள் பத்துக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்தவர். எனினும் அவர்தம் கட்டுரைகளிலும் பிற எழுத்துக்களிலும் தமிழ் மொழியினைத் தவிர்த்து வேற்று மொழிகளைக் கலவாத உயர்ந்த இலக்கியப்பணி அவருடையது. அப்படியே அவர் பேச்சிலும் வேற்றுமொழி விரவியதில்லை என்பர் அறிந்தோர். இந்த நெறியில் அவர் வருங்காலச் சந்ததிகளுக்கு—தமிழ் இலக்கியத்தை வளர்ப்பவருக்கு—ஒரு சிறந்த வழிகாட்டி

யாக நின்றார் என்பது பொருந்தும். மேலும் அவர்தம் நடையும் மிக எளிமையாகவும் தெளிவாகவும் இருக்கும் என்பர்.

'தேசபக்தன்' என்ற இதழுக்கு முதன்முதல் திரு.வி.க. அவர்கள் ஆசிரியராக இருந்தார். அவருக்குப் பிறகு ஐயர் அவர்களே 1920இல் ஆசிரியர் பொறுப்பேற்று நல்ல தமிழ் மரபைக் காத்துக் கட்டுரைகள் எழுதினார். சிலவற்றை அக்காலத்திலிருந்த 'அன்னிபெசண்ட்' அம்மையார் அவர்கள் அவர்தம் "New India' என்ற ஆங்கில இதழில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டமை ஐயர்தம் எழுத்துத் திறனை நன்கு விளக்கும். மற்றும் இவர்தம் உணர்வூட்டித் தட்டி எழுப்பும் திறன் வாய்ந்த கட்டுரை ஒன்றிற்காகவே இவர் சிறை செல்ல நேர்ந்தது என்பதும் இங்கே குறிப்பிட வேண்டியதாகும். தோற்றத்தில் எளிமையும் உளத்தில் தூய்மையும் கொண்டு ஐயர் அவர்கள் ஆற்றிய தமிழ் இலக்கியப்பணி அளவிலே இனி, அவர்தம் மொழிபெயர்ப் பினால் செய்த இலக்கியப்பணி பற்றிச் சிறிது நோக்குவோம்.

கம்பரது கவியில் தோய்ந்த ஐயர் அவர்கள் பலவகையில் அவர்தம் இராமாயணத்தை ஆராய்ந்து பாத்திரங்களைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் எழுதியுள்ளார். தில்லித் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட இதன் முதல்பதிப்பை தில்லி வித்தியாபவன் இரண்டாவது வெளியிட்டுள்ளது. தமிழ் நாட்டில் ஒருவருமே அதுபற்றி எண்ணாதது வியப்பல்லவா!

வான்மீகத்தைக் கம்பர் கதைக்காக எடுத்துக் கொண்டாரே ஒழிய அதை அப்படியே மொழிபெயர்க்க வில்லை என்பதும் அதில் காட்டிய பல மரபுகளைத் தொடாமல் தமிழ் மரபுக்கு ஏற்பக் கதையினையும் மாற்றி எழுதியமையே கம்பரை என்றும் வாழவைக்கிறது என்பதும் நாம் அறிவோம். இந்த உண்மையினை ஐயரவர்கள் தம்

முன்னுரையில் அழகாக எடுத்துக் காட்டுகின்றார். அவர்தம் ஆங்கிலத் தொடர் மொழியினை அப்படியே தருகிறேன்.

'I spoke of Valmiki's work as the original of Kamban's Ramayana. But, Kamban has not translated Valmiki. He has merely taken the story immortalised by the Aryan sage and though he has followed it closely enough in all its details, has written an entirely original poem' (Bhavans Editor , p.1)

இந்த உண்மையினைப் பலவிடங்களில் ஐயர் அவர்கள் விளக்கிக் காட்டவும் தவறவில்லை. நல்ல இலக்கியம் அது வழங்கும் நாட்டுமக்கள் மரபுகளுக்கு ஏற்ப இல்லையாயின் வாழாது என்பதைச் சுட்டிக்காட்டி இலக்கிய மரபினை விளக்கும் ஐயர்தம் இலக்கியப்பணி போற்றற்குரிய ஒன்றல்லவா! இவ்வாறே வால்மிகத்தில் இல்லாத இரணியப் படலத்தினைக் கம்பன் புகுத்திய காரணத்தையும் யுத்தத்தைப் பற்றி இராவணன் சூழ்ந்து ஆராய்ந்த அந்த வேளையில் வீடணர் 'மாற்றான் வலி' விளக்கும் முகத்தால் அதை விளக்கிய வகையினையும் தெளிவு படுத்தி ஓர் இலக்கிய விமர்சனம் செய்கின்றார் ஐயர் அவர்கள் (P. 142-143).

சீதையைக் கண்ட அனுமன் கூறிய தனிமொழிப் பாடல்களைத் திறம்பட மொழி பெயர்த்து, அங்கே கம்பர் வால்மிகியை எவ்வாறு விஞ்சுகிறார் என்பதைத் தெளிவாக்கி, இறுதியில் அது பற்றித் தன் கருத்தையும் அதன் வழியே கம்பன் நிலைநாட்டிட விரும்பிய அறநெறியினையும் சுட்டுகிறார். இதோ அவர் வாக்கு.

'The reader will agree after reading the above that Kamban has risen to the highest ideals of loyalty to a heroic master and of love of Dharma in this solilogue of Hanuman. (p. 196)

மேலும் சிலவிடங்களில் வால்மிகியைக் கம்பன் விஞ்சுவதை ஆங்காங்கே சுட்டிக்கொண்டே செல்கின்றார் ஐயரவர்கள். சீதை தன் கிளிக்கு யார் பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டபோது, இராமன் 'கைகேயி' தன் பெயரை வைக்கவேண்டும் என்ற இடமும் இவை போன்ற பிற இடங்களும் சுட்டி, கம்பன் வால்மிகியினும் பாத்திரப் படைப்பில் விஞ்சிய சிறப்பினையும் அதன் வழியே தமிழ் இலக்கியத்தின் ஏற்றத்தினையும் தெளிவுபெற வைக்கிறார். இராமனைப் பற்றிச் சொல்லும் ஓர் இடத்தில் இதை வெளிப்படையாகவே எழுதியுள்ளார். 'Valmiki has set the stamp on the characters of the Ramayana. But in Kamban's hand they have become much more grand' (p. 44) என்பது அவர் வாக்கு.

அவருடைய மொழிபெயர்ப்புத் திறனும் ஓரிரு இடங் கண்டு அமையலாம்.

மாரிக்காலம் கழித்து, வருவதாகச் சொன்ன சுக்கிரீவன் வாராநிலையில், இராமன் இலக்குவனை அனுப்பியபோது உள்ள பாடல்கள் பல. அவற்றுள் ஒன்று இது.

'வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்து
இம்பர் நல்லறம் செய்ய எடுத்த விற்
கொம்பும் உண்டு அருங்கூற்றமும் உண்டு உங்கள்
அம்பும் உண்டு' என்று சொல்லு நம் ஆணையே

(கிட்கிந்தைப் படலம் 4)

இதற்கு ஐயர் அவர்கள் செய்த மொழிபெயர்ப்பைக் காண்போம்.

'Tell him' said Rama that the bow which we have bent to' stabish Righteousness and end all evil ones, unbroken yet doth rest in our hands; and let him know that Yama has not yet ceased to work, nor we to hand 'e

darts) வால்மிகியைப் பலவிடங்களில் கம்பர் விஞ்சுவது போன்று, இந்த இடத்தில் நம் ஐயர் கம்பனையும் விஞ்சி விடுகிறார் அல்லரோ.

'சாணினும் உளன்; ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும்
உளன் இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்;
இத்தன்மை
காணுதி விரைவில்' என்றான் (இரணியப் படலம் 124).

என்ற இறைத்தன்மையை விளக்கும் பிரகலாதன் வாக்காகக் கம்பன் கூறும் பாடலை ஐயர் அவர்கள் கீழ்க்காணுமாறு மொழி பெயர்த்துள்ளார்கள்.

'What of this Column, father, said Prahalatha Thou et find him in a span of space; divide an atom into an hundred parts and thou will 'et find my God in every one of them. He is in Meru hills, thy very words, I say are fill with him and thou will find 'Fore long my every word a solemn truth—enough of words'.

அனைவரைப் பற்றியும் ஆராய்ந்த ஐயரவர்கள் சீதையைப் பற்றி ஆராயுமுன் அவரே மறைந்த அவல நிலையினை எண்ணி, தில்லித் தமிழ்ச் சங்கத்தார் உகுத்த கண்ணீர் கலந்த சொற்களை இங்கே காட்டல் ஏற்புடைத்தாகும் என எண்ணுகிறேன்.

'V.V.S. Iyar had intended to crown his work with the character study of Sita and had befittingly reserved it to the last. Cruel fate however, stretched its talons and tragically snatched him away from this world before he could sing Sita's. virtue' இவ்வாறு கழிவிரக்கம் கொள்ளும் நிலை நம் யாவருக்கும் உண்டாகின்றதன்றோ

இந்த நிலையில் இராமாயண இலக்கியப் பணியினை நிறுத்தி, ஐயர் அவர்கள் வள்ளுவர் குறள் வழியே கண்ட இலக்கியப் பணியினைக் காண்போம்.

குறள் உலக இலக்கியம். எனினும் ஐயரைப் போன்ற அறிஞர்கள் அதை வேற்றுமொழிகளில் மொழிபெயர்த்து உதவியதனாலேதான் அது 'உலக இலக்கியம்' என்ற பெயரைப் பெற்றது. ஐயர் அவர்களுக்குமுன் வேறு சிலரும் இக்குறளுக்கு மொழிபெயர்ப்பு ஆங்கிலத்திலும் பிறமொழி களிலும் செய்திருக்கிறார்கள் என்றாலும் அவர்களுள் பலரும் தமிழ் மரபினை அறியாதவர்களாதலின், வள்ளுவர் உள்ளத்து உருவான கருத்துக்களை நன்கு புரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. ஐயர் அவர்கள் தமிழ் உள்ளம் வள்ளுவர் உள்ளத் தைப் புரிந்து கொண்ட காரணத்தினாலேயே இவர் மொழி பெயர்ப்புப்பணி செம்மையாக அமைந்துள்ளது எனலாம். ஐயர் அவர்கள் மொழிபெயர்ப்பினை 1916ஆம் ஆண்டு சுப்பிர மணிய சிவா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். அதற்குப் பிறகு வேறு பதிப்புக்கள் வந்தனவா என்பது தெரியவில்லை; வந்திருக்கலாம். எனினும் இன்று எதுவும் கிடைக்காத நிலையில், தமிழகம் ஐயர் இலக்கியப் பணியினை அறிந்து கொள்ளாவகையில் நிற்கிறது. இந்த நிலை மாற வேண்டும்; விரைவில் அந்நூல் வெளிவர வேண்டும்.

தம்மொழிபெயர்ப்பின் முன்னுரையில் ஐயரவர்கள், வள்ளுவர்தம் குறள் சாதி, மொழி, இன, நாடு, காலவேறு பாடுகளைக் கடந்து எல்லாருக்கும் எப்போதும் ஒத்த நிலையில் அறம் வழங்குவதைச் சுட்டிக்காட்டி, அந்நிலையில் 'தாம் பெற்ற இன்பம் உலகம் பெற வேண்டும்' என்ற உணர்வில், தமிழருக்கே உரியதான அதனை உலகுக்கு வாரி வழங்கவேண்டிய எண்ணத்தில் மொழி பெயர்த்ததாகக் குறிக் கின்றார். It is a great pity that such a treasure should

have been Confined for so many ages only to one single peeple even in Hindustan எனக் குறிக்கின்றார் ஐயர் அவர்கள். ஆம்! அவர் சிறந்த உள்ளம் எல்லாரும் குறளின்பத்தைப் பருகவேண்டும் என ஆசை கொண்டது. அதன் வழியான அழகான மொழிபெயர்ப்பு நூல் நமக்குக் கிடைத்தது.

மேலும் தம் முன்னுரையில் வள்ளுவர் வாழ்க்கையினையும் மனைவியின் பண்பினையும் சுட்டி, அதன் வழி தமிழ்ச் சமுதாய இல்லறக் கற்பு நெறி இப்படிப்பட்டதெனத் தெளிவாக்குகிறார். மேலும், தமக்குமுன் மொழி பெயர்க்கப்பெற்றவற்றிலுள்ள குறைபாடுகளை நாகரிகமுறையில் சுட்டிக்காட்டி அதனாலேயே வள்ளுவர் உள்ளத்தைக் காட்டத் தாம் மொழி பெயர்ப்பினைச் செய்ததாகக் குறிப்பிடுகிறார். மேலும் உரையாசிரியராகிய பரிமேலழகரைப் பாராட்டுவதோடு அவர் வள்ளுவர் கருத்துக்கு மாறுபட்ட இடங்களைச் சுட்டுவதோடு அமையாது. தம் மொழி பெயர்ப்பில் அக்குறைகளை நிறைவு செய்கிறார். ‘மக்கட் பேறு’ என்ற அதிகாரத் தலைப்பினை, பெண்களைத் தாழ்த்தும் வகையில் பரிமேலழகர் ‘புதல்வரைப் பெறுதல்’ என்று மாற்றியதை மாற்றி ‘OFF SPRING’ என்றே அழகாக மொழி பெயர்க்கிறார் என்பது ஒரு சான்றாகும்.

ஐயர் அவர்கள் அதிகாரங்களின் தலைப்பினை மொழி பெயர்க்கும்போதும் அவை வைப்பு முறையினை விளக்கும் போதும் அதுவரையில் மற்றவர் காட்டாத வகையில் புதுப் புதுக் கருத்துக்களைப் பெய்து விளக்குகிறார். ஊழ் என்னும் அதிகாரத்தினை அறத்துப்பாலின் கடைசியில் வைத்தமைக்கு ஐயர் காட்டும் விளக்கம் (xxxi) சாலச்சிறந்ததாகும். குறளின் சிறப்பினை அவர் மொழிபெயர்ப்பாலேயே காணல் சிறந்ததாகும். இதோ அவர் வாக்கு :

'And how like a master he plays on the tiny instrument (1¾ அடி). Sparkling with humour the pionted statement, fancy, irony, the naive question, the picturesque simile, there is not one of these and others of the thousand tricks of the born artist that our author has not employed in this perfect master piece of Art' (xxxviii)

இனி அவர்தம் மொழிபெயர்ப்புக்களுள் ஒன்றிரண்டு கண்டு அமைவோம். 'மக்கட்பேறு' என்பதனை 'off spring' என்றும், 'அலர்' என்பதனை 'the public rumour' என்றும், 'புலவி'யை 'Bonderle' என்றும் மொழி பெயர்த்துள்ளமை ஒரு சில எடுத்துக்காட்டுக்களாகும். 'அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழும் இல' (39) என்ற குறளினை, That alone is delight which cometh of Righteousness; all else is pain and shame' என்று கூறி, 'புறத்த' என்பதற்குப் புதுப்பொருளும் அக்குறளுக்குப் பொலிவும் தருகிறார். 'தாமின் புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்பதனை 'The learned man seeth that the learning that delighteth—him delighteth also all that listen to him; and he loveth instruction all the more on that account' என மொழிபெயர்த்துள்ளமை சிறந்த ஒன்றன்றோ'.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள் யாரினும் யாரினும் என்று' (1314) என்ற காமத்துப்பாலின் குறளுக்கு 'I said to her, I love thee above all, and behold, she found at once asking above whom? and above whence?' என்று மொழி பெயர்த்துள்ள திறன் எண்ணி மகிழத்தக்க தன்றோ' இவ்வாறே பல காட்டலாம். இவர் மொழி பெயர்ப்பின் delighteth, loveth என்பன போன்ற சொற்கள் விரவிய பழைய ஆங்கிலநடை, மொழி பெயர்ப்புக்கு மேலும் சுவை ஊட்டுகிறது.

இவ்வாறு தமிழுக்குக் கதியாகிய கம்பரையும் திருவள்ளுவரையும் உலகுக்கு உணர்த்திய மாபெரும் தமிழ் இலக்கியப்பணி செய்த வ.வே.சு. ஐயர் அவர்கள் புகழ் வையம் உள்ளளவும் வாழும் என்பது உறுதி. தமிழக அரசும் தமிழரும் அவர் தம் நூல்களை நல்ல முறையில் வெளிக் கொணர்ந்து தமிழன்னையின் அழகினை மேலும் பொலிவுறச் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளுடன் அமைகின்றேன்.

வணக்கம்.

# தனித் தமிழ் இயக்கம்

**மொ**ழி மனிதன் பிறரொடு கலந்து வாழப் பயன் படுகிறது. வளர்ச்சி அடைந்த மொழிகளில் இலக்கண இலக்கிய வளங்களும் நிரம்பியிருக்கும். அத்தகைய மொழிகள் பல உலகில் உள்ளன. நம் நாட்டிலும் பல மொழிகள் உள்ளன. அவற்றுள் தென் இந்தியாவில் பேசப் பெறுகின்ற மொழிகள் 'திராவிட மொழிக் குடும்பத்தைச்' சார்ந்தவை. அம்மொழிகளுள் தொன்மையானது—தாய்மையாகக் கொள் ளக்கூடியது தமிழாகும். அதில் பிறமொழி கலவாது காக்க எழுந்த இயக்கமே 'தனித் தமிழ் இயக்க' மாகும்.

தமிழ் மொழி மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டே இலக்கிய வளம் வாய்ந்தது. பழைமையான இலக்கணமாகிய தொல்காப்பியத்திலும் பின்வந்த சங்க இலக்கியங்களிலும் தமிழின் தனித் தன்மையினையும் பண்பினையும் காண முடியும். சங்க இலக்கியங்களில் ஒருசில வேற்று மொழிச் சொற்கள் இருப்பினும் அவை விரல்விட்டு எண்ணக் கூடியவையாம்.

பிற்காலத்தில் வேற்று நாட்டு அரசியல் படையெடுப்பு மட்டுமன்றி, சமய, சமுதாய நுழைவுகளாலும் வடக்கிருந்து வந்த வடமொழியாகிய சமஸ்கிருதம் தமிழ்மொழியில் புகுந்தது. எனினும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்று அவ்வடமொழி தமிழில் அதிகமாகக் கலக்கவில்லை. களப்பிரர் காலமாகிய 3-6ஆம் நூற்றாண்டிலும் பிற்காலச் சோழர் காலத்திலும் வடமொழி சமய, வாழ்வியல் வகைகளில் அதிகமாகக் கலந்த போதிலும், அவை அடுத்தடுத்து ஒதுக்கப்பெற்றன.

சென்ற நூற்றாண்டில் சமயம் வளர்க்க மேலை நாட்டிலிருந்து வந்த கால்டுவெல் பெருமகனார் இத்திராவிட மொழிகளை ஆராய்ந்து ஒப்பிலக்கண நூலை எழுதினார். அதில் பிற மொழிகள்—சிறப்பாக ஆரிய மொழி, திராவிட மொழிகளில் கலந்தமை காட்டி, தமிழ் தனித்தியங்கும் தன்மையினையும் விளக்கியுள்ளார். 'Dravidian languages independent of Sanskrit' (1956 eg. pg. 40—52) திராவிட மொழிகள் வடமொழி இன்றியே தனித்தியங்க வல்லன என்றே தனித் தலைப்பிட்டு, அவற்றை விளக்கிக் காட்டுவதோடு, தமிழ் வடமொழியின்றியே தனித்தியங்கிச் சிறப்புறும் எனத் திட்டமாகக் கூறியுள்ளார். 'Tamil can readily dispense with the greater part or the whole of the Sanskrit and by dispensing with it, rises to a pure & more refined style (p. 47). இது தனித்தமிழ் இயக்கத்துக்கு வித்து எனலாம்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே தமிழ்நாட்டில் அரசியல் மறுமலர்ச்சி அடிப்படையில் ஓர் எழுச்சி அமைந்தது. தொடர்ந்து நீதிக்கட்சி ஆட்சியில் அமர்ந்தபோதும், பின் ஈ.வே. இராமசாமிப் பெரியார் போன்றார் சமுதாயப் புரட்சி கண்ட போதும் அவற்றின் வேகம் மொழியிலும் தாக்க ஆரம்பித்தது. அதுவே பின் தனித்தமிழ் இயக்கம் எனப் பெயர் பெற்றது. தத்தம் வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்

பெயர்களாக மாற்றி அமைத்துக் கொண்டவர் சிலர். 'சூரிய நாராயண சாஸ்திரியார்' 'பரிதிமாற் கலைஞரானார்'; சுவாமி வேதாசலம் 'மறைமலை அடிகளா'னார். இந்த வகையில் பெயர் மாற்றமன்றி, எழுதுவது பேசுவது அனைத்திலும் தனித் தமிழ்ச் சொற்களே இடம்பெற வேண்டும் என்று சிலர் துணிந்தனர். அவர்களுள் முன் நின்றவர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகளாராவர். நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற அறிஞர்களும் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வ. சுப்பையாப்பிள்ளை போன்ற செயலர்களும் இந்த இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டனர். பெரியார், ஈ.வே.ரா. போன்றவர்கள் இந்த இயக்கத்தில் அவ்வளவாக ஈடுபடவில்லை எனலாம்.

பின் இராஜாஜி அவர்கள் முதலமைச்சரான காலை கட்டாய இந்தியைப் புகுத்தியபோது அனைவரும் ஒன்று திரண்டு எதிர்த்தனர். அந்த எதிர்ப்பின் காரணத்தாலும் 'தனித்தமிழ் இயக்கம்' தலைநிமிர்ந்து நின்றது. தனிமனிதர் பெயர்களும் சில ஊர்ப் பெயர்களும் பண்டைத் தமிழ்ப் பெயர் களாக மாற்றப் பெற்றன. பழந்தமிழ்ப் பெயர்களைத் தத்தம் மக்களுக்கும் மனைகளுக்கும் சிலர் இட்டு மகிழ்ந்தனர். எனினும் இந்த இயக்கம் பொதுமக்கள் இயக்கமாக மாற வில்லையாதலால் நாட்டில் நிலைத்துக் கால் கொள்ள வில்லை-அறிஞர் சிலரும் அவரைச் சார்ந்தோரும் தனித்தமிழ் சொற்களை அழைப்பிதழ் போன்றவற்றிலும் பிறவற்றிலும் பயன்படுத்தி வருகிறார்கள்.

பொதுவாக இந்த இயக்கம் நிலைத்துக் கால் கொள்ளா விடினும் இன்று நாட்டின் பல ஊர்ப் பெயர்கள் பழந்தமிழ் பெயர்களைப் பெற்று வருகின்றன. மக்களுள் சிலர் நல்ல பழந்தமிழ்ப் பெயர்களை மக்களுக்கு இட்டு அழைக்கின்றனர்.

உரைநடை, கவிதை இலக்கியங்கள் ஓரளவு தனித்தமிழ் மரபைப் பின்பற்றுகின்றன. என்றாலும் முற்றும் இந்த இயக்கம் வெற்றி பெற்றது என்று சொல்ல இயலாது.

அண்மையில் தமிழில் வடமொழி அன்றி ஆங்கிலத்தையும் கலந்து கதைகளும் பிறவும் எழுதப் பெறுகின்றன. அவற்றை வெளியிடும் பத்திரிகைகளே இலட்சக் கணக்கில் விற்பனையா கின்றன, அறிஞர்களும் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. கவிஞர்களும் புதுக்கவிதை அமைப்பதில் எத்தனையோ வேற்று மொழிச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். தமிழ் வளர்க்கும் அரசாங்க அறிக்கைகளும் தனித் தமிழில் இல்லை. எனவே இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே வீறுற்றுப் பரவிய இந்தத் 'தனித்தமிழ் இயக்கம்' இந்த நூற்றாண்டின் இறுதியிலே மற்றொரு இருண்ட கால நிலையினை எய்துமோ என்ற அச்சம் உண்டாகிறது. ஆயினும் கால்டுவெல்லும் பிற அறிஞர்களும் காட்டியபடி, தமிழ் என்றும் தன் தனித்தன்மை கெடாது விளங்கும் என்பது உறுதி.

# புரட்சிக் கவிஞருடன் நான்

**நான்** அன்று (1926) வாலாஜாபாத் இந்து மத பாட சாலையில் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அந்த ஆண்டில்தான் காஞ்சியில் காங்கிரஸ் மாநாடு நடந்தது. அதில்தான் பெரியார் காங்கிரசினை விட்டு விலகி, தமிழர் களுக்குத் தனிக் கட்சி தொடங்க எண்ணினார். அந்தக் காஞ்சி மாநாட்டுக்கு வந்த மூவரை—வரதராசலு நாயுடு, பெரியார், திரு.வி.க—பள்ளிக்கு அழைத்து 'வந்து விழா நடத்தினர் நிறுவனர் வா.தி.மா. அவர்கள்—சாதி ஒற்றுமையா அன்றிச் சாதி வேற்றுமையா' என்ற சொற்போரில் நான் சாதி

ஒற்றுமை பற்றிப் பேசினேன். தலைவர் நாயுடு அவர்கள் தமக்கிட்ட மாலையை என் கழுத்தில் இட்டு, 'வருங்காலத்தில் நீ சிறப்பாய்' என வாழ்த்தினார். மற்றவர் இருவரும் தட்டிக் கொடுத்துப் பாராட்டினர். அன்று முதலே சமூகத் தொண்டிலும் தமிழர் உயர்விலும் கருத்துடன் உழைத்த நான் 1938இல் காஞ்சியில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைச் சந்தித்தேன்.

1926 முதல் பள்ளிப்படிப்புடன் சமூகத்தொண்டு ஆற்றிய நிலையில் 1939இல் பெரியார் செங்கற்பட்டில் நடத்திய முதல் சுய மரியாதை மாநாட்டில் முக்கிய தொண்டனாகப் (Volunteer) பணியாற்றினேன், அதே வேளையில் காந்திஅடிகளின் உப்புச் சத்தியாகிரகத்தை ஆதரித்து ஊர்வலம் நடத்திய காரணத்தால் நீதிமன்றத் தாழ்வாரத்தில் மாலை வரை சிறையில் இருந்தேன்.

1937இல் இராஜாஜி அவர்கள் தலைமையில் அரசு அமைய அவர்கள் இந்தியைப் புகுத்திய போது நான் எதிர்த்தேன். நான் 1926இலிருந்தே பல சமய, அரசியல் கூட்டங்களில் பங்கு கொண்டிருந்தமையின் பெரியார், திரு.வி.க. அண்ணா போன்றோர் தொடர்பு இருந்தது. 1936இல் திரு.வி.க. எங்கள் கிராமத்துக்கே வந்து என்னை வாழ்த்தினார். பெரியார் வீட்டிலேயே பெரியஅன்னையார் கையாலேயே—ஈரோட்டில் உணவருந்தியவன் நான். எனவே இந்தியை எதிர்க்கத் துணிந்ததில் வியப்பில்லை அல்லவா!

1938இல் காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. நான் அப்போது அங்குள்ள ஆண்டர்சன் பள்ளியில் தமிழாசிரியனாகப் பணியாற்றி வந்தேன். அரசியலில் ஈடுபட்டு, மாவட்டக் கழகத்துக்குப் போட்டியிட்டு வென்றேன். அண்ணா அவர்கள் மாட்டு வண்டியில் வந்து எனக்காக முயன்றார். எனவே அந்த வேளையில் நடந்த இந்தி எதிர்ப்பில் நான்

முக்கிய பங்கு பெற்றேன். அந்த மாநாட்டுக்குப் பலர் வந்திருந்தனர். அதில் புரட்சிக் கவிஞரும் ஒருவர். அப்போது தான் அவர்களை நேரில் கண்டவனாயினும், எனக்கு அவரிடம் பற்றும் பாசமும் உண்டாயிற்று மாநாட்டுக்கிடையில் பிற்பகல் மூன்று மணி அளவில் என் வீட்டிற்கு வருமாறு அழைத்தேன். மாநாட்டின் தொடர்ச்சி மாலை 4 மணிக்குத் தான். எனவே அவர்கள் என்னுடன் என் இல்லம் வந்து, நான் அளித்த சிற்றுண்டியையும் உட்கொண்டு பின் மாநாட்டுக்குச் சென்றார். நானும் உடன் சென்று மாநாடு முடிந்த பின் அனைவரையும் வழியனுப்பிவிட்டு வந்தேன்.

பின்பு கவிஞர் அவர்களை அடிக்கடி காண வாய்ப்பு இல்லையாயினும் அவர்தம் பாடல்களை விருப்போடு படித்து வருவேன். பின் சென்னையில் பழைய பச்சையப்பர் கல்லூரிக்கு எதிரில் இருந்த பச்சையப்பர் பயன்படுத்திய விளையாட்டுத் திடலில் (தற்போது முற்றும் கட்டடங்களாக மாறி விட்டது) அவருக்குப் பாராட்டும் பண முடிப்பும் கொடுத்தபோது நானும் கலந்து இருந்தேன். பெரும் பங்கு கொள்ள வில்லையாயினும் அவரைத் தனிமையில் கண்டு வாழ்த்தி மகிழ்ந்தேன். பின் சில மாநாடுகளிலும் வேறு நிகழ்ச்சிகளிலும் கண்டு மகிழ்ந்தேன். இன்று அவர்தம் பாடல்கள் நாட்டுடைமையாக்கப் பெற்றபோது, தமிழ் நலம் சான்ற அவர் நூல் ஒன்றை நான் என் வள்ளியம்மாள் கல்வி அற வழியில் இயங்கும் தமிழ்க்கலைப் பதிப்பகத்தின் வழியே வெளியிட வேண்டி, தமிழகப் பண்பாட்டுத்துறைச் செயலரிடம் கூறினேன். ஆயினும் இன்றுவரை அவர் முடிவு சொல்லவில்லை.

அண்ணாநகரில் உள்ள எங்கள் பள்ளியில் இன்றும் புரட்சிக் கவிஞரின் கொள்ளுப் பேரப் பிள்ளைகள் பயின்று வருவதால் அவர் தம் தொடர்பும் நினைப்பும் எனைவிட்டு நீங்காமல் உள்ளன. அவர்தம் மகள் (கரூரில் பணியாற்றியவர்)

வயிற்றுப் பேரனுக்கு எங்கள் பள்ளி ஆசிரியை ஒருவர் துணைவியானார், (தற்போது மாநகராட்சியில் பணியாற்று கிறார்). அவர்தம் குழந்தைகள் எங்கள் பள்ளியில் பயின்று வருகின்றனர். அவர்களைக் காணும் போதெல்லாம் கவிஞரை நினைத்து மகிழ்வேன். நான் எப்போதும் யாருடனும் நெருங்கிச் செல்லாது 'அழலின் நீங்கான் அணுகான்' என்ற மொழிப்படி அமைந்து இன்று வரை வாழ்வதால் அவரு டனும் நெருங்கிப் பழகவில்லை. அதனால் இன்றும் பல ருடைய வெறுப்புக்கு ஆளாகின்றேன். என் செய்ய? அது என் நிலை, அவர்தம் பாடல்கள் பல. உலகம் அவர் பாடல்களைப் போற்றுகின்றது. நான் உளங்கொண்ட இரண்டொன்றினை மட்டும் இங்கே காட்டி அமைகின்றேன்.

ஆங்கில இலக்கியம் பல கண்டு, மக்கள் உள்ளத்து உணர் வூட்டிய பெர்னாட்சா அவர்கள்

'There was only one Christian who died on the cross' என்று சொல்லிய வாசகம் எனக்கு அடிக்கடி நினைவுக்கு வரும். கிறித்தவ சமயத்துக்கு மட்டுமின்றி, எல்லாச் சமயங் களுக்கும் இது பொருந்தும் என நான் என் நூல்கள் இரண் டொன்றில் குறித்தும் இருக்கிறேன். நம் கவிஞர் அவர்கள் இந்தக் கருத்தினை விளக்கியதோடு, இன்றைய திருச்சபை கள்—கோயில்கள் உள்ள நிலையினைத் தம் பாடலில் சுட்டு வதை எண்ணி எண்ணி வியந்தேன். பிரஞ்சு நாட்டு திருச்சபை ஒன்றிற்கு ஈஸ்டர் சண்டே நாளில்—நான் சென்ற போது இப்பாடல் என் நினைவுக்கு வந்தது. அதை அப்படியே என் நூலில் (ஏழு நாடுகளில் எழுபது நாட்கள், பக்கம் 48) குறித்துள்ளேன். அந்தப் பாடலை இங்கே எழுதலாம் என எண்ணுகிறேன்.

'தலை காது மூக்கு கை கழுத்து மார்பிடுப்புடன்
தாள் என்ற எட்டுறுப்பும்
தங்க நகை வைரநகை ரத்தனம் இழைத்த நகை
தையலர்கள் அணியாமலும்
விலை குறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர
வேண்டுமென்றே பாதிரி
விடுத்த ஒரு சேதியால் விடமென்று கோயிலை
வெறுத்தார்கள் பெண்கள் புருடர்
நிலை கண்ட பாதிரியின் எட்டுறுப்பே யன்றி
நீள் இமைகள் உதடு நாக்கு
நிறைய நகை போடலாம் கோயிலில் முகம் பார்க்க
நிலைக் கண்ணாடியும் உண்டெடன
இலைபோட் டழைத்ததும் நகைபோட்ட பத்தர்கள்
எல்லாரும் வந்து சேர்ந்தார்
ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லையே
இனிய பாரத தேசமே'

*சமயத்தில் சீர்திருத்தம் காண விழைந்த கவிஞர் சமுதாயத்திலும் சீர்திருத்தம் காண விழைந்தார். நயமாகவும் பயமாகவுகம் பலப்பல வழிகளைப் பாடிக் காட்டினார். ஆயினும் சமுதாயம் அதற்கெல்லாம் இசையாதே! எனவே புரட்சி வழி ஒன்றே சமுதாய வாழ்வைச் சரி செய்ய—ஏற்றத் தாழ்வை அகற்ற—ஏற்ற வழி என்று கண்டார்—எழுதினார்.*

'ஓடப் பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகி விட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பராகிடுவார் உணரப்பா நீ'

*என்ற அவர்கள் வாக்கு இன்றும் தேவையோ என்ற வகையில் சமுதாயம் மாசுபடிந்து வருகின்றது. 'நல்ல கவிஞர் வாக்கு நாட்டில் பொய்யாவதில்லை' என்ற பழமொழி ஒன்று*

உண்டு. அதன் வழி இப்புரட்சிக் கவிஞர் வாக்கு, புவியில்—நாட்டில் மெய்யாகும் நாள் வருமோ என அஞ்ச வேண்டியுள்ளது.

கவிஞர் தம் தமிழ் நலம் காட்டும் பாடல்களையும் பிறவற்றையும் அவற்றில் வரும் உவமை நலம் போன்றவற்றையும் பலப்பல அறிஞர்கள் நன்கு காட்டுகிறார்கள்—கண் உள்ளவர் காண்கிறார்கள் எனக்கு மனத்தில் பட்ட ஒரு நல்ல உவமை 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் வரும்' ஒன்றாகும். பிற வெல்லாம் சிறந்தவையே. நான் இங்கே எடுத்துக்காட்டாக ஒன்றையே காட்டுகிறேன்.

அப்பெருமலையை ஆடாது அசையாது சிதறாது சிறுமை உறாது கொண்டு வைத்தற்கு உவமையாக

'கண்ணாடிப் பாத்திரத்தைக் கல் தரையில் வைப்பது போல்'

என்று காட்டியது. 'அந்தப் பகுதி தான் ஆச்சரிய மாகு மடி' என்ற படி எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. இப்படி எத்தனை எத்தனையோ காணலாம். பலர் அன்று தொட்டுக் காட்டிக் கொண்டே உள்ளனர்.

இந்த ஆண்டில் அவர் தம் நூற்றாண்டு விழா நடைபெறுகிறது. நான் எதிலும் ஒதுங்கி நிற்பது போல் இதிலும் ஒதுங்கியே நிற்கிறேன். எனினும் அன்பர் வேண்டுகோளின் படி இக்கட்டுரை எழுதி முடிக்கின்றேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புகழ் தமிழ் உள்ளளவும் வளரும் என்பது உறுதி. தமிழ் வாழ—அதன் வழியே கவிஞர் வாழ நாம் வாழ்த்துவோமாக!

# தாய் மொழி

'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்று ஒளவையாரும், 'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே' என்று பாரதியாரும் தாயே உலகில் அனைத்தினுக்கும் மேம்பட்டவள் என்பதை நன்கு காட்டியுள்ளனர். தன் உதரத்தில் பத்துமாதம் சுமந்து பெற்றதோடு, பிறந்த குழந்தை நலமுற்று வளர, தன் வாழ்வைத் தியாகம் செய்து, தான் குழவிக்காக மருந்துண்டு, தன் பாலூட்டி வளர்த்து ஆளாக்கும் அன்னை உயர்ந்தவள் தானே. இறைவன் கருணையே எண்ணுகின்ற மணிவாசகர் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' எனப் பாடுகின்றார். எனவே உலகில் பிறந்த ஒவ்வொருவரும்—ஒவ்வொரு உயிரும் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்ற வேண்டியவர் தாயாகின்றாள். இந்த நிலையில் மக்கள் வாழ்வை நலமாக்கும்—வளரச் செய்யும் எதையும் தாய்க்குச் சமமாக எண்ணுவது இயல்பாகும். இந்த அடிப்படை அமைதியிலேயே 'தாய்மொழி' 'தாய்நாடு' என்று நம்மொழியையும் நாட்டையும் போற்றுகிறோம்.

'மொழி' மனிதன் பிறரொடு கலந்து வாழக் கருவியாக அமைகின்றது. தான் பிறந்து முதலில் அன்னையோடு பேசுகின்ற மொழியினையே 'தாய்மொழி' என்பர். 'பிறந்து மொழி பயின்று பின்னெல்லாம் காதல் சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்', என்பார் காரைக்காலம்மையார். ஆம்! பிறந்ததும், மழலை மொழியில் பேசுவதையே தாய்மொழி என்கின்றோம். இன்றைய உலகில்—பலநாட்டவரும் பல மொழியினரும் மிக அதிகமாக நெருங்கிக் கலந்து பழகும் பான்மையில் ஒருவர் பல்வேறு மொழிகளைக் கற்கினும், ஒவ்வொருவருக்கும் 'தாய்மொழி' என்ற ஒன்றிடம் தனிப் பற்று உண்டு. ஆங்கிலத்தில் வல்லவரான காந்தி அடிகள் தம் வாழ்வு நூலைத் தம் தாய்மொழியாம் 'குஜராத்தியிலே

எழுதினார். உலகப்புகழ் பெற்ற கீதாஞ்சலியைக் கவிஞர் தாகூர் முதலில் தாய்மொழியாகிய 'வங்க' மொழியிலேயே எழுதினார், 'Silver tongue Sastriyar' என்று அவர்தம் ஆங்கிலத்துக்காக ஆங்கிலேயராலேயே பாராட்டப் பெற்ற சீனிவாச சாஸ்திரியார் ஒருமுறை 'நான் எவ்வளவு ஆங்கிலப்புலமை பெற்றுப் பேசினும் முதன்முதல் அவ்வெண்ணங்கள் என் உள்ளத்தில் என் தாய்மொழியாம் தமிழிலேயே அரும்புகின்றன' என்று கூறினார். இவ்வாறு 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்ற சுந்தரர் மொழிப்படி, நம்மை மறந்த நிலையிலும், நாம் மாறுபட்ட நிலையிலும் நம் உள்ள அடித்தளத்தில் உருவாகுவதே தாய் மொழி. திராவிட மொழியியல் ஆய்வு செய்து பெருநூல் எழுதிய கால்டுவெல் தம்மை மறந்து ஓரிடத்தில் 'OurMother English' என்றே குறிப்பிடுவார். (1956)

இன்று உலகில் எத்தனையோ வகையான மொழிகள் உள்ளன. அவற்றைப் பல்வேறு குடும்பங்களாக மொழி நூலார் பிரிப்பர். சில திருந்திய மொழிகள் எழுத்தும் இலக்கியமும் பெற்றுள்ளன; சில திருந்தா மொழிகளாகப் பேச்சளவில் உள்ளன. எப்படி இருப்பினும் அந்தந்த மொழியினைப் பேசுவோர் அதைத் தம் தாய் மொழி என்றே போற்றுவர். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பது போல, திருந்தா மொழியினரும், அவற்றைப்பேசும் பழங்குடி மக்களும் பிறரும் அதைப் பொன்னெனப் போற்றி, தாய்க்குரிய வழிபாட்டினைச் செய்வர். தாய் மொழி என்பது பிறந்த நாட்டு மொழி அடிப்படையில் உள்ளத்தால், உதட்டில் முதன் முதல் உருப் பெற்று வருவதாய், வேறு எம் மொழி கற்று அவற்றில் வல்லவரான நிலையிலும், உள்ளத்தில் நீங்காது நிற்பதாய் ஒவ்வொருவராலும் போற்றப் படுவதாகும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில்

தமிழரைப் பொறுத்த வரையில் தமிழ் அவர்தம் தாய் மொழி யாகும். உள்ளத்தைத் தொடுவது உணர்வை ஊட்டுவது தாய் மொழியே.

குழந்தையுடன் முதன்முதல் அவள் தாயே பழகி அக் குழந்தைக்குப் பேசக் கற்றுக் கொடுக்கிறாள். அது இயல்பாக அவர் தம் தாய் மொழியாகவே இருக்கும். குழந்தையின் மழலை மொழியில் அத்தாய் மொழிச் சொற்கள் கொச்சையா கவும்குறைவற்றதாகவும் அமையினும்கூட, அவற்றைக் கேட்டு ஈன்ற அன்னையின் உள்ளம் மகிழும். தாய் வழியே பின்னர் தந்தை, உற்றார், மற்றாரை உணரும் அந்தக் குழந்தைக்கு இளமையில் தாய் கற்றுத் தந்த அந்தத் தாய் மொழியே தன் மொழியாக அமையும், அதை வளமுறவும் செய்யும். எனவே, அந்த வகையில் மனிதன் என்றும் போற்ற வேண்டுவது தாய் தந்த ‘தாய் மொழியேயாகும்.

# நாட்டு நலம்

உலகம் உழன்று கொண்டே இருக்கிறது. அதில் நாடுகள் பல உயர்கின்றன; பல தாழ்கின்றன. சில செல்வத் தால் செழிக்கின்றன; சில வளமற்று அல்லலுறுகின்றன. இயற்கை நலம் கொழிக்கும் சில நாடுகள் நலிவுறும் அதே வேளையில், இயற்கை வளமில்லாத சில நாடுகள் செழித்தோங்குவதைக் காண்கின்றோம். இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? இன்றைய உலகில் இத்தகைய வள நிலை வேறுபாட்டிற்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கும் அடிப்படைக் காரணங்களை எண்ணிப்பார்த்து ஆராயும் அறிஞர்கள் எத்தனையோ காரணங்களைச் சுட்டுகின்றனர். அவற்றுள் மிக அடிப்படையான காரணம் அங்கங்கே

வாழ்கின்ற மக்களின் செயல்திறனே என்பதை அவர்கள் வற்புறுத்துகின்றார்கள். இந்த அடிப்படை உண்மையினை அரசியல் அறிவுடன் தெளிந்த சிந்தனையும் பெற்ற, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஔவையார் நன்கு விளக்கியுள்ளார்கள்.

ஒரு நாடு வற்றாத நதிகள் பாய்ந்து வளம் பெறும் நிலப்பரப்பினைப் பெற்றிருக்கலாம். ஒரு நாடு மேடு பள்ளங்களைக் கொண்டோ, பாலைவனமாகவோ அன்றி வேறு வகையிலோ இருக்கலாம், ஆனால், வளமான நிலத்தில் வாழும் மனித சமுதாயம் சோம்பியிருக்கும் நிலையில் வாழுமாயின் அந்த நாடு நல்ல வளம் பெற்ற நாடாகுமோ? அதன் வளமெலாம் விழலுக்கிறைத்த நீராக அல்லவோ அமையும். அதே வேளையில் காடுமேடுகளைத் திருத்தி, எங்கோ ஓடுகின்ற பேராறுகளை எப்படி எப்படியோ திருப்பி, அவற்றின் நீரினைத் திருந்திய நிலங்களில் பாய வைத்து வளம் பெருக்கும் சமுதாயம் உள்ள நாடு, வரண்ட நிலையிலும் வளம் பெற்ற நாடாகுமல்லவா? இன்று இந்த வகையில் எத்தனையோ நாடுகள் பாலைவனங்களைச் சோலைவனங்களாக்குவதைக் காண்கிறோம். பனிபடர் நிலங்களெல்லாம் பயிர்படர் நிலங்களாக மாற்றப்பெறுவதைக் காண்கிறோம். இந்த நிலை எதனால் உண்டாகின்றது; ஆம்! அங்கங்கே உள்ள மனிதனுடைய உலையா உழைப்பும் ஆற்றலுமே அந்த நாடுகளை வளமாக்குகின்றன.

நம் பரந்த பாரத நாடு இயற்கை வளம் செறிந்தது. வற்றாத ஆறுகள் பல பாயப் பெறுவது; கனிவளம் மிக்கது; பற்பல வகைப்பட்ட இயற்கைச் செல்வங்களைப் பெற்றது. உரிமை பெற்றபின், நாட்டில் அவற்றை ஆராய்ந்து· வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் வகையில் முயற்சிகள் நடைபெறுகின்றன. எனினும் போதிய முன்னேற்றம் இல்லை என அறிஞர்கள் கணக்கிடுகின்றனர். காரணம் என்ன? நம்

மக்கள் முற்றும் உழைத்து, உற்ற நெறியில் செயலாற்றாது, சோம்பியிருப்பதேயாகும். வாழும் மனிதன் கடமையை மறந்து, உரிமை ஒன்றையே பற்றிச் செயலாற்ற, தான் பிறந்தபயன் மற்றவர்களுக்குப் பாடுபடுவதே என்ற உண்மையை மறக்கிறான்; மயங்குகிறான். தான் சமுதாயத் துக்காக என்ற உண்மையை மறந்து சமுதாயமே தனக்குக் கடமைப்பட்டது எனக் கருதுகிறான். இந்த நிலையில் அவன் நல்லவனாக மட்டுமன்றி வல்லவனாகவும் வாழவழியில்லை. இதனாலேயே வளமிருந்தும் வாட வேண்டிய நிலை நாட்டில் உள்ளது. ஔவையார் இந்த உண்மையினை உணர்ந்தே, 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என நிலத்தை வாழ்த்துகிறார். இங்கே ஆடவர் என்பது பெண்டிரையும் குறிக்கும். ஆம்! மக்கள் எவ்வழி நல்லவர் களாகிச் செயலாற்றுகிறார்களோ, அந்த நிலையில் அவர்தம் உழைப்பாலும் உற்றபிற செயல்களாலும் நாடு நாடாகும். எனவே அனைவரும் ஒன்றுகூடி உழைத்து—ஓயாது உழைத்து— நாட்டை எல்லா வகையிலும் உயர்த்தப் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு சங்ககால ஔவையாராம் அச்சான்றோரின் வாக்கினை உங்கள் முன் வைக்கிறேன்.

> ''நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே''

நாட்டிற்கு அறிமுகமான இதிகாசங்கள் இரண்டு. ஒன்று பாரதம். மற்றொன்று இராமாயணம். ஒன்றில் பாண்டவரும் கௌரவரும் விரோதிகள் எனவும் மற்றொன்றில் இராமனும் இராவணனும் விரோதிகளெனவும் காண்கின்றோம். ஆயினும் சற்று ஆழ்ந்து நோக்கினால் இப்புறப் பணிகளைக் காட்டிலும் உட்பகையே ஆட்சி சலுத்துவதை அறிய முடிகின்றது.

சகுனி தன் உடன் உற்றவரைக் கொல்ல எண்ணிச் செயலாற்றிய துரியோதனனைப் பழிவாங்க நினைத்தான். அவனே தருமரைச் சூதாட அழைத்து, வெற்றி கண்டு, காட்டுக்கு அனுப்பினான். பின்னும் துரியோதனனுக்குத் தான் சாதகமாக' உள்ளதாகக் காட்டி, அவ்வப்போது தூண்டி, பாரதப் போருக்கு வித்திட்டான். முடிவில் கௌரவர்கள் அனைவரும் அழிந்ததோடு அவனும் முடிவுற்றான். சகுனியின் வலையில் துரியோதனன் வீழாதிருந்திருப்பானாயின் பாரதப் போர் நடந்திராது.

இராமாயணப் போரும் அப்படியே. இராவணன் தன் தங்கை சூர்ப்பனகையின் கணவனை முன்னொரு போரில் (நிலாத கவச காலகேயர் போர் என்பர்) அறிந்தோ அறியாமலோ கொன்று விட்டான் என்று சூர்ப்பனகை, தன் கணவனைக் கொன்ற இராவணனைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டாள். அதில் வெற்றியும் பெற்றாள். அதில் அவள் இறக்கவில்லை. எங்கோ இருந்து இராவணன் மறைந்த பின்பு மகிழ்ந்தாள். இதைக் கம்பர் வீடணன் வாக்கில், 'கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் என்றது குறித்துக் கொடுமை சூழ்ந்து பல்லாலே இதழ் அதுக்கும் கொடும்பாவி நெடும்பாரப்பழி தீர்ந்தாளோ' எனக் காட்டுகிறார். ஆம். கணவன் இறந்தபோது, பல்லாலே இதழை அதுக்கிச் சபதம் செய்தாள்.

அவள் தன் பழி தீர்க்கச் சமயம் பார்த்திருந்தாள். இராமன் வீரத்தை அறிந்த அவள் இராமன் காட்டுக்கு வந்தபோது அவனுக்கு மாறாக—அவன் மனைவியைப் பற்றிக்கூறி, இராவணனைச் சீதையைக் கொணர அனுப்பினாள். கம்பர் அவள் கூற்றாக கூறும் பாடல்களில் இக்கொடுஞ் செயலைச் சிலேடையாகக் காட்டுகிறார்.

'அந்தரம் பார்க்கின்றமை அவர்க்கிலை உனக்கே ஐயா என்றும், மாகத்தோள் வீர பெற்றால் எங்களிடம் வைத்து வாழ்த்தி' என்றும் சிலேடை வகையால் பாடி, இராவணன் முடிய ஏற்பாடு செய்தாள் சூர்ப்பனகை எனக் காட்டுவர்.

எனவே புறப்பகைவர்களாகிய பாண்டவர், இராமன் ஆகியோரைக் காட்டிலும் இரண்டு இதிகாசங்களிலும் உட்பகை ஆட்சியே விளக்கப் பெறுகிறது. உட்பகையே புறப் பகையைக் காட்டிலும் கொடியது என்பதனை வள்ளுவர்,

'வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு' (உட்பகை 2)

என்கின்றார். ஆம்! இன்று அரசியலில் மட்டுமன்றித் தனி மனிதர் வாழ்விலும் நாடுகளுக்கிடையிலும் இந்த உட்பகை யால் வீடும் நாடும் ஊரும் உலகும் உருக்குலைவதைக் காண்கின்றோம். எனவேதான் சான்றாண்மை மிக்க வள்ளுவர் இக்குறளைத் தெள்ளத் தெளியக் கூறுகின்றார். நாடாளும் நல்லவரும் மற்றவரும் இதனை உணர்ந்து, சுற்றிச் சூழ்ந்திருப்பாரைக் கண்டு தெளிந்து வாழின் நாடும் நாமும் நானிலமும் நலம்பெற வாய்ப்பு உண்டு.

மேலும் தனி மனிதரிடமும் இந்த உட்பகை உள்ளது. உள்ளத்தே நல்லன அரும்பாது தடுத்து, கொடுஞ்செயலைச் செய்யும் நினைவைத் தோற்றுவிக்கும் உட்பகையினை மனிதன் களைதல் வேண்டும். 'காம உட்பகைவனும்' என்ற தெய்வமணிப் பாடலில் வள்ளலார் உட்பகைதனை நன்கு விளக்குகிறார். 'பொறியிலீர் மனம் என் சொல் புகாததே' என்பர். அவ் 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' என்பார் வள்ளுவர். ஆம்! தனி மனிதன் தன்னைக் கெடுக்கும் தீய சிந்தனைகளையும் அதன் வழி உருவாகும் செயல்களையும் நீக்குவானாயின் அவன் வாழ்வு சிறப்பதோடு அவனுடைய வீடு, நாடு, நானிலம் அனைத்தும் சிறக்குமல்லவா?

ஒவ்வொரு தனி மனிதனும் 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்ற வாக்கின்படி, உட்பகை கடிந்து, உலகம் வாழ உயர்ந்த எண்ணங்களை எண்ணி அவற்றின் வழிச் செயலாற்று வானாயின் அன்று நாடு நாடாகும். நாம் மனிதராவோம். அந்த நன்னாள்—நாட்டிலும் தனி மனித வாழ்விலும், உட்பகை நீங்கி உயர்வுள்ளம் அரும்பும் நாள்—விரைவில் மலர்வதாக என வாழ்த்தி அமைகின்றேன்.

உலகம் தோன்றிய நாள் தொட்டு நல்லனவும் அல்லனவும் இயங்கி வருகின்றன. உயிரினத் தோற்ற முதலே அதன் உணர்வில் இரண்டும் இயங்குகின்றன. உயிரினத்தின் உச்சியில் உள்ள மனிதன் பகுத்தறிவு பெற்றவன் எனப்படு கிறான். அவனிடமும் இவை இரண்டும் குடி கொண் டுள்ளன. 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்' ஆய்ந் துணர்ந்து, அல்லதை நீக்கி நல்லதைக் கொள்ளவே அவன் பகுத்தறிவு வழிகாட்ட வேண்டும். ஆனால் உலக வரலாறு அவ்வாறு இல்லையே!

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமாயின் அறிவொடு கூடிய சான்றாண்மை பெற்றவனாக வேண்டும். பிற உயிர் களைத் தம் உயிர்போல் ஒத்து நோக்கி வாழப் பழக வேண்டும். இறை உணர்வும் உயிர்களிடத்து அன்பும் உடைமையே மனித வாழ்வாகும். 'அன்பின் வழியது உயிர் நிலை' என்று வள்ளுவர் இதை எல்லா உயிர்களுக்குமே ஏற்றிக் காட்டுவர். ஆம்! அந்த அன்பும் அருளும் அறிவும் சான்றாண்மையும் ஒன்று கூடின் மனிதன் தெய்வமாக மதிக்கப் பெறுவான். அப்போது அவன் செயல் யாவும் பிற உயிர்களுக்கு, தீங்கிழைக்கும்—ஊறு செய்யும் உயிர் களுக்கும்—மற்றவர்களுக்கும், நல்லனவாகவே அமையும் என்பது உறுதி.

உலகம் உய்ய வேண்டுமாயின் இந்த உயரிய குணநலம் இன்றியமையாதது. இந்த உயரிய பண்பினை மறந்த

மனிதனுக்கு ஓரறிவுடைய உயிரை உதாரணமாகக் காட்டித் திருத்த முயல்கிறார் ஔவையார். ஆனால் அவன் எங்கே திருந்தினான்?

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்'

என்பது ஔவையார் வாக்கு. 'மரம் வெட்ட வெட்டத் தழைத்து, அவ்வெட்டினவனுக்கே நிழல் தந்து, வெம்மை போக்கி நன்மை தருகிறதே! மனிதர் அதைக் கண்டாவது தீங்கு செய்தார்க்கு நன்மை செய்யக் கற்றுக் கொள்ளக் கூடாதா' என்கிறார் அவர்.

இந்த உயரிய பண்பு உலகில் தழைக்கின் வேறு எல்லாக் கொடுமைகளும் இல்லையாகுமே! மனிதனுக்கு மனிதன்—சாதிக்குச் சாதி—சமயத்துக்குச் சமயம்—நாட்டுக்கு நாடு மாறுபட்டுப் போர் விளைக்கும் கொடுமைகள் அனைத்தும் இல்லாது ஒழியுமல்லவா! ஆனால் எண்ணிப் பார்ப்பார் யார்?

தான் மனிதன் என்றும்—அம்மனிதப் பண்பு உள்ளவன் என்றும்—சான்றோன் என்றும் கூறிக் கொள்கின்றவன் இதை எண்ணிப் பார்க்க வேண்டுமே! எண்ணிப் பார்க்கிறானா? இல்லையே!

மற்றவனை எப்படி மாய்ப்பது—தேய்ப்பது என்ற உணர்வில்தானே வாழ்கின்றான். தான் வாழ எந்தக் கொடுமையினையும் செய்யத் தயங்கவில்லையே! இதனாலன்றோ உலகம் அழிவு நோக்கிச் செல்லுகின்றது. இதற்கு மாற்றம் இல்லையா! உண்டு. இதோ வள்ளுவர் வழி காட்டுகிறார். வள்ளுவர் எத்தனையோ வகைகளில் வழி காட்டுகிறார். அத்தனையும் இங்கே காட்ட இயலாது. ஒன்றை

மட்டும் சுட்டிக்காட்டி அமைகின்றேன்.

**'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு?'**

என்று வள்ளுவர் கேட்கிறார். ஆம்! நாம் மனிதனாகப் பிறந்து விட்டோமே! எனவே மற்ற உயிர்களை—மற்ற மனிதரை ஒத்து நோக்க வேண்டும். அவர்கள் கொன்றன்ன கொடுமை செய்தாலும் மறந்து அறனல்ல செய்யாது நலம் புரிய வேண்டும். இந்த மனிதப் பண்பு இல்லையானால் நாம் மனிதர் இல்லை. விலங்கு, மரம் இவற்றிலும் கீழாக எண்ணப்பட வேண்டியவர்களே. எனவே தீங்கு செய்தவர் களுக்கும் நன்மை செய்து, எல்லாரும் இன்புற்றிருக்கும் வழி வகுத்து வாழ்வோமாயின் வையம் பூத்துக்குலுங்கும் புன்னகைப் பூஞ்சோலையாக விளங்காதா! அத்தகைய நலம் நாடி நல்லன ஆற்றி நாம் ஒன்றி வாழ வேண்டுமெனக் கேட்டு விடைபெறுகின்றேன்.

'எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்' என்று கூறினார் பாரதியார். ஆம்! நம் நாடு சாதி சமயங்கள் பலவற்றால் நிறைந்த ஒன்றாயினும் நம் ஆட்சிமுறைச் சட்டப்படி நம் நாடு சாதி சமய வேறுபாடற்ற ஒரு சமுதாயம் கொண்ட நாடு எனவே கொள்ளவேண்டும் நம் நாட்டில் வாழும் அனைவரும் உள்ளம் ஒன்றினவர்களாய்—சிந்தனை ஒன்றுடையவர்களாய் வாழக் கடமைப்பட்டுள்ளோம். அண்ணல் காந்தி அடிகளார் இத்தகைய உயரிய பாரதப் பண்பாட்டு நெறியினைக் காணவே விழைந்து மறைந்தார். ஆனால் இன்று நாட்டில் காண்பதென்னே!

'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால், சூழ்கின்ற பேதம் அந்தத் தொகை இருக்கும்' என்று பாரதி தாசன் கூறியபடி மொழியாலே—இனத்தாலே—சாதியாலே —நிலப்பிரிவாலே—வேறு பலவகையாலே பிரிந்து வாழ்கின்ற

—பேசுகின்ற—செயலாற்றுகின்ற நிலையில் நிற்கின்றோம். 'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' என்ற பாடல் எழுந்த நாட்டிலே சமயத்தால் எத்தனை பிணக்கு? 'சாதி இரண்டொழிய வேறில்லை', இட்டார் பெரியோர்—இடாதார் இழிகுலத்தார்' என்று பாகுபடுத்திய நாட்டில் சாதி வேறுபாட்டால் எத்தனை பிளவுகள்—சண்டைகள்! சான்றோர் இவற்றையெல்லாம் கண்டு நைகின்றனர்—வாடுகின்றனர்—அவ்வப்போது வருந்திப் பாடுகின்றனர். 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்' என்று எல்லா உயிர் களையும் ஒத்து நோக்கும் பண்பாடு நாட்டில் வாழ வில்லையே' வாடிய பயிரைக் கண்டபோது வாடும்' பண்பு மலரவில்லையே! மாறாக வீட்டுக்கு வீடு—ஊருக்கு ஊர் மாறுபட்டு வேறுபாடுறுவதைத்தானே காண்கிறோம்.

உலகில் வாழும் எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தி வாழ வேண்டும் என்று கனவு காண்கின்றனர் சான்றோர்.

'எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லைமாதோ'

என்கின்றார் கம்பர். சமதர்மச் சமவாழ்வுச் சமுதாயம் காண விரும்பினர் சான்றோர். விரும்புகின்றனர் நல்லோர். ஆனால் நாம் அவர்கள் எழுதிய அத்தனைப் பாடல்களையும் படித்துக் கொண்டே உள்ளத்தே மாசு வளர்த்து, காழ்ப் புணர்ச்சி கொண்டு ஒட்டி உறவாடாது—உளத்தால் ஒன்றாது பலப்பல பிரிவாகப் பிரிந்து நிற்கின்றோம்.

இவற்றையெல்லாம் பார்க்கின்றார் நாலடி யாத்த நல்ல சான்றோர். 'மனிதா' நல்ல குலம் தீய குலம் என்று சொல்லுகிறாயே? அதை எப்படிப் பிரித்தாய்? அவற்றின் பொருள் என்ன? அவை சொல்லளவில் நிற்பனவா? உண்மையில் பொருள் தருகின்றனவா? எண்ணிப் பார்த்

தாயா? வள்ளுவர் பாடிய 'குடிமை' என்னும் அதிகாரத்தை எப்போதாயினும் தொட்டுப் பார்த்திருக்கிறாயா? குடி, அல்லது குலம் என்பது எதனால் உருவாவது? 'மனிதகுலம், ஒன்றே என்று உணர்வாயா?' என்று கேட்டு, அந்த ஒரே மனித குலத்தில் நல்ல குலம் தீயகுலம் என்று நீ பிரிக்க வேண்டுமானால் ஒரே வழிதான் உண்டு. வள்ளுவர் பல கூறுகின்றார். நான் சுருக்கமாக இங்கே கூறுவதைக் கேள். என்கின்றார்.

'நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லால் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ? தவம் கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்' (20.5)

என்பது அவர் வாக்கு.

மனித வாழ்விற்கு ஏற்ற நல்ல கருமங்களைச் செய்தலாகிய தவம், தீய செறுவார்க்கும் நலம் செய்ய அறிவுறுத்தும் கல்வியைக் கற்று மற்றவர்க்கும் அளித்தல், இன்பம் விழையாது வினை விழையும் ஆள்வினை உடைமை ஆகிய நற்பண்புகளை உடையவனே நல்ல குலத்தவனாவான் எனக் காட்டி, மனித சமுதாயத்தைத் திருத்த நினைக்கிறார்.

தன் பண்பை விட்டு எங்கோ சென்று கொண்டிருக்கின்ற மனிதன், நின்று, இச்சான்றோர் சொன்னதை எண்ணி, நாடு வாழ—நானிலம் வாழ நற்செயலாம் தவமியற்றி, எல்லாரும் வாழ எண்ணும் கல்வி கற்று, சளைக்காது நல்வினை ஆற்றி உயர்வானாயின் அந்த நாள் நல்லநாளாகும், நல்ல சான்றோர் வாய்ச்சொல் நாட்டில் தவழும் நாளாகும். அந்நாள் விரைந்து விடிவதாக எனப் போற்றுகின்றேன்.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் வேறுபாடற்று, எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்று இயைந்து வாழ வேண்டும் என்பதே சமுதாயக் குறிக்கோளாக அமைகின்றது ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகளோ பிற வேறுபாடுகளோ இன்றி ஒத்தவாழ்வு வாழும் 'சமதர்மச் சமுதாயத்'தைக் காணவே நாட்டுத் தலைவர்கள் பாடுபடுகிறார்கள். இந்த உணர்வு, சமுதாய வாழ்வில் என்றும் மணியிடை இழைபோல் எண்ணப்பட்டு வந்துள்ளது. 'உண்பது நாழி உடுப்பன இரண்டே, பிறவும் எல்லாம் ஓரொக்குமே' என்பது சங்ககால அடிகள். கம்பன் 'எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை' என்று பாடினார். ஏறக்குறைய அக்கம்பன் காலத்தை ஒட்டிவாழ்ந்த சேக்கிழார் இக்கருத்தைத் தம் பெரிய புராணத்தில் பலவிடங்களில் சுட்டிக் காட்டுகிறார். அவற்றுள் ஒன்று தேவாரம் பாடிய சுந்தரர் வாழ்வொடு பற்றியது.

'சமதர்மச் சமுதாயம்' அமையச் சட்டங்கள் மட்டும் இயற்றினால் போதாது. மக்கள்—அதிலும் வாழ்நிலையில் மேல்மட்டத்திலுள்ளவர்கள் மனம் திருந்தி எல்லாரும் வாழும் வகையில் செயலாற்ற வேண்டும் என்கிறார் சேக்கிழார். சுந்தரர் தன் தலைவி 'வாடாமே' வாழ, குண்டையூரில் நெல் பெற்று, திருவாரூரின் தெருக்களில், பெருமலை யெனமதிக்கும் பெருவண்டிகளில் கொண்டுவந்து நிறுத்துகிறார். பரவையார் அவை அனைத்தையும் தனதாக்கிக் கொள்ளாது ஊரிலுள்ளாரும் 'பகிர்ந்து கொள்க' என முரசறைகின்றார்.

'வன்றொண்டர் தமக்களித்த நெற்கண்டு மகிழ்சிறப்பார்
இன்றுங்கள் மனைஎல்லைக்குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்றங்கு மாளிகையில் புகப்பெய்து கொள்களென
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார்'

என்பது சேக்கிழார் வாக்கு. ஆம்! அவ்வாறு பெற்றதை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்து வாழ்வதே வாழ்வின் வெற்றி என்பதையும் அதுவே உலகில் புகழொடு வாழ்வதற்கு ஏற்ற நெறி என்பதையும் சேக்கிழார் விளக்கிக் காட்டுகிறார். பரவையும் சுந்தரரும் அதனால்தான் இன்றளவும் புகழொடு வாழ்கின்றார்கள்.

இத்தகைய கருத்தினைச் சேக்கிழார் தம் சொந்தக் கருத்தாகமட்டும் எண்ணிப் பயன்படுத்தவில்லை. இவ்வரலாற்றுக்கு மூலகாரணரான சுந்தரர் இத்தகைய சமதர்மச் சமுதாயத்துக்கு வழிகோலியுள்ளார். திருப்புகலூரில் இறைவன் முன் நின்று பாடும் சுந்தரருக்கு உலகவாழ்வின் அடிப்படைத் தேவைகள் 'உண்பது நாழி உடுப்பன இரண்டே' என்ற உண்மை புலனாகின்றது. தனக்கு அவ்விரண்டு மட்டும் தந்தால் போதும் என இறைவனை வேண்டுகிறார். 'இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்' என்கிறார். கூறை என்பது ஆடை. உணவு, உடை இரண்டும் அனைவருக்கும் இருப்பின் உலக இடர் கெட்டு நலம் விளையுமே. அதே வேளையில் சுந்தரர் உலகில் பலர் எதை எதையோ வேண்டி, யார்யாரையோ துதிபாடிச் சுற்றி வருவதைக் கண்டு வருந்திக் கண்டிக்கிறார். அந்த நிலை சமுதாய வாழ்வுக்கு ஏற்றதன்று எனவே சுட்டுகிறார்,

இத்தகைய நல்வாழ்வு அமையச் செல்வர் உள்ளம் திருந்த வேண்டும் என்பது அவர் கருத்து. அதையும் அவர் தன் மேலேயே ஏற்றிக் கூறிக் கொள்ளுகிறார். 'உள்ளதே அமையும் என்றிருந்தேன்' என்பது அவர் வாக்கு. செல்வர் தம் தேவைக்குமேல் பலவற்றைச் சேர்த்தும் பதுக்கியும் வைப்பதால் உலகில் உண்டாகும் கொடுமையினை எண்ணிய அவர் உள்ளம் 'உள்ளதே அமையும் என்கின்றது. ஆம்! இந்த எண்ணம் அனைவர் உள்ளத்

திலும் உருவானால் எல்லாச் செல்வமும் எல்லாரையும் சார, தானே வழி உண்டாகுமே! அப்பரடிகளாரும் இந்த உண்மையைத்தான் 'வைத்த பொருள் நமக்கு ஆம்' என்று கூறி அமைதிகொள்ள ஆற்றுப்படுத்துகிறார். 'பெற்றபொருள் போதும்' என அமைந்து, பேராசை கொள்ளாது, எல்லாவற்றையும் 'நமதா'க்கிக் கொள்ளும் கொடுமையிலிருந்து மனித சமுதாயம் விடுதலை பெற்றால் நாட்டில் சமதர்மம் தானாகவே மலராதா! ஆம்! நாமும் சுந்தரர், அப்பர் போன்ற நல்லவர்தம் அடியொற்றி, 'உள்ளவே போதும்' என்ற உணர்வு திருந்தி, செம்மை வாழ்வில் சிறக்க நின்று, நாட்டிலும் உலகிலும் சமதர்மச் சமுதாயம் வளர வழிகோலுவோமாக!

# பழங்குடிப் பண்பாடு

உயிரினத்தின் உச்சியில் வாழும் மனிதன் தான் எல்லா வகையிலும் முன்னேற்றமடைந்தவனாகவும், தன்னை எண்ணிக் கொள்ளுகிறான். ஆயினும் அந்த மனித இனத்திலேயே எத்தனை வேறுபாடுகளை பிற உயிர்களிடம் துளியும் காணமுடியாத வேறுபாடுகளைக்—கற்பித்துக் கொண்டு எத்தனையோ மாறுபாட்டுக்கிடையில் அவன் வாழ்வு அமைகின்றது. அதிலும் கற்றவன் என்றும் நாகரிகம் மிக்கவன் என்றும்தன்னைக் கூறிக்கொள்ளும் நகரத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாழும் மனிதன் தன்னையே எண்ணி வியந்து கொள்ளுகிறான். அவன் எங்கோ நெடுந் தூரங்களில் காடு மேடுகளிலும் வயல் வரப்புகளிலும் பள்ளத்தாக்கிலும் படுகைகளிலும் எத்தனையோ கல்லா மாக்கள் தம் வாழ்வை அமைத்துக் கொண்டு வாழ்வதை எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்கள் வாழ்வை எண்ணின் நமக்குப் பல வற்றாத உண்மை

கள் நன்கு விளங்கும். நாடோடியாக நாம் எண்ணும் அக் கல்லாக் களிமகனிடம், மனிதனிடம் இருக்க வேண்டிய நாகரிக மனிதன் நழுவவிட்ட எத்தனையோ நல்ல பழக்க வழக்கங்களும் அசைக்கமுடியாத நம்பிக்கைகளும் உள்ளன என்பதை எண்ணிப் பார்ப்பின் அவன் நகரில் வாழும் நாகரிக மிக்காராகத் தம்மை எண்ணித் தருக்குவாரினும் மனிதப் பண்பை நழுவ விடாது காப்பாற்றும் நல்ல ஒளிவிளக்காக விளங்குகிறான் என்பது தெளிவாகும்.

சில ஆண்டுகளுக்குமுன் கொங்கு நாட்டு மலைவாழ் மக்களை நேரில் சென்று காணும் வாய்ப்பினைப் பெற்றேன். History of Ottagamund, Preface p. vi,—vii, அம்மரபினருள் ஒருவராகிய 'Tras' பற்றிச் சுட்டிய Frederick Price என்பார் 'Puzzing Race' என்றார். எனக்கும் அவர்களோடு நெருங்கிக் கலந்து பழகியபோது அவர்தம் பழக்கவழக்கங்களும் சடங்கு களும் சிலகொள்கைகளும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. ஒரு சில பொருளற்றனவாகக் காணப்படினும்,அவற்றுள்ளும் அவர் கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, அதன் வழியே நல்ல பயன் களைப் பெற்றதாகவும் கூறினர். பலப்பலவாக அமைந்த அவர்தம் நம்பிக்கை, பழக்க வழக்கங்களில் ஒருசிலவற்றையே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவற்றுள்ளும் பெரும் பாலன எல்லாக் கூட்டத்தினராலும் (tribes) ஒருமுகமாகக் கொள்ளப்பட்டனவாக உள்ளன. மேலும் அவர்கள் பேசும் மொழி அமைப்புகளும் வழங்கும் சொற்களும் அவர்தம் பெயர்களும் பிற சொல் வழக்காறுகளும் கூட அவர்களுடைய பண்பாட்டினை நமக்கு உணர்த்துவனவாக உள்ளன.

தெய்வ சம்பந்தமாக அவர்களுடைய நம்பிக்கை அசைக்க முடியாதது. உதகைத் தோதவர் தங்கள் மோட்சவீடு தங்கள் எல்லையின் பக்கத்தில் உள்ள 'முக்குருட்டி' மலைக்கு அப்பால் உள்ளது என நம்பி அத்திக்கு நோக்கி வழிபடுகின்றனர். திசை நோக்கித் தொழுகின்ற' வழிபாட்டுமுறை வளர்தந்

சமயங்களிலும் காணும் ஒன்றல்லவா! அதே போலக் கோணியம்மன் பற்றி கோவையை அடுத்து வாழ் இருளர்களிடையும் அதனிடம் அவர்கள் கொண்ட நம்பிக்கையும் அசைக்க முடியா நிலையில் இருப்பதறிந்தேன். பொதுவாக Tribal people இறைவனைப் போற்றிப் பாடும் பாடல்களில் தனக்கென வேண்டும் தனித்தன்மை காணமுடியாத ஒன்று. மாறாகச் சமுதாயமே மனித குலமே வாழவேண்டும் என்ற வேண்டுகோளாகவே அவை அமைகின்றன. தாங்கள் வழிபாடாற்றும் கோயில்களுக்குத் தங்கள் மரபில் உள்ளவரையே பூசாரியாக வைத்து வழிபடும் நிலையைக் காண்கிறோம். தோதவர் குடும்பப் பெண்கள் கோயில் பக்கமே தலைகாட்டக் கூடாது. வள்ளுவர் கூறிய 'தெய்வம் தொழாள்' என்ற குறளுக்கு அவர்கள் இலக்காக வாழ்கின்றார்கள். சில வகுப்பார் உருவமற்ற வழிபாடே செய்கின்றனர். சிலர் நெருப்பினைத் தெய்வமாக நம்புகின்றனர். சிலர் சிவசக்தி வழிபாட்டினைக் கொள்ளுகின்றனர். எனினும் அவர்கள் வாழும் சுற்றுப்புறங்களில் உள்ள மக்கள் கொண்டாடும் பல விழாக்களைத் தாங்களும் கொள்ளுகின்றனர். ஆயினும் குலதெய்வ வழிபாட்டைச் சிறந்த முறையில் செய்வர், அவ்வழிபாடும் கூட்டுமுறையில் (Community) தான் நடைபெறும். மஞ்சுமலைவாழும் குறும்பர் என்னும் மரபார் தெய்வம், விழா ஆற்றக் கட்டளை இட்டால்தான் விழா எடுப்பர். இன்றேல் சில வருடங்கள் சழிந்தாலும் விழா இருக்காது. அவன் உத்தரவு இல்லாமல் அவனுக்கே விழா எடுத்தாலும் தவறுதான் என முற்றும் நம்புகின்றனர். அவர்கள் தெய்வம் வீரபத்திரர்.

மாரண்டஹள்ளியில் உள்ள இருளர் தமக்கு நோய் வந்தால் உடனே ஒரு கல்லை நட்டுத் தெய்வமாக வழிபடுவர். வேறு நிலைத்த கோயில் கிடையாது. பொதுவாக இக்காட்டு

மரபினர் அம்மைக்கு அஞ்சுகின்றனர். அதனால் இவர்களோ மிகவும் பயந்து, அம்மை வந்தவர் அப்படியே உள்ள இடத்தில் அவரை விட்டுவிட்டு வேறு எங்காவது ஓடிவிடுவர்; பின் திரும்பியும் பார்க்கமாட்டார். 'அம்மை' என்றால் அவ்வளவு அச்சம். மருள் ஆடும் வழக்கம் உண்டு. அதை நல்ல தமிழ்ச் சொல்லாகிய 'உடம்பு நிரம்புதல்' என்று அழைப்பர். இறைவன் ஒரு மனித உடலில் புகுந்து அதை நிரப்பி மக்களுக்கு அருளை நிரப்புவார் என நம்புவதால் இவ்வாறு அழைக்கின்றனர். ஒருசிலர் தம் குடும்பத்தில் யாரேனும் இறந்தால் அவர்கள், அவர்கள் கடவுளாகிய வீரபத்திரருடன் இரண்டறக்கலப்பார்கள் என நம்புகின்றனர். எனவே அவர்கள் திரும்பி வரமாட்டார்களென்றும் எனவே அவர்களை அழைக்கும் ஆண்டுக்கடன் முதலியன செய்யக் கூடாது எனவும் நம்புகின்றனர். பெரும்பாலான மக்கள் திருமணத்துக்கு முன்பே தாங்கள் வழிபடும் இடம் சென்று இறைவனை வணங்கிவிட்டு வந்தே மணச்சடங்கினை மேற்கொள்ளுகின்றனர். மணத்துக்கு முன் பெற்ற தாய்தந்தையரையும் வழிபட்டே பிற சடங்குகளைத் தொடங்குவர். இவ்வாறு தெய்வத்திடம் அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் வாழும் இந்த நாட்டுமக்கள் அந்த நம்பிக்கையால் தங்கள் நோய் முதலியன நீக்கப்பெறுவதாகவும் வாழ்வில் வேண்டுவன பெற்று வாழ்வதாகவும் உறுதியாக நம்பியே செயல்படுகின்றனர். அவர்தம் தெய்வம் பற்றிய நம்பிக்கை அசைக்க முடியாதது.

இனி அவர்தம் வாழ்வில் சில பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் காண்போம். பெரும்பாலான பிரிவினர் மணச்சடங்கினைக் கூட்டுவகையிலேயே நடத்துகின்றனர், பத்து அல்லது பன்னிரண்டு மணங்கள்கூட ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் நடப்பது உண்டாம். இதனால் அனைவரும் கலந்து பழக வாய்ப்பு உண்டாவதோடு, செலவும் குறை

கின்றது என்கின்றனர். உண்மையானது தானே! மேலும் அக்கூட்டுமணச் செலவுக்கு உண்மையாகவே பணம்தர இயலாத ஏழைகளுக்குச் செலவிலிருந்து விலக்களித்து, ஒன்றும் பெறாமலேயே மணவினையினைச் செய்து அனுப்புகிறார்கள். அப்படியே பிணச்சடங்குகளும். சிலவிடங்களில் ஓராண்டில் அந்த ஊரில் இறந்தவர் அனைவரையும் எண்ணி, ஆண்டின் கடைசியில் அனைவருக்கும் ஒன்றாகவே இறந்தவர்தம் சடங்குகளை ஒன்றாக ஒரே இடத்தில் செய்கின்றனர். ஒரு சில வேளையும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைகூட இக்கூட்டு இறப்புச் சடங்கு நடைபெறுவதுண்டாம் இதில் சிறப்பாக அவர்கள் கொள்ளும் நம்பிக்கை ஒன்றே. மணமாயினும் இழவாயினும் அவ்வீட்டுக்கு உரியவர் தமக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்று அனைவருக்கும் சொல்ல வேண்டும். அப்படியே அவர்களும் வேண்டாதவர் என ஒதுக்காது—சடங்குகளில் வந்து கலந்து கொள்ள வேண்டும். சில குழுக்களில் மணச்சடங்குகளில் இல்லையாயினும் மரணச் சடங்குகளில் அனைவரும்—எத்தனை விரோதிகளாயினும்—கலந்துகொள்ளவே வேண்டும் என முறை வகுத்துள்ளனர். அதுதான் உண்மைச் சமுதாய வாழ்வு என நம்புகின்றனர். அதனால் அவ்வினத்தவர் தம்முள் பகை இன்றி வாழவழி உண்டாகின்றது; ஒற்றுமையும் உறவும் மலர்கின்றன.

இத்தகைய மண முதலிய சடங்குகளைச் செய்வதற்கு வேற்று இனத்தவரையோ அன்றி வேறு யாரையோ அழைப்ப தில்லை. அவரவர் இனத்தில் முதியவர்களே இச்சடங்குகளை முன்னின்று செய்து முடிப்பர். அதில் வழங்கும் மொழியும் அவரவர் மொழியாகவே இருக்கும். எல்லா மணச்சடங்கு களிலும் முதியோருக்கே முதலிடம் உண்டு. அவர்களை நல்ல தமிழ்ச் சொல்லாகிய 'மூப்பர்' எனவே அழைக்கின்றனர். அவர்கள் சடங்குச் செயல்களைச் செய்வதனால் அதன் அடிப் படையில் சிலர் 'கரணத்தார்' எனவே அழைக்கப் பெறு

கின்றனர். சிலமரபின் மணமுறையில் வயதைக் கவனிப்பதில்லை. 20 வயது ஆண் 40 வயதுப் பெண்ணையும் மணப்பதுண்டாம்.

மணநிகழ்ச்சிகளில் பெரும்பாலும் வாத்திய முறை போன்ற ஆடம்பரங்கள் கிடையா. நேரம், பொழுதுகூடச் சிலர் பார்ப்பதில்லை. ஒருமரபார் (தோதவர்) நிறைந்த அமாவாசையில் பகல் 12 மணி அளவில் மணம் முடித்தல் சிறந்தது என்பர். அதில் செவ்வாய்க்கிழமையும் கலந்தால் இன்னும் சிறப்புடையது என்பர். அத்தகைய மணம் ஒன்றினை நான் கண்ணால் கண்டேன். அதில் பெரியோர் வாழ்த்துதான் முக்கியம். பச்சிலைப்பந்தல்—பரந்தவெளி—பால்வடியும் மரநிழல்—சுற்றத்தார் இவை மணத்துக்கு இன்றியமையாதன. ஒருசில மரபார் தவிர்த்து, பெரும்பாலோர் கணவன், மனைவி ஆகிய இருவரும் தங்களுக்கு வேண்டியவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுகின்றனர். அப்படியே விருப்பமில்லையானாலும் பஞ்சாயத்து முன்னிலையில் விடுதலை பெற்றுப் பிரியும் வழக்கமும் உண்டு. விருப்பமில்லாத மணம் நடப்பது அரிது. அப்படி நடந்தால் உடன் பிரிவுதான். இத்தகைய பிரிவுத் தீர்ப்பு ஒன்றினை சேர்வராயன்மலையிடை வாழும் பழங்கால மலையாளமக்கள் நடுவில் நான் கண்டேன். இவர்களுள் இருபாலரின் பலதார மணமும் வழக்கத்தில் உள்ளது. சிலர் மணம் நடந்த 7ஆம் நாள் தான் இருவரையும் தனியாக இருக்க விடுவர்.

கோவை பக்கத்திலே உள்ள இருளர் மரபில் ஒரு விசித்திரமான பழக்கத்தைக் கண்டேன். அவர்கள் பிறந்தால் மணம் செய்து கொள்ளாது இறக்கலாகாதாம். மணம் செய்து கொள்ளாதவரும் கூட இறக்குமுன் (இருபாலரும்) மணம் செய்து கொண்டுதான் இறப்பார்களாம். ஒருவேளை மணம் இல்லாது யாராவது இறந்து விட்டால், இறந்த மணத்துக்கு

மணச் சடங்குகள் அனைத்தையும் நடத்திப் பிறகு பிணச் செயல் மேற்கொள்வார்களாம். 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற வள்ளுவர் கொள்கை அங்கே சிறப் பதைக் கண்டேன். பெண்கள் வயது வந்த பிறகே மணம் செய்வர். சில மரபில் பெண் தாய் மாமனுக்கே உரியவள் என்றும் இளவயதிலேயே அவனுக்கு நிச்சயம் செய்யப்பெற வேண்டுமென்றும் அவன் விரும்பாமல் அப்பெண்ணை யாருக்கும் மணமுடிக்கக் கூடாது என்றும் நம்புகின்றனர். அத்தகைய பிறருக்கு உரிய மணத்தையும் அத்தாய் மாமனே முன்னின்று நடத்த வேண்டும். வயது வந்த பெண்களுக்கு உரிய சடங்குகளையும் தாய்மாமனே முன்னின்று நடத்த வேண்டும். குடும்ப உறவின் சிறப்பு இது.

குழந்தை பிறந்தால் தாயும் சேயும் தனி இடத்திலே விடப்பெறுவர். சிலர் ஏழு மாதங்கள் வரை தாய் குழந்தை இருவரும் தனியாகவே இருக்க வழி செய்வர். அடிக்கடி கருத் தரிப்பதைத் தடுக்கத் தாமே ஏற்படுத்திய குடும்பக் கட்டுப் பாடு இது போலும். இவர்கள் குருவினைத் தெய்வத்துக்கு ஒப்பாகப்போற்றுவர்—குரு இவர்கள் குலத்து முன்னோரே.

தமிழில் 'மாடு' என்றால் செல்வம் என்று பொருள் அல்லவா! இப்பொருள் இந்த நாடோடி மக்களால் (Tribel People) நன்குபோற்றப் பெறுகின்றது, உதகைத் தோதவருக்கு எருமைதான் முக்கியம்—அதைத் தெய்வமாகப் போற்றுவர், விளக்கேற்றுவது முதல் யாவற்றிற்கும் எருமை நெய்யே பயன்படும். அப்படியே கோதவருக்குப் பசுக்கள் தான் முக்கியம். அப்படியே மஞ்சுமலைக் குறும்பருக்கு ஆடு தான் முக்கியம். இவர்கள் செல்வ வளம் பெற்றவர்கள். எனவே ஆட்டுப்பால் நெய் முதலியவற்றை விலைக்குத் தர மாட்டார்கள். இனாமாக வழங்குவார்கள். இறைச்சிக்காக ஆடுகளை விற்க மாட்டார்கள். ஆடுகளுக்கு நோய் வந்தால்

பச்சிலையும் திருநீறும் இட்டு இறைவனை வணங்கி, அந்த நோயினைப் போக்கிக் கொள்வர். இப்படிக் கால்நடைகளைச் செல்வமாகவும் தெய்வமாகவும் போற்றுவதோடு, அவற்றின் பால், தயிர், மோர், நெய் முதலியவற்றை வருவார்க்கு இனாமாக வாரி வழங்கும் இவர்தம் பண்பாடு, இன்னும் நகரங்கள் மறந்துவிட்டபோதும் இந்த ஒதுக்குப் புரங்கள் மனித உணர்வை மறக்கவில்லை என்பதை நினைவூட்டு கிறது.

இந்தப் பழங்குடிமக்களுள் பெரும்பாலோர் தம்தம் வாழ்வுக்கு வேண்டிய உணவுப் பொருள் முதலியவற்றைத் தாங்களே பயிரிட்டுக் கொள்வர். உதகை நாட்டுக் கோதவர் (Kodos) 'உப்பு தவிர வேறு எதையும் வாங்க மாட்டோம்' என்று சொல்லும்போது பெருமிதம் அடைகின்றனர். மாரண்டி ஹள்ளி பக்கம் உள்ள சிவசாரத்தார் உண்மையில் பெரும் ஆச்சாரத்தராகவே இருக்கின்றனர். தாமே சமைத்து உண்பதல்லது வேறு எந்த உறவினர் வீட்டிலும் உண்ண மாட்டார்கள். தலைக்கு எண்ணெய்க்குப் பதில் வெண்ணெயைத் தடவுவர். இவர்களும் மாடுகளைத் தெய்வமாகப் போற்று வதோடு தயிர், பால் முதலியவற்றை விற்காததால் நெய் மிகுதியாக உடையவர்கள். இன்னொரு சிறப்பு இவர்கள் கொடுக்கும் கடனுக்கு வட்டி வாங்க மாட்டார்கள்; அது பாவம் என்பது அவர்தம் அசைக்க முடியாத நம்பிக்கை. இவ்வாறு மனிதப்பண்புடன் வாழும் அவர்களை நாம் எல்லை ஒதுக்கி விட்டு, நாம்தான் மனிதர் என்று சொல்லி உலவி வருகிறோம்.

இந்த நாடோடிகள்தம் (Tribel people) கடவுள் நம்பிக்கை பற்றி மேலே கண்டோம். அவர்தம் வழிபாட்டு முறை சிறந்த நம்பிக்கைகள் அடிப்படையில் அமைவன. தீமிதிவிழா போன்றவற்றில் நம்பிக்கை கொண்டு தீயால் ஊறுபெறாது நிற்பர். காப்புக்கட்டி விழா ஆற்றும்போது

தெய்வத்துக்கு அஞ்சித் தீயன செய்யாது அவர்கள் தங்களைக் காத்துக் கொள்வர். பொங்கல் விழா போன்ற எல்லா விழாக் களும் சமுதாய விழாக்களாவே இருக்கும். தனியார் விழா வாக வீட்டில் நடப்பதாக இராது. தெய்வம் வந்து வாக்கிசைத் தால் அது சொல்லியபடி நடக்கும் என முழுக்க முழுக்க நம்பு கிறார்கள்—அது பெரும்பாலும் உண்மையாகவும் உள்ளது. தெய்வ நம்பிக்கையால்தான் நரைதிரை, மூப்பு தங்களுக்குச் சீக்கிரம் வருவதில்லை எனத் திட்டமாக நம்புகின்றனர் அப்படியே சிலர் நல்ல வயதாகியும் அவை இன்றி இருப் பதைக் கண்டேன். தெய்வத்துக்கு அடுத்து அவர்கள் பச்சிலை களையே தம்நோய் நீக்கும் மருந்தாக நம்பி வெற்றியும் பெறு கின்றனர். நம்நாட்டுச் சித்த வைத்திய மரபுகள் நாட்டிலெல் லாம் அருகி வந்த போதிலும் அந்தக் கல்லா மாக்கள் அந்த முறையைப் போற்றுவது கண்டு மகிழ்ந்தேன்.

இனி அவர்கள் மொழி அமைப்பில் உள்ள சில பண்பாட்டு மரபினையும் எண்ணிப் பார்க்க வேண்டும். சிலருடைய பெயர்கள் மாண்பன், மாண்பி, நஞ்சன், நஞ்சி, வீரன், வீரி, சீர்த்தன், சீர்த்தி என உள்ளன. நஞ்சன், நஞ்சி என்பன சிவன், சக்தியின் பெயர்கள் என்பர். அவர்கள் பெயர் அமைப் பிலேயே மாண்பும், இறைத்தன்மையும் வீரமும் சீர்த்தியும் விளங்குகின்றன. பெரியோர்களை 'மூப்பர் என்றே அழைப் பதை முன்னரே குறித்துள்ளேன். விழாக்களை 'ஓட்டுக் கவா'— ஓட்டாய்வாரா' என்ற பெயர்களாலே அழைக் கின்றனர். இதனால் அவர்தம் விழாக்கள் அனைத்தும் அனை வரும் 'ஒட்டுமொத்தமாக' வந்து ஆற்றுவனவாகவே அமை கின்றன என்பது புலனாகும். மற்றவர் கொடுமை என்ன செய்தாலும் அவர்களைப் பழித்துரைக்கும் மரபு சிலரிடம் காண முடியாதது. சிவசாரத்தால் தம்மிக்க துன்ப எல்லையில் கூறுவது 'நீரா' என்ற சொல் ஒன்றேயாகும். இதற்கு விளக்கம் கேட்டபோது அவர்கள் தமக்குத் தீங்கிழைத்த

மூன்றுள்ள அவனிடத்தில் உள்ள ஆணவம் சாக வேண்டும்' என்பதன் கருக்கமே அது என்றனர். இது கேட்ட நான் எல்லாச் சமய உண்மைகளும் வள்ளுவர் விளக்கமும் இச்சிறு சொல்லில் அடங்கிய பெருமையினையும் அதை உபயோகிக்கும் அக்கல்லா மாக்களின் உயர்வினையும் எண்ணி எண்ணி உருகினேன்.

இவர்கள் வழக்கத்தில் உள்ள சில சொற்கள் இவர்தம் மரியாதை உணர்வை நமக்கு உணர்த்துவனவாம். (பெரும் பாலும் முன்னிலை வினையை வியங்கோளாகவே இவர்கள் ஆளுகின்றனர். காணிய, ஊட்டமாடிய. தரக்கொளிய போன்ற சொற்களையும் அவற்றில் அமைந்த பொருள் நலன் களையும் சொல்லினிமையினையும் எண்ணிப் போற்றினேன்.)

பண்டிகையை 'நோன்பி' எனவே அழைக்கின்றனர். இறைவனிடம் வேண்டுதலைச் 'சாட்டுதல்' என்கின்றனர். வேண்டுதல் அல்லது முறையிடல் என்ற பொருளில் வரும் 'சாற்றுதலி'ன் மருவாக இது இருக்கலாம். வருதி, போதி, வருக, வாருக, போக, தின்னுக என்னும் வியங்கோள் வினைகள் இவர்தம் வழக்கத்தில் சாதாரணமாக உள்ளன. கூலி ஏலம் எடுத்து ஒப்பந்தம் பெறும் (Contract) ஒன்றை இவர்கள் 'கூப்பு' என்ற சொல்லிலே அழைக்கின்றனர். இவர்கள் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும் முறை, பெயரன், பெயர்த்தி என்ற பாட்டன் பாட்டி வழி மரபுப் பெயர் களாகவே உள்ளது. இவ்வாறு இவர்தம் மொழிநலம் உயர்ந்த ஒன்றாகின்றது.

எனவே எங்கோ ஒதுக்கிடங்களில் தனித்து வாழும் இக்கல்லா மரபினர் (T.P) வாழ்வை நுணுகி ஆராயின் எத்தனையோ உண்மைகள் புலனாகும். ஒவ்வொரு வாழ்வு நெறியிலும் இம்மலைவாழ்மக்கள் தமக்கென அமைந்த வழியிலே சமுதாய உணர்வோடும் தெய்வ நம்பிக்

கையோடும், மொழி அறிவோடும், பிற நல்லியல்புகளோடும் தத்தம் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் அமைத்துக் கொண்டு வாழ்கின்ற நிலைகாண நல்லவர் உள்ளம் மகிழும். நாமும் மகிழ்வோம்.

ஆம்! நாகரிக மனிதனால் விடப்பெற்ற எத்தனையோ பழக்க வழக்கங்களும் மரபுகளும் நம்பிக்கைகளும் மொழி மரபுகளும் இக்கல்லா மக்களால் போற்றிக் காப்பாற்றப் பெற்று அவை அங்கே வாழ்ந்து வையத்து மனிதப் பண்பு இன்னும் வற்றிவிடவில்லை என்பதை நமக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கின்றன. அரசாங்கங்களும் அறிஞர்களும் இத்துறையில் இன்னும் கருத்திருத்த வேண்டும்.

# கல்வி நலம் கண்ட கற்பகம்

என்னை நான் நன்கு உணராத அந்த இளமைக்காலம். ஊரில் ஐந்தாம் வகுப்பு முடித்து விடுமுறையில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தேன். நெற்றியில் திருநீறும் சந்தனப் பொட்டும் துலங்க ஒருவர், வேறு இருவருடன் நாங்கள் விளையாடும் இடத்துக்கு வந்தார். எங்களுடன் ஏதோ பேசினார். என்னை அழைத்துக்கொண்டு என் வீட்டிற்குள் வந்தார். என் அன்னையாருடனும் பாட்டியுடனும் ஏதேதோ பேசினார். பிறகு என்னைப் பார்த்து வாழ்த்தி, முதுகில் தட்டிக் கொடுத்துச் சென்று விட்டார்.

எங்களூர் அங்கம்பாக்கம். பாலாற்றங்கரையில் தென் புறம், வடகரையில் உள்ளது வாலாஜாபாத். அதில் உள்ளது இந்து மத பாடசாலை என்னும் 'மாணிக்கவாசகர் சபை'யைச் சேர்ந்த அப்பள்ளிக்கூடத்தின் நிறுவனர் அவர் என்றும் அவர்கள் பள்ளியில் ஆறாம் வகுப்பில் என்னைச் சேர்க்குமாறு

அன்னையிடம் சொல்லிச் சென்றார் எனவும் அறிந்தேன். அப்படியே வேறு சில பெற்றோர்களையும் அவர் சந்தித்துப் பேசியுள்ளார். அவ்வாறே வாலாஜாபாத் சுற்றிலுமுள்ள எல்லா ஊர்களுக்கும் சென்று இளங்குழந்தைகளை அழைப்பாராம். இளந்தாடி, இனியமுகம், இன்சொல் இவை கலந்த அவர் தோற்றத்தில் நான் ஈடுபட்டேன். அடுத்த ஜூனில் அவர் பள்ளியில் சேர்ந்தேன். அந்தக் காலத்திலேயே இவரைப் போன்று, கல்வியில் ஆக்கங் காட்டிய நல்லவர்—பெரியவர் வேறு யாரும் இலர் என்று எண்ணினேன்.

அன்று மிகச்சிறிய பள்ளியாக எட்டாம் வகுப்பு வரையில் சுமார் இருநூறு மாணவர்களுடன், விடுதி ஒன்றும் இல்லாமல் 'மாணிக்கவாசகர் சபை' என்ற நிறுவனத்தின் அடிப்படையில் அமைந்ததே இந்து மத பாடசாலை. சபையின் சார்பில் நடைபெற்றதால் அது 'சபை பாடசாலை' எனவே அன்று அழைக்கப் பெற்றது. (1924-25) அதன் நிறுவனர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் வாலாஜாபாத் தியாகராஜ முதலியாரின் திருமகனார். எட்டாம் வகுப்பு வரையில் பயின்று, ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர். உண்மையிலே வாழ்வைத் தியாகம் செய்து, கல்வி வளர்ச்சியிலே முற்றும் கருத்திருத்தி, ஏழை மக்களைத் தாமே ஊர்தோறும் நாடிச் சென்று, 'தாமே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்' இறைவனைப் போன்று, பிள்ளைகளைக் கூட்டி வந்து பள்ளியில் படிக்க வைத்தார். அவரும் அவர்தம் பள்ளியும் இல்லையானால் என் போன்ற ஆயிரம் ஆயிரம் மக்களின் வாழ்வு மண்ணோடு மண்ணாய்க் கலந்து போய் இருக்கும்.

இந்து மத பாட சாலையில் பயின்ற மாணவர் இன்று நாடெங்கினும்—ஏன்—உலகெங்கினும்கூட இருக்கிறார்கள் என்லாம். சிலர் உயர் பதவிகளிலும் இருந்தனர்—இருக்

கின்றனர். திரு. வா. தி. மா. அவர்தம் உலையா உழைப்பி னால் வளர்ந்த பள்ளி இன்று அவர் பெயராலேயே மேநிலைப் பள்ளியாய்ச் சிறக்க ஓங்கி உள்ள நிலை அவர்தம் தூய உள்ளத்தினையும் தொண்டு நிலையையும் எடுத்துக் காட்டுகிறது.

அந்தக் காலத்தில்—தொடக்க நாளில் அவருக்கு உடன் நின்று உதவியவர் அந்த ஊரிலேயே வாழ்ந்த தானப்ப செட்டியாரின் மகனார் கன்னிவேலு செட்டியார் அவர்கள். பின், 1932—33க்குப் பிறகு, திரு. வா. தி. மா. அவர்தம் அண்ணார் திரு. வா. தி. பஞ்சாட்சர முதலியார் அவர்கள் படையாளர் கணக்குத் துறையிலிருந்து ஓய்வு பெற்று, பூனாவி லிருந்து திரும்பினார். அப்போது பள்ளி வளர்ந்து பெரும் பொருள் முட்டுப்பாட்டினைக் கண்டது. அரசாங்க மானியம் ஓரளவிலேயே நின்றதால், முழுதும் நினைத்தபடி செயலாற்ற முடியவில்லை. அப்பா எனும் வா. தி. மா. அவர்தம் கல்வி ஆர்வத்துக்கு அரசாங்கம் ஈடு கொடுத்து உதவ முடியவில்லை. அப்போதுதான் திரு. வா. தி, ப. அவர்கள் தாம் வந்தவுடன் தாமும் தம்பியும் உயிர் ஒப்பந்த நிதி முகவர்களாக இருந்து நலன் காண முயன்றார். அதில் வெற்றியும் பெற்றார். சில ஆண்டுகளுக்குப் பின் அவர் மறைய, அவருக்குப் பின்பும் திரு. வா. தி. மா. அவர்கள் வேறு ஒன்றையும் கருத்தில் வையாது பள்ளி ஒன்றையே குறியாகக் கொண்டார். பரந்த நிலப் பரப்பை வாங்கினார். நாட்டில் உள்ள நல்லவர் பலரை வருமாறு பணித்து, பள்ளியின் செயல்முறைகளைக் காட்டி, அனைவர்தம் பாராட்டினையும் பெற்றார்.

இன்றைய விடுதியுள்ள இடத்தினை அப்பா அவர்களும் பெரியப்பா அவர்களும் வாங்கிய நாளில் இதன் வளர்ச்சி இத்துணை உயர்வு பெறும் என எண்ணி இருக்கமாட்டார்கள். அப்பா அவர்தம் தூய சிந்தையும் தொண்டே வாழ்வெனக்

கொண்ட செம்மையும் வளர்த்து வளர்ந்து இன்று அவர் பெயரிலேயே மேநிலைப்பள்ளியாக உயர்ந்துள்ளது. அரசாங் கங்கள் தொழிற் கல்வியைப் பற்றி எண்ணியே பார்க்காத அந்த நாளில், கல்வியொடு தொழிற்கல்வியை இணைத்து, பாய்முடைதல், நெய்தல், நூல்நூற்றல், அச்சுக்கோத்தல், அச்சிடுதல், நூல்கட்டுதல் (binding), உழவு, பொத்தான் செய்தல் போன்ற பல தொழில்களைக் கல்வியொடு இணைத்து, மாணவர் அவற்றைக் கட்டாயம் பயிலும் திட்டத்தினை வெற்றிகரமாக அப்பா அவர்கள் செயலாக் கினார். எனவே தொழிற்கல்வியில் தந்தை—'அப்பா'— எனப் பொருந்தும்.

ஒருநாள் மாலை அப்பா, பெரியப்பா இருவரும் ஊரில் இல்லை. 1934-35 என எண்ணுகிறேன். அன்று அப்பள்ளியில் நானும் பணிபுரிந்தேன். இன்றைய செயலாளர் அண்ணா துணைக அரசு அவர்களும் அந்த ஆண்டில்தான் அங்கே ஆசிரியர் பணியினை ஏற்றார். எங்களிடம் அப்பா அவர்கள் புது இடத்தில் நல்லதொரு நாளில் குடி புக வேண்டும் என்று சொல்லி இருந்தார்கள். அவர்கள் ஊரில் இல்லாத அந்த நாள் மிக நல்ல நாளாக எங்களுக்குப்பட்டது. உடனே நானும் அண்ணாவும் நல்ல வேளையில்—அந்தப் புதிய இடத்தில் இருந்த பழைய கட்டடத்தில் பால் காய்ச்சி, பலகாரம் செய்து, பலருக்கும் கொடுத்து உண்டோம். வாழ்வு தொடங்கப் பெற்றது. எனினும் அப்பா என்ன சொல்வார்களோ என்ற அச்சம் இருந்தது. அவர் ஊருக்கு வந்ததும் அவரிடம் நடந்ததைக் கூறினோம். அவர் உடனே மகிழ்ந்து தட்டிக் கொடுத்துப் பாராட்டினார்கள். உடனே வேறிடத்தில் இருந்த விடுதியினை அங்கே மாற்றச் செய்தார் கள். பெரியப்பாவும் மகிழ்ந்தார்கள். ஆம்! அந்த இடமும் அதன் சுற்றிலும் பின் பெற்ற இடங்களுமே இன்று அவர்

பெயரால் 'மாசிலாமணி நகர்' என்று அழைக்கப்பெறும் சிறப்பினைப் பெற்றுள்ளது.

மறவாதிருந்தும், 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்று அடியவர் இறைவனோடு இயைந்த தொடர்பினைக் கூறியபடி அப்பா அவர்கள் மறந்தாலும்—இவரும் மறக்கவில்லை—இவர் உடல், உள்ளம், நா அனைத்தும் பள்ளியைப் பற்றி எண்ணி, பேசி, செயலாற்றி இந்த நிலையில் இதை வளர்த்துள்ளது. இரவு 9 மணிக்குச் சென்னையிலிருந்து வந்து, அந்த வேளையில் மாணவர் உணவகம், உறங்குமிடம், அட்டிற்சாலை, பண்டகச் சாலை, பள்ளி அலுவலகம் அனைத்தையும் இரவு பன்னிரண்டு மணிவரையில் பார்த்து, வரவு செலவுகள் பற்றிக் கேட்டறிந்து - தேவையாயின் கண்டு, உணர்ந்து, வேண்டுவன தந்து படுப்பார்—ஆம்! வெறும் ஒட்டுத்திண்ணையில் பாயில் படுத்து உறங்குவார். விடியல் நான்கு மணிக்கு முன் எழுந்து, மறுபடியும் அனைவருடனும் மேல் நடக்க வேண்டியவற்றைப் பற்றிப் பேசி, குளித்து, நடராசரைக் கும்பிட்டு வெறும் கஞ்சியினை வழியில் குடித்துக் கொண்டே காலை 6-20க்கு இரயில் ஏறிச் சென்னைக்குச் செல்வார். அவர்தம் உயிர் ஒப்பந்தப் பணியும் மக்களை அறிமுகமாக்கி அழைத்து வந்து பள்ளியினைக் காட்டும் செயலும், பள்ளி, விடுதி பற்றிய மானியம் முதலியன பெற வழிகாணும் வகையும் அவரைப் பெரும்பாலும் சென்னை வாசியாகவே ஆக்கிவிட்டன. ஆயினும் அவர் உள்ளம் 'இந்து மத பாடசாலை' இருக்கும் இடத்தினையே எண்ணிக் கொண்டிருக்கும். அவர் வளர்த்த அந்த அற நிலையம் இடைப்பட்ட முட்டுக் கட்டையினைக் கடந்து இன்று அவர் பெயராலேயே மேநிலைப் பள்ளியாக உயர்ந்துள்ள நிலையினை எண்ணி மகிழ்கின்றேன்—அவர் எங்கிருந்தாலும் அவர் ஆவி பள்ளியிலேயே சுழன்று கொண்டு இருக்கும். ஆதலால் அப்பள்ளியினை நோக்கி வணங்குகின்றேன்.

அரசியலை விட்டு நெடுந்தூரம் விலகி இருக்க வேண்டும் என்று பலருக்கும் அப்பா சொல்வார்கள். ஆனால் 1927-28இல் ஏனோ அவர்களே மாவட்டக் கழகத்துக்குப் போட்டி இட்டார்கள், இன்று போல, 18 வயது பெற்ற யாவருக்கும் வாக்குரிமை இல்லாத காலம் அது. வரிகட்டுவோருக்கே வாக்கு, அப்பா அவர்கள் பலப்பல் வகையான பிரசுரங்கள், சுவரொட்டிகள் அடித்து வழங்கி, ஒட்டி, ஊர்தோறும் சென்று வாக்கினைக் கேட்டார்கள். என் அன்றைய பிஞ்சு உள்ளமும் (நான் மாணவன்) அவர் அலைச்சலைக் கண்டு கண்ணீர் வடித்தது. அவர் வெற்றி பெறவில்லை. ஆனால் அதுவே அவர்தம் கடைசிப் போட்டியாகவும் அமைந்தது. அவர் எந்தக் கட்சியினையும் சார்ந்தவரல்லர். சைவ சமயத்தவ ராயினும், அதை வளர்ப்பவராயினும் பிற சமயங்களையும் ஆதரித்தே வந்தார். சாதி மத வேறுபாடற்ற வாழ்க்கை அவருடையது. நான் அவருடன் பழகிய காரணத்தினாலே சாதிப்பற்றையும், சாதிப்பெயரையும் விட்டதோடு, பல சீர்திருத்தங்களையும் மேற்கொண்டேன். என் வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளிலெல்லாம் அப்பா அவர்கள் தோள் கொடுத்து என்னைத் தூக்கிவிட்ட நிலையினை எண்ணி நிற்கின்றேன். இன்று என் அன்னையின் பெயரால் குழந்தைகள் பள்ளி முதல் கல்லூரி வரையில் சிறந்த வகையில் நான் நடத்துகிறேன் என்றால் அதற்கு என் உள்ளத்தில் வித்திட்டவர் அப்பா அவர்களே. இன்று இருந்தால் என் செயல் கண்டு கட்டித்தழுவி மகிழ்ந்து வாழ்த்துவாரே என ஏங்குகிறேன்.

நான் ஐதராபாத்திற்கு, தமிழக அரசின் ஆணை வழியே பேராசிரியர் பொறுப்பேற்கச் சென்ற நாளில் பெரு விழா நடத்தி, பள்ளி மலராகிய 'குருகுலத்'தின் மேலட்டையில் என் படத்தினையும் உள்ளே என் வாழ்க்கையினையும் அச்சிட்டு, என்னை வழியனுப்பினார். ஆனால் நான் திரும்பி வந்த

போது 1967 ஏப்பிரலில் அப்பா அவர்கள் நோய்வாய்ப்பட்டு, டாக்டர் சுந்தரவதனம் மருத்துவமனையில் படுக்கையாக இருந்தார். அவருக்கு உற்றவராக, பள்ளி வளர்ச்சியில் கருத்துடையவராக இருந்த ஒரு சிலருள் டாக்டர் சுந்தரவதனமும் ஒருவர். செங்கற்பட்டு மேலமையூர் வேதாசல முதலியார், காஞ்சிபுரம் குமரன் பிரஸ் உரிமையாளர் குப்புசாமி முதலியார், ஆக்கூர் சண்முக முதலியார், ஐயங்கார் குளம் இலட்சுமண முதலியார், மேனல்லூர் கிருஷ்ணசாமி முதலியார், சென்னை மாணிக்கச் செட்டியார், மணி கோட்டீஸ்வர முதலியார், மதறாஸ் பளைகாட் கம்பெனி உரிமையாளர் அனைவரும் பள்ளி வளர்ச்சிக்கு அப்பாவுக்கு வேண்டுங்காலத்து உதவியவர்கள்.

டாக்டர் சுந்தரவதனம் மருத்துவமனையில் நான் சென்ற போது அவர்களால் அதிகமாகப் பேச முடியவில்லை. அதற்கு முன்பே பள்ளியைப் பற்றியும் அதன் வருங்காலம் பற்றியும் ஓர் ஆவணம் எழுதி வைத்திருந்தார். வருங்காலத்தில் தான் தொடங்கியது நன்கு வளர, சில நல்லவர்கள் அமைந்த ஒரு குழுவினை அமைத்திருந்தார். எனினும் மருத்துவமனையில் இருந்தபோது, அவர் முற்றும் நம்பிய ஒருவரால் அந்த ஆவணம் மாற்றி எழுதப் பெற்றது. உடன் அப்பா அவர்கள் உயிரும் பிரிந்தது. நானும் வாலாஜாபாத் சென்று அவர் இறுயாத்திரையில் கலந்து, கண்ணீர் உகுத்து, கசிந்து நின்றேன்.

ஆவண மாற்றத்தால் அமைதியாகத் தொடர்ந்து நடக்க வேண்டிய பள்ளிக்குச் சில தடைகள் உண்டாயின. பள்ளியே மூடும் நிலைக்குச் சென்றது. எனினும் இறைவன் அருளாலும் சென்னையில் இருந்த கல்வித்துறையில் ஒருவர், கோட்டையில் இருந்த ஒருவர் ஆகியோர் உடன் துணையாலும், ஊரில் இருந்த நடராச முதலியார் (அப்பா அவர்தம் சிறிய

தந்தையார் பேரனும் பள்ளிக்காக உடன் நின்று உழைத்த துரைசாமி முதலியார் மகனும் ஆவார்) அண்ணா தணிகை அரசு ஆகியோர் முயற்சியாலும் பிறர்தம் உறுதுணையாலும் பள்ளி பழைய நிலையினைப் பெற்றதோடு, மேநிலைப் பள்ளி யாகவும் உயர்ந்துள்ளது. (தற்போது நடராச முதலியார் அவர்களும் இல்லை). அப்பா அவர்களின் தூய உள்ளமும் தொண்டுமே அவர் தொடங்கிய பணியினை உலகில் என்றும் நின்று நிலவும் வகையில் இவர்களை ஊக்கி உணர்வூட்டி வருகின்றன என எண்ணுகிறேன். அடிக்கடி அப்பா இருக்கும் வரை அங்கே சென்று பெரும்பாலும் எல்லா விழாக்களிலும் கலந்து கொண்ட நான், இன்று அவர் இல்லாத வெற்றி டத்தைக் காணமுடியாது தளரும் உள்ளத்தினாலேயே அங்கே செல்வதில்லை. சொந்த ஊருக்குச் சென்றாலும் கூட, விடுதிக்குச் செல்லாது வந்துவிடுவேன். எனினும் தொலைவி லிருந்து அதன் வளர்ச்சியினைக் கேட்டுக் கேட்டு மகிழ்கின்றேன்.

இன்று அவருக்கு நூற்றாண்டு விழா நடைபெறுகின்றது. நான் அறிந்த அந்தப் பள்ளி தொடங்கி எட்டு ஆண்டுகள் கழித்து, 1924 முதல் இன்று வரை அதன் நிலையினை எண்ணி நிற்கின்றேன். தன்னலமற்ற, உள்ளத் தூய்மையும் உளத் துறவும் கொண்ட, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பாங்கும் உடைய அப்பா வா.தி.மா. அவர்கள் திருப் பெயர் வையம் உள்ளளவும் வாழும் என்பது உறுதி. என்றோ திரு. கல்கி எழுதிய 'பாளாறும் பகற்கனவும்' போலாது என்றும் உலக வாழ்வில் அவர் பள்ளி ஒளி விளக்காமாக ஓங்கி உயரும்—வாழும்—வளரும்—அவரும் வாழ்வார்.

# கனவு நனவாகியது

இந்தியா 1947-இல் விடுதலை பெற்றது. அதை அடுத்து நாடு பல வகையில் முன்னேற வேண்டுமென நல்லவர் பலரும் கனவுகள் கண்டனர். அவற்றுள் சில நனவாகியுள்ளன. பல வேறு நிலையில் உள்ளன. இந்த வகையில் அன்று நான் கண்ட ஒரு கனவு நனவாகியதையே இங்கே நான் குறிக்கின்றேன்.

அனைத்துக் கல்லூரி மாணவர் மன்ற மலருக்குக் கட்டுரை வேண்டும் என்று கேட்டவுடனேயே எனக்கு இந்த நினைவுதான் உண்டாயிற்று. ஆம்! எல்லா மாணவர்களும் சமுதாயத் தொண்டினையே வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். நம் நாட்டில் அறியா நிலையில் வாழும் மக்கள் பலகோடி உள்ளனர். அவர்கள் திருத்தம் பெற்றாலன்றி நாடு முன்னேற முடியாது. ஒருசில ஒரு சிலருக்குத் தான் என்ற நிலைமாறி, 'எல்லாச் செல்வமும் எய்த' வேண்டிய நிலை உருவானாலன்றி உலகமும் நாடும் சீர்பெற வழியில்லை. அந்த நிலைக்குரிய ஆக்கப் பணியை இன்றைய மாணவர்களே மேற்கொள்ளவேண்டும். பழைமையில் ஊறிய காரணத்தாலும் தாம் பெற்ற சில சலுகைகளையோ இன்ப வாழ்வின் கூறுகளையோ விட நினைக்கவும் மறுக்கவும் சில பெரியோர்களாலும் தலைவர்களாலும் அத்தகைய சமதர்மச் சமுதாயத்தை உருவாக்க முடியாது. எனவேதான் மாணவர்களை நோக்கி—வருங்கால உலகை உருவாக்கும் நல்லவர்களை நோக்கி இவ்வேண்டுகோளை விடுக்கின்றேன்.

இந்தியா விடுதலை பெற்ற உடன் மக்கள் தொண்டினை அடிப்படையாகக் கொண்ட கல்விமுறை வேண்டும் என்று கனவு கண்டவன் நான்-எனவே அந்த நாளிலே 'இந்திய முதற் சட்டம்' என்ற நூலை எழுதி வெளியிட்டேன். உரிமையற்ற இந்தியாவின் குடியரசு இந்தியாவின்—முதற் சட்டமாக அது அமைய வேண்டும் என்பது என் ஆசை. பட்டம் பெறப்

பயிலும் ஒவ்வொருவரும் தனித் தனியோ கூட்டாகவோ ஒவ்வொரு கிராமத்தினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, ஓராண்டு அங்கேயே சென்று அக்கல்லா மக்களோடு கலந்து வாழ்ந்து, அவர் உண்பன உண்டு உடுப்பன உடுத்து, உழைத்து அவர்களை நல்லாற்றுப்படுத்தியபின்பே பட்டம் பெறத் தகுதி யாவர் என்பதே அச்சட்டத்தின் அடிப்படை. அதற்குரிய பாத்திரங்களை அமைத்து, அதை நாடக வடிவில் ஆக்கி 1950இல் வெளியிட்டேன். அன்று நான் கண்ட கனவு, இன்று நனவாவதை நோக்கி மகிழ்கின்றேன்.

அன்று அந்த நூலுக்கு முன்னுரை வழங்கிய முன்னாள் தமிழக முதல்வர் உயர்திரு. மீ. பக்தவத்சலம் அவர்கள் குறிப்பிட்டுள்ளதையும் இங்கே காட்ட விரும்புகிறேன்.

> ''கிராம முன்னேற்றமின்றி நம்நாடு உயர்நிலை அடையாது என்பது யாவரும் உணர்ந்து ஒப்புக் கொள்ளும் விஷயம். ஆனால் அதைச் சாதிப்பதில் கவனம் செலுத்த வழி தேடவேண்டும். இத்தொண்டில் தான் ஆசிரியர் ஈடுபடுகிறார். கிராமத் தொண்டின் அவசியத்தை நிர்ப்பந்தமாகவே வற்புறுத்த வேண்டு மென்பதை' இந்நூலில் எடுத்துக் காட்டுகிறார். நிர்ப் பந்தமே ருசியை உண்டாக்கும் என்பது ஆசிரியர் கோட் பாடு. கிராமச் சீர்த்திருத்த வேலையே குடியரசு கவனம் செலுத்த வேண்டிய முதல் விஷயம் என்பதைத் தம் நூலின் பெயரினால் ஆசிரியர் விளக்குகிறார்.
>
> குடியரசு பெற்ற நாட்டை நிர்மாணிக்கும் சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர்களுக்கும், குடியாட்சி உரிமை பெற்றும் நாட்டின் நிலைமை மாறாதது கண்டு ஏங்குபவர்களுக்கும் இந்நூல் நல்ல சிந்தனையைக் கிளப்பக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்''

என்று அவர்கள் 30-4-1950இல் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆம். அன்று எண்ணிய எண்ணம் இன்று செயலில் முகிழ்ப்பது கண்டு மகிழ்ச்சி பிறக்கிறது. கால் நூற்றாண்டு கழிந்த பிறகாவது நாடு விழிப்படைந்த நிலை கண்டு மகிழ முடிகின்றது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் அவர்கள் பல்வேறு மாற்றங்களைச் செய்து வருவதை நாடு காண்கின்றது. அடுத்த ஆண்டு முதல் முதுகலை வகுப்பில் சேர விரும்பும் மாணவர்களுக்கும் பாடமுறையும் தேர்வு முறையும் மாற்றம் பெற்றுள்ளமை அறிவோம். பருவ முறைத்தேர்வும் பயிலுமிடம் தரும் தகுதியும், புகுத்தப் பெறுகின்றன. அவற்றுடன் மாணவர்தம் சமூகத் தொண்டினுக்கும் இடம் கொடுப்பதையே ஈண்டு நான் குறிக்க விரும்புகிறேன். ஆம்! ஒவ்வொரு மாணவரும் பயிலும் காலத்தில் சமூகத்தொண்டினைக் கட்டாயம் செய்தே தீரவேண்டுமெனத் தீட்டி, அதற்கென நூறு மதிப்பெண்களும் ஒதுக்கப் பெற்றுள்ளமை போற்றுதற்குரியதாகும். எனவே அடுத்த ஆண்டு முதல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குச் சமூகத் தொண்டு செய்யும் நல்ல வாய்ப்பு தரப்பெற்றுள்ளது. அவர் வழியே நாடு நலம் பெற வகை காணப்பெற்றுள்ளது.

சிலர் விளம்பரத்துக்காகப் படம் எடுத்துக் கொண்டு பட்டுப்புடவையும் பகட்டுடையும் டெரிலின் ஷர்டும் பேண்டும் நலுங்காமல் கிராமத்தொண்டு செய்வதாகப் பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆனால் இந்தப் புதிய அமைப்பில் அந்த வெளிவேடத்துக்கு இடம் தருதல் கூடாது. மாணவர்கள் உண்மையில் கிராமத் தொண்டினை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் நல்ல சமுதாயத் தொண்டினை நாடு எதிர்நோக்கியுள்ளது. தாள்களில் தீட்டப்பெறும் திட்டம் ஏட்டளவில் அல்லாது—விளம்பர அளவில் நில்லாது—நேரிடையாக

மக்களிடையில் பரவவேண்டும். நல்ல மாணவர் சமுதாயம் மேற்கொள்ள இருக்கும் இந்த சமுதாயத் தொண்டின் அடிப்படையில் அமையும் கல்வி முறை அவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும் என்பது உறுதி.

நம்நாடு கிராமங்களால் ஆனது; உழவுத்தொழிலை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும் இதுவரை கிராமங்களையும் அவற்றின் உழவுத்தொழிலையும் நாடாளுபவர் கவனிக்கத் தவறிவிட்டனர். எனவேதான் தற்போது எண்ணற்ற அல்லல்களை நாம் ஏற்க வேண்டியுள்ளது. எனினும் இன்றைய எழுச்சியும் உணர்ச்சியும் சமுதாயத்தைத் தட்டிஎழுப்பும் வகையில் அமைந்து செயல்பட்டு வரத் தொடங்யுள்ளதைக் காண மகிழ்ச்சி பிறக்கிறது. அச்செயல் முறையுள் ஒன்றே பயின்று பெறும் பட்டத்துடன் சமுதாயத் தொண்டை இணைப்பது. இந்த ஆக்க நெறிக்கு வழிகோலிய சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தரைப் பாராட்டுகிறேன். இந்திய நாட்டு எல்லாப் பல்கலைக் கழகங்களும் இந்தச் சமுதாயத்தொண்டின் அடிப்படையில் பாடத்திட்டம் அமைக்க முற்பட வேண்டும் எனக் குறிப்பிட வேண்டுகிறேன். வருங்கால மாணவச் சமுதாயம் இத்திட்டத்தை ஏற்றுத் திறம்படச் செயலாற்றுவதோடு தம் நாட்டையும் வீட்டையும் உயர்த்தி, தங்கள் வாழ்வையும் உயர்த்திக்கொள்ள முயல வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். வாழ்க மாணவர் தொண்டு! வளர்க சமுதாய நலன்!

# குழந்தைகள் கல்வி

உலகமெல்லாம் கல்வி வளர்ச்சி பற்றிய கருத்து அதிகமாக வளர்ந்து வருகிறது. நம் பாரத நாட்டிலும் அத்தகைய நிலை வளர்ந்து வருவது பாராட்டுதற்குரியது.

ஆண்டு தோறும் கல்விக்கெனப் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப் பெறுகின்றது. தமிழ்நாட்டிலும் கல்வி வளர்ச்சி அடைந்து வருகிறது. கல்வியில் மேனிலையில் ஓரளவு அமைதி இன்மையும் ஆழ்ந்த படிப்பும் இல்லா நிலையில் அரசியல் சூழல்களும் பிறவும் அமைகின்றன என்றாலும், ஆரம்பக் கல்வி மிகவும் முன்னேற்ற நிலையில் வளர்ந்து வருவது கண்கூடு. அதிலும் இளங்குழந்தைகளின் கல்வியில் பெற்றோர் கருத்திருத்துவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அரசாங்க அடிப்படையில் கல்வி நெறியில் அடிக்கடி பல்வேறு மாற்றங்கள் நடைபெறுகின்றன. மொழி அடிப் படையிலும் பாடங்களின் அடிப்படையிலும் பயிற்சி மொழி அடிப்படையிலும் அமைப்பு முறையின் பிற அடிப்படை களிலும் எத்தனையோ மாற்றங்கள் நாட்டில் நடை பெறுவதைக் காண்கின்றோம். தத்தம் குழந்தைகளை அத்தகைய மாற்றங்களுள் சிக்க வைத்துச் சோதனை செய்து பார்க்க எந்தப் பெற்றோரும் உடன்படார். எனினும் வேறு வழியில்லை என்ற காரணத்தாலே பலர் அந்த மாற்றத்துக் குள்ளான வெள்ளப் போக்காலேயே தள்ளப்பட்டுச் செல்கின்றனர். இதற்கிடையில் பலர் தத்தம் குழந்தை களுக்கு உயர்தரக் கல்வி அளிக்க வேண்டும் என்ற கருத்தால், தம் வாழ்க்கை வசதிகளைக் குறைத்துக் கொண்டாவது பிள்ளைகள் கல்விக்குப் பெருந்தொகையினைச் செலவிட நினைக்கின்றனர்; செலவிடுகின்றனர். அரசாங்கம் கல்வியை இலவசமாக்கியது. ஒரு பக்கத்திலே நலமெனத் தோன்றி னாலும், அதன் மறுபக்கத்திலே அதன் வீழ்ச்சியும் தரக் குறைவும் நமக்குப் புலப்படுகின்றது. அரசாங்க மானியம் பெறும் பள்ளிகளின் ஒவ்வொரு வகுப்பிலும் 60 (அ) 70 வரை மாணவர் சேர்க்கப் பெறுவதால், ஆசிரியர் மாணவர் தொடர்பு பொருந்துவதில்லை. எனவே பல பெற்றோர் தம் பிள்ளைகளுக்கெனத் தனியார் பள்ளிகளை நாடுகின்றனர்,

நாட்டின் இந்தச் சூழ்நிலையைச் சிலர் நன்கு புரிந்து தனித்த வகையில் கல்வி நிலையங்களை நிறுவி, நல்ல முறையில் அவற்றை நடத்த முயற்சிகளை மேற்கொள்கின்றனர். ஆயினும் ஒருசிலர் இதை ஒரு வாணிபமாகவே கருதித் தரத்தைப் பற்றிக் கவலையுறாது, வெறும் கல்விக் கூடங்களை அமைக்கின்றனர். நாட்டில் ஊர்தொறும் பலப்பல பள்ளிகள் தோன்றுவதைக் கண்டு மகிழ்ச்சி அடையும் அதே வேளையில், அவற்றின் தரத்தைக் கண்டு வேதனையடைய வேண்டியுள்ளது. வயது மூன்றானவுடன் தம் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கப் பெற்றோர் விரும்புகின்றனர். அதிலும் ஆங்கில மோகமும் அம்மொழியைக் கற்க வேண்டுமென்ற அவாவும் அதிகமாவதால் ஆங்கிலம் பயிற்சி மொழியாக உள்ள பள்ளிகளை நாடுகின்றனர். இளங் குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் பதியும் எண்ணங்களே அவர்தம் பிற்கால வாழ்வை உருவாக்குவது உண்மையாதலால் அந்த இளம் குழந்தைகள் கல்வியையே முதலில் கவனிக்க வேண்டும். மாநில—மத்திய அரசாங்கங்கள் இந்த உண்மையை மறந்து 5½ வயது ஆன பின்பே பிள்ளைகளைத் தங்கள் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்துள்ளன. ஆயினும் பலர் தனித்த நிலையில் தெருவுதொறும் குழந்தைகள் பள்ளியைத் தோற்றுவித்து நடத்தி வருகின்றனர். ஆனால் பலவற்றின் தரம் விரும்பத்தக்கதாக இல்லை. பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமித்தும் இரண்டு மூன்று வகுப்புகளுக்கு ஓர் ஆசிரியரை இருக்க வைத்தும், சிறுசிறு அறைகளில் பல மாணவர்களை அடைத்து வைத்தும் பள்ளிகளை நடத்துவதைக் காண்கிறோம்; இளங் குழந்தைகளுக்குச் சுற்றுச் சூழலை அமைத்து, அவற்றின் மன நிலைக்கு ஏற்ற விளையாட்டுக் கருவிகளைக் கொடுத்து, கல்வியை அவ்விளையாட்டுக்கு இடையில் புகட்ட வேண்டியது கடமையாக இருக்க, பல பள்ளிகள் மாறுபட்ட நிலையில்

உள்ளன. அரசாங்க உதவியுடன் நடைபெறும் பள்ளிகளைக் காட்டிலும் நன்றாக இருக்கும் என்ற எண்ணத்துடன் பெற்றோர் இப்பள்ளிகளை நாடும்போது இவற்றின் தரம் உயர்ந்திருக்க வேண்டாமா? மாறாக ரூ. 50க்கும் ரூ. 60க்கும் தகுதியற்ற ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கும் இரண்டு மூன்று வகுப்புகளை ஒரே நேரத்தில் கொடுத்துப் பயிற்று விக்கச் சொன்னால் அவர்களால் என்ன செய்ய முடியும்? ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருக்கும் சில பெரியோர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் ஆங்கிலோ இந்தியப் பெண் களை—யாதொரு கல்வித் தகுதியும் இல்லையாயினும் பலர் நியமிக்கின்றனர். அவர்களுடைய பேச்சுக் கொச்சை ஆங்கிலமாக இருக்குமே ஒழிய, இலக்கண அடிப்படைப் பேச்சோ, எழுத்தோ அவர்களிடம் பயிலும் மாணவர்களுக்கு வருவதில்லை. இதனாலும் குழந்தைகள் பள்ளியின் தரம் குறைகின்றது.

மேலை நாடுகளில் இக்குழந்தைகள் பள்ளிகளைப் பற்றித் தனித்த அக்கறை எடுத்துக் கொண்டு அரசாங்கங்கள் செயலாற்றுகின்றன. பல துணைக் கருவிகளை வாரி வழங்கு கின்றன. அவற்றின் முயற்சியில் இளஞ்சிறுவர்தம் அறிவும் ஆற்றலும் வளர்வதை அறிய முடிகின்றது. ஆனால் நம் நாட்டு அரசாங்கமும் அது பற்றிக் கவலையுறவில்லை. தொடங்கி நடத்துபவரில் பலரும் அது பற்றிக் கவலை கொள்ளக் காணோம். எனவே இக்குழந்தைகள் பள்ளிகளால் போதுமான வகையில் கல்வி வளரவில்லை என்பது கண்கூடு.

குழந்தைகளின் கல்வி சீராக அமைய வேண்டுமானால் அரசாங்கமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஆனால் ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்விக் கூடங்களைப் போன்று வெறும் கூட்டமாக அமைத்து விடாது தரத்தொடு செயல்பட வழி வகை காண வேண்டும். அப்படியே தனியார் நடத்தும்

பள்ளிகளில் நடைபெறும் பல ஒழுங்குமுறையற்ற நிலைகள் மாற்றப் பெறல் வேண்டும். தரத்தொடு உயர்ந்த பண்பும் ஒழுக்கமும் நிறைந்த நல்லாசிரியர்களையே இளங்குழந்தை களைப் பராமரிக்க நியமிக்க வேண்டும். மகளிராயினும் தாயுள்ளம் இல்லாதவர்கள் ஆசிரியராகத் தகுதியற்றவ ராவர். அப்படியே ஆசிரியப் பயிற்சி பெற்ற அனைவருமே நல்லாசிரியராக முடியாது. 'ஒன்றும் இல்லையானால் வாத்தியார் உத்தியோகம்' என்று குறைந்த சம்பளம் இருந்த அந்த நாளிலேயே பழமொழி இருந்தது. சம்பளம் மிக்கிருக் கும் இன்றோ பலரும் இத்துறைக்கு வருவது இயல்பே. எனினும் பள்ளியை நடத்துபவர்கள் தாயுள்ளமும் பண்பும் ஒழுக்கமும் நிறைந்த பெண்களையே குழந்தைகள் பள்ளி களுக்கு ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வியில் கொண்ட பற்றின் காரணமாக எவ்வளவு பணமாயினும் செலவு செய்ய முன்வருவதைப் பயன்படுத்தி, அந்தச் சம்பளம் பெற்றும் அதற்கேற்ற கல்வித்தரம் இல்லையாயின் அது பெருந் தவறாகும். பிள்ளைகளுக்கு விளையாட்டு உணர்வுடன் கல்வி கற்பிக்க எண்ணற்ற துணைக்கருவிகள் உள்ளன. பல பள்ளிகளில் அவை வாங்கப் பெறுவதில்லை; வாங்கி வைத் துள்ள சில பள்ளிகளில் பல ஆசிரியர்கள் அவற்றைப் பயன் படுத்துவதில்லை. இக்குறை நீக்கப் பெறல் வேண்டும்.

சில பள்ளிகளில் வெறும் பேச்சு மொழியை மட்டும் குழந்தைகளுக்குக் கிளிப் பிள்ளைகளுக்குச் சொல்லுவது போலச் சொல்லிக் கொடுத்து, வெளிப்பகட்டில் செயலாற்று கின்றனர். பெற்றோரில் சிலரும் இந்தப் பேச்சுகளில் மயங்கி மகிழ்கின்றனர். ஆனால் இப்பிள்ளைகள் மேல் வகுப்பிற்கு வரும்போது பல பாடங்களில் குறையுடையவர்களாக உள்ளனர். எனவே பேச்சு, எழுத்து இரண்டிலும் அந்த இளங்குழந்தைகள் நன்கு பயிற்றிடப் பெறல் வேண்டும்.

இளங்குழந்தைகளின் கல்வித்தரம் ஒழுங்கில்லாத ஒரே காரணம்தான் நாட்டில் இன்றைய கல்விக்கூடங்களெல்லாம் 'ஆரவாரக் கூட்டங்களாக' மாறுகின்ற நிலையில் நம்மை வைத்துள்ளது. இளம்குழந்தைகள் உள்ளம் மாசு படியின் பின் வாழ்வு சிறக்குமா? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? எனவே நாடு சிறக்க வேண்டுமாயின்—வருங் காலச் சமுதாயம் வளமுடையதாக வேண்டுமாயின்—இளம் குழந்தைகள் கல்வி முறை செம்மையுற வேண்டும். அரசாங்கமும் தனி மனிதரும் சமுதாயமும் இந்த வகையில் எண்ணிச் செயலாற்ற வேண்டுவது உடன் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமையாகும். 'உடன் செயலாற்றிச் சிறக்க வழி காண்பாம் வாரீர்' என அனைவரையும் அழைக் கிறேன்.

# தேவை - உயர்ந்த குறிக்கோள்

இன்றைய மாணவரிடை 'உயர்ந்த குறிக்கோள்' இடம் பெறாமையே சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது,

வருங்காலச் சமுதாயத்தை வாழவைக்க வேண்டியவர்கள் மாணவர்கள். கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் நாளை நாட்டை ஆளவும் சீர்திருத்த வும் செம்மைப்படுத்தவும் வேண்டியவராவர். அவர்தம் செம்மை நலம் பொருந்திய, ஒழுக்கநெறியும் பண்பாட்டு வாழ்க்கையும் நாட்டையும் உலகையும் நடத்திச் செல்லும் திறம் பெற்றன, இத்தகைய மாணவர்களிடையே இன்று உலகமெங்கணும் அமைதி நிலவவில்லையோ என நினைக்கத் தக்க வகையில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுவதைக் காண்கின் றோம். அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி

ஆகிய பண்பாட்டு நிலைக்களன்களில் தம்மைச் செலுத்திச் செம்மை நெறியில் வாழ வேண்டிய மாணவர் உலகில் பல்வேறு சிக்கல்கள் உண்டாவதையும் அவற்றின் வழி ஆரவாரம் வேலை நிறுத்தம், மாறுபாட்டு உணர்வு முதலியன மிகுவதையும் இன்று உலகின் பலபாகங்களிலும் காண்கின்றோம். இவற்றின் காரணங்களை அலசி ஆராய்ந்து பார்ப்பின் அடிப்படை உண்மை ஓரளவு விளங்காமற் போகாது.

மாணவர் சமூகத்திற்கு மட்டுமின்றி, உலகில் ஒவ்வொருவருக்கும் எல்லாக்காலத்திலும் தீர வேண்டிய பிரச்சினைகள் இருந்து கொண்டே இருக்கும். அவ்வப்போது வாழ்கின்ற மக்கள் அவ்வவற்றை ஆராய்ந்து தீர்வு காண்பது இயல்பு. இன்று நம் மாணவரிடை வளரும் சிக்கல்களுக்கு அடிப்படையான காரணங்களை என்னவென்று ஆராய்ந்து, அவற்றை நீக்க வேண்டுவது நமது கடமையாகும்.

இன்றைய சிக்கல்களுக்கு உலகில் பல தலைவர்கள் பல்வேறு காரணங்களைக் காட்டுவர். ஆழ்ந்து நோக்கின் அவை அனைத்தும் ஒன்றிலேயே சென்று முடியும் என்பது நன்கு விளங்கும். அவர்தம் வாழ்வில் 'உயர்ந்த குறிக்கோள்' இன்மையே இந்த அடிப்படை. கல்வி கற்கும் மாணவர் உள்ளங்கள், 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்று வள்ளுவர் கூறியபடி உயர்ந்த குறிக்கோளை எண்ணி அதன் வழியே செயலாற்றினால் நாடும் உலகும் நன்கு செழிப்புற்று வளரும். நாட்டிலும் உலகிலும் உள்ள எத்தனையோ சிக்கல்கள் இல்லையாகி அமைதியும் அன்பும் நாட்டில் மலரும். ஆனால் அரசியல் தலைவர்களும் பிற நல்லவர்களும் ஏனோ இத் துறையில் அதிகமாகக் கருத்திருத்துவதில்லை. உயர்ந்த குறிக்கோள் எதுவாக இருக்கவேண்டும்—அதைக் கல்வி அளிக்க முடியுமா?—அக்கல்வி பயிலும் இன்றைய மாணவர்கள் அக் குறிக்கோளைப் பற்றாமைக்குக் காரணங்கள் யாவை? அக் குறைபாடுகளை நீக்க வழி என்ன என்று இவ்வகைகளில்

ஆராய்ந்தால் உண்மை புலப்படும்—ஆராய உங்கள் முன் மூன்று கல்லூரி மாணவர்கள் வந்துள்ளார்கள். விவேகானந்தர் கல்லூரி மாணவர் திரு.வே. இராமமூர்த்தி, புதுக்கல்லூரி மாணவர் திரு. அயூப் வில்லிங்டன் பெருமாட்டி கல்லூரி மாணவி செல்வி. சண்முகசுந்தரி ஆகிய மூவரும் இந்த ஆய்வினை மேற்கொண்டு பல சிக்கல்களை நீக்க முயலலாம். ஆம் நீங்கள் அவர்கள் வாய்மொழி வழியே சிக்கல் தீர்க்க வழி உண்டா எனக் கேட்டறியுங்கள்.

**கேள்வி**

1. உயர்ந்த குறிக்கோள் என்பது யாது?—மாணவருக்கு— கற்கும்போது

அயூப் — சமுதாயத்துக்குத் தொண்டு செய்வது.

இராம — 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பாட்டில் வாழ்வது.

சண்முக — நல்ல குடிமக்களை—உழைப்பாளிகளை— உண்மையாளர்களை உருவாக்குவது.

2. இக்குறிக்கோள் கல்வி அடிப்படையில் அமைந்துள்ளது என்பதைப் பழங்காலத்தில் யாராவது விளக்கிக் காட்டியுள்ளார்களா?

இராம — ஆம். வள்ளுவர். தாம் இன்புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்!

அயூப் — நெஞ்சத்து நல்லம்யாம் என்னும்
நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு

சண்முக — கல்விவழி பெருகும் அறிவு—
அறிவினால் ஆகுவதுண்டோ!
உலகத்தொடு ஒட்டஒழுகல்

3. இக்குறிக்கோள் உடைய கல்வியில் இன்றைய சிக்கல் உண்டாகக் காரணம் என்ன?

அயூப் — பொறுப்புணர்ச்சி இன்மை

இராம — அரசியல் ஈடுபாடு, ஒன்றிய உணர்வு(Integration) இன்மை, அனைவருக்கும் உத்தியோகம் என்ற எண்ணம்.

சண்முக — குருகுலவாசமுறை இன்று—மாணவ ஆசிரியர் தொடர்பும் பொருத்தமும்.

4. இவை நீங்க வழிகளை நீங்கள் காட்டமுடியுமா?

சண்முக — ஒழுக்கக்கல்வி அடிப்படையாக அமைதல், மாணவர் ஆசிரியர் தொடர்பு வளர்ச்சி.

இராம — அறநெறி பற்றிய படிப்பு (Moral instruction) கட்டாய வற்புறுத்தல் இன்மை.

அயூப் — பொருளாதார ஏற்றத்தாழ்வு அறியாக் கல்வி முறை, எந்த வேறுபாடும் காட்டாத கல்வி நிலை.

நீங்கள் கண்ட இந்த ஆய்வின் முடிவை எண்ணும்போது மாணவர்களுடைய உயர்ந்த நிலை நன்கு புலப்படுகின்றதல்லவா. 'மாண்பு' என்ற நல்ல இயல்பினைப் பெற்றவர் மாணவராவர். நவரத்தினங்களில் சிறந்தது மாணிக்கம்; சமுதாயத்தில் சிறந்தவர் மாணவர். மாணவர் என்ற சொல்லுக்கே அழகியவர் என்ற பொருள் உண்டு. எனவே புறத்திலும் அகத்திலும் அழகுணர்ச்சி பொங்க, அந்த அழகிய பண்பாட்டின் வழியே நல்ல குறிக்கோள் மாணவர் உள்ளத்தில் உருவாக வேண்டும். நல்ல குறிக்கோள்—சிறப்பாகப் படித்தவர் அல்லது படிக்கின்றவர் மேற்கொள்ள வேண்டிய குறிக்கோள் என்ன என்பதை மூவரும் நன்கு விளக்கினார்கள். பயிலும் மாணவர்கள் தங்கள் வாழ்க்கை சமுதாயத்துக்கே என்ற உணர்வில், 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பண்பாட்டில் வாழக் கடமைப் பட்டவர்கள். வள்ளுவர் இதையே,

'தாம் இன்புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்'

என விளக்கிக் காட்டியதை உணர்ந்தோம். எனவே கல்வி தாம் பெற்ற இன்பத்தை உலகுக்கு அளிப்பதே என்பது தெளிவாகின்றது. இதற்கு உரைகூறவந்த மணக்குடவர் 'அழுக்காறு செய்யாது இன்புறுதல் அறமாதலின்... அது கல்வியாலே வரும் என்றார். எண்ணும் எழுத்தும் கல்வியின் அடிப்படை. 'எண்' என்ற சொல்லுக்குப் பொருள் கூற வந்த உரையாசிரியர் 'எண் என்றது இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது' எனக் காட்டுகின்றார். எனவே கல்வி என்பது மக்கள் உள்ளத்தில் உள்ள அறியாமை மட்டும் போக்குவதாகாது. அக்கல்வியைக் கற்பவர் உள்ளத்திலே அழுக்காறு, வேற்றுமை, தன்னலம் முதலிய எல்லாத் தீமைகளும் மறைந்து, 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை' என்ற உணர்வு அரும்புதல் வேண்டும். தான்பெற்ற இன்பத்தை உலகுக்கு அளித்தலே கல்வியின் அடிப்படை என்றார் வள்ளுவர். ஆனால் அந்த அடிப்படை இன்றைய கல்வி நிலையிலோ—கற்கின்ற மாணவர் உள்ளத்திலோ இல்லை எனக் கண்டோம். இன்றைய கல்வியால் போட்டி மனப்பான்மையும், போராட்ட உணர்வும், வேலை அல்லது தொண்டில் ஈடுபாடற்ற மனநிலையும் வளர்வதைக் காண்கின்றோம். இவற்றின் அடிப் படையிலேயே பல்வேறு சிக்கல்கள் நாட்டிலும் உலகிலும் உருவாகின்றன. இவை நீங்க எந்த வேறுபாட்டு உணர்ச்சியும் மாணவர் உள்ளங்களில் தோன்றாத கல்வி அமைக்க வேண்டும். எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்துகின்ற செம்மை வாழ்வை நாட்டில் மலரவைக்கும் நல்ல உள்ள முடையவர்களை—எந்த வேறுபாடும் எண்ணத்திலும் தோன்றாத பண்பாடு நிறைந்தவர்களை—தேவையாயின் தம்மையே தியாகம் செய்யும் சீலர்களை உண்டாக்குவதே

கல்வியின் அடிப்படை. இத்தகைய உயர்ந்த குறிக்கோள்—சமுதாயம் எல்லாக் குறையும் இல்லாத வாழ வழி வகுக்கும் குறிக்கோள்—மாணவர்தம் வாழ்வில் இடம் பெற வேண்டும். சமயம், அறம், ஒழுக்கம் என்று கூறும் அத்தனையும் இந்த உண்மையிலேயே அடங்கும். எல்லாரும் — எல்லா உயிரும் நம்மவரே—நம்இனமே என்ற பரந்த உணர்வோடு பயிலும் மாணவர் தம் வாழ்வை வகுத்துக் கொள்வார்களானால்—'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உணர்வு கல்வியால் விளையும் நிலை உண்டானால்—அன்று நாட்டிலும் உலகிலும் எந்தச் சிக்கலும் தலைகாட்டாது. மாணவர் சமுதாயம் அந்த வகையில் உணர்ந்து முன்னேற்றம் அடையவேண்டும். அவர்களை அந்த நெறிக்கு உரியவர்களாக்கும் வழியை ஆசிரியர்களும் அரசாங்கமும் செம்மைப்படுத்தித் தருதல் வேண்டும்.

# நாட்டுக் கல்விமுறை நன்கு அமைவதாக

கடந்த சில மாதங்களாக, நாட்டின் கல்வித்தரம் குறைந்து வந்துள்ளதென மாநில மத்திய அமைச்சர்களும் செயலர்களும் பிறரும் பேசி வருகின்றனர், ஏன்? ஆசிரியர் தின விழாவில் குடியரசுத் தலைவர் அவர்களே அது பற்றிக் கூறி வேதனைப்பட்டுள்ளார். ஆயினும் ஏன் இந்த நிலை என எண்ணிப்பார்க்க நேரமில்லை. இன்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன் எந்தக் கல்வி முறை வேண்டாம் என்று பாரதி அழுது அழுது பாடினானோ, அதே கல்வி முறையினைத்தான் விடுதலை பெற்று அரை நூற்றாண்டை எட்டும் காலத்திலும் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

வகுப்பு வருடங்களில் மாறுதல்—மத்திய மாநிலப் போட்டிகளில் தேவையற்ற வேறுபாடு என்று பலவகையில் கல்வித்துறை இடர்ப்படுகிறதேயன்றி உண்மையில் நாட்டுக்கு வேண்டிய கல்விமுறை—அண்ணல் காந்தி, பாரதி போன்றார் நாட்டுக்கு நலம் தரும் என்று சொல்லிய கல்விமுறை இன்றும் நாட்டில் வரவேயில்லை. மாறாக ஆளும் கட்சி எது வரினும் தத்தம் புகழ் பாடும் வகையில் பாடங்களை அமைப்பதிலும் வேற்று நாட்டு மொழிகளுக்கு ஏற்றம் தருவதிலும்தான் கருத்திருத்துகின்றன.

பழங்காலத்தில் சில நன்மைகள் பாடத்திட்டத்தில் இருந்தன. மாணவன் இரண்டாம் வகுப்பில் தன் ஊர், அதைச் சுற்றியுள்ள நிலங்கள், மலைகள் வாழ்ந்த—வாழும் 'மக்கள்', ஆட்சிநிலை முதலியனவற்றைத் தெரிந்து கொள்வான். அப்படியே மூன்றில் தன் வட்டம், நான்கில் தன் மாவட்டம், ஐந்தில் தன் மாநிலம், ஆறில் தன்னாடு, பிறகு கண்டம், உலகம் என்று போவான். இன்று தமிழ் நாட்டில் படிக்கும் பள்ளி மாணவர்களுக்குப் பாலாறும் வைகையும் தெரியா. அமேசானும் நைலும் தெரியும். பக்கத்து மலை தெரியாது; ஆல்ப் புரியும். தஞ்சையும் பெரிய கோவிலும் புரியா; இலண்டனும் டிராபல்ஸ் சதுக்கமும் புரியும். மற்ற மாநிலங்களும் இதே நிலைதான் போலும். இப்படி இன்று படிக்கும் மாணவர் தம்மைப் பற்றித்—தம் நாட்டைப் பற்றி அறியா வகையில் கல்வி செல்லும்போது நாட்டுப்பற்றும் ஒற்றுமை உணர்வும் எப்படி உண்டாகும்?

படிக்கும் படிப்பிலும் தரம் இல்லை. நேற்று வரை 100க்கு 15 வாங்கினாலும் மேல் வகுப்பிற்குச் செல்லலாம் என்ற நிலை இருந்தது. இன்று சற்று உயர்ந்திருக்கலாம். பத்தாம் வகுப்பு வரை மாணவரை நிறுத்தக் கூடாது. பத்துக்கு மேலும் தேர்விற்குச் செல்ல வடிகட்டும் முறை

கூடாது என்ற நிலை உள்ளது. பின் எப்படி கல்வியில் உயர்வு காண்பது? கல்லூரிகளிலோ மாணவர் படிக்காமலே மேல் வகுப்பிற்குச் செல்லலாம் என்ற நிலை உள்ளது. கல்லூரிகளும் தன்னாட்சி பெற்று, தத்தமக்கு விருப்பம் போல் மாணவர்களைத் தூக்கிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. தேர்வு முறையிலும் சீர் கேடு. முன்பெல்லாம் ஒரு பள்ளி அல்லது கல்லூரியில் பயிலுபவர் வேறு பள்ளி அல்லது கல்லூரியில்தான் தேர்வு எழுத வேண்டும். இன்றோ பயிலும் அதே பள்ளியில்—கல்லூரியில் தேர்வு எழுதலாம். இதனால் சிலர் நேரிய முறையில் இயங்கினாலும் பலவற்றில் சீர்கேடுகள் உள்ளன. தேர்வுக்கு ஒரு மணிக்கு முன் வினாத்தாள்களைப் பிரித்துத் தம் மாணவருக்கு விடை கற்பிக்கும் நிலை, தேர்வு அறையிலே ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் நிலை—நூல் வைத்துக் கொண்டே தேர்வு எழுதும் நிலை, காலம் கடந்து விடைத் தாள்கள் பெறும் நிலை, திருத்தும்போது பணம் புழங்கும் காட்சி, இப்படி எத்தனையோ நடக்கின்றன என்று நாட்டில் பலர் பேசுகின்றனர். இந்த நிலையில் கல்வியில் தரத்தின் உயர்வு எங்கே காண முடியும்? வேண்டுமானால் அவற்றுள் பயிலும் மாணவர் முதல் நிலை பெற்றார் என அரசாங்கம் பரிசளிக்கலாம். இந்த முறை மாற வேண்டாமா?

பாடங்கள் அமைப்பிலும் குழப்பம். பத்தாம் வகுப்பிற்கோ பிற பள்ளி வகுப்புகளுக்கோ, பன்னிரண்டாம் வகுப்புக்கோ பாடங்களையும் பாட நூல்களையும் அறுதியிட்டுத் தயாரிக்கும் 'நல்லவர்'கள் சொல்லிக் கொடுப்பவராக இருப்பதில்லை. எங்கோ உயர் மட்டத்தில் ஆள்பவருக்கு வேண்டியவர்களை அக்குழுக்களில் இடம் பெறச் செய்கின்றனர். அவர்களோ பள்ளிச் சிறுவர்தம் நிலை—தரம் அறிந்து பாடங்களை அமைப்பதில்லை; ஏதோ தன் மனம் போன போக்கில் எப்படியோ தம் தரம், தகுதிக்கு ஏற்பத்

தயார் செய்கின்றனர். சில சமயங்களில் பாடம் நடத்தும் பள்ளி ஆசிரியருக்கே கூட விளக்கமாகாத பொருள்கள் இருக்கும். இப்படித் தரம் கெட்ட—உயர்ந்ததாயினும் புரியாத—தெரியாத நிலையில், மாணவர் நிலை உயருவ தெங்கே? ஒரு முறை 12ஆம் வகுப்பிற்குத் தேவையில்லாத பாட நூலைப் பல ஆயிரம் செலவு செய்து வெளியிட்டுப் பின் பாழாக்கினர்.

ஆசிரியர்களும், மதுரையில் கல்வி அமைச்சர் கூறியவாறு தம் கடமை உணர்ந்து செயலாற்றவில்லை. பல ஆசிரியர்கள் இப்பள்ளி அல்லது கல்லூரிப் பணியினை, இரண்டாம் பக்கப் பணியாகவே, கொள்ளுகிறார்கள் என்பதைப் பலர் அறிவர். பல கல்லூரிகளில் அரசாங்கக் கல்லூரி உட்பட—சில பாடங் களுக்கு ஆண்டு முழுவதுக்கும் கூட ஆசிரியர்கள் நியமிக்கப் பெறுவதில்லை. பள்ளியில் 60, 70, 80 மாணவருக்கு ஒரு ஆசிரியர் பாடம் கற்பிப்பார். இந்த நிலை கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையாகுமா?

'ஐ.ஏ.எஸ்' தேர்வில் தமிழ் நாட்டு மாணவர்கள் அதிகம் வெற்றி பெறவில்லை என்று மத்திய அரசாங்கத்துக்கு அறிவிப்பதாகச் செய்தி வந்தது. ஆனால் தமிழ்நாட்டு மாணவர்களும் அரசும் அதில் அக்கறை காட்டாததே அதற்கு முக்கிய காரணம். நானும் காலஞ்சென்ற தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களும் அத்தேர்விற்குத் தமிழில் ஒரு தாள் எழுத ஏற்பாடு செய்ய மிகவும் முயற்சி செய்து வெற்றியும் பெற்றோம். இத்தேர்விற்கு முதல் இரண்டாண்டு அவர்களும் அடுத்த இரண்டாண்டு நானும் தேர்வாளராக இருந்தோம். அப்போது தேர்வு எழுதிய மாணவர்கள் தரம் தமிழிலேயே அவ்வளவு மட்டமாக இருந்தமை கண்டு வேதனைப்பட்டோம். (தற்போது அத்தாள்—தமிழில் உள்ளதா எனத் தெரியாது) எனவே மாணவர்கள் அடிப்படையிலிருந்தே—ஆரம்பப் பள்ளியிலிருந்தே சரியாகப்

பயில வாய்ப்பளித்தால்தான் 'ஐ.ஏ.எஸ்' போன்ற தேர்வுகளில் உயர்ந்த இடம் பெறமுடியும். அதற்கு அரசாங்கம் நேரிய வழியினை வகுக்க வேண்டும். மேலும் 'ஐ.ஏ.எஸ்' தேர்வினை ஆங்கிலத்திலோ அன்றி இந்தியிலோ எழுதலாம். அவரவர் தாய் மொழியிலும் கூட எழுதலாம் என நினைக்கிறேன். ஆனால் தமிழ் நாட்டினர் யாரும் தமிழில் எழுதுவதில்லை. வட நாட்டவர் இந்தியில்—தாய்மொழியில் எழுதி அதிக இடங்களைப் பெறுகின்றனர். இதற்கு யார் பொறுப்பு? மாணவரா? அரசாங்கமா? கல்வித்துறையா? ஆய்வு தேவையா?

இனி, பள்ளி, கல்லூரிகளில் பயிலும் படிப்பிற்கும் பின் அவர்கள் ஏற்கும் பணிக்கும் தொடர்பு உள்ள வகையில் அரசாங்கம் வகை காண வேண்டாமா? இரசாயனம், பௌதிகம் போன்றவற்றுள், பல ஆயிரம் செலவு செய்து, முதுகலை (M.Sc.) பட்டம், 'எம்.ஏ' போன்ற பட்டங்களைப் பெற்றவர்கள் சாதாரண குமாஸ்தா உத்தியோகத்துக்குப் பத்தாவது படித்த மாணவரோடு தேர்வு எழுதுகிறார்கள். அரசாங்கத்தேர்வு ஆணைக்குழு, இன்றுள்ள தேர்வுக்கு இன்னின்ன அளவு படிப்பு இருக்க வேண்டும் என வற்புறுத்துவதோடு, அதற்கு மேல் படிப்பில் பட்டம் பெற்றவர்களையும் விலக்க வேண்டும். இல்லையானால் எத்தனை மண்டல் கமிஷன் வந்தாலும், அடிமட்டத்தில் உள்ளவருக்கு வாய்ப்பு இல்லை. இதற்கு அடிப்படையாகக் கல்வி முறையிலேயே திருந்திய ஏற்பாடு செய்ய வேண்டும்.

பத்து அல்லது பன்னிரண்டாம் வகுப்பு முடிந்தவுடன் பல வகையில் மாணவர் பிரிந்து பட்டப்படிப்புகளை மேற்கொள்ளுகின்றனர். அப்பிரிவுள் ஒன்றாக அரசாங்க ஊழியத்துக்கும் அதன் சார்புடைய பிறவற்றிற்கும் உரிய எழுத்தர் முதலிய பதவிகளுக்கு உரித்தான வகையில் பாடதிட்டங்களை

அமைத்து, அதில் தேர்ச்சி பெறுவோரையே ஆணைக்குழு அப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். மற்றவர்கள் எவ்வளவு உயர்பட்டம் பெற்றவராயினும் அவர்களை அரசாங்க ஊழியர்களாக நியமிக்கக் கூடாது. இந்த முறை வருமானால் தேவையற்ற கல்லூரிப் படிப்புக்கு அரசாங்கம் கோடி கோடியாகச் செலவு செய்ய வேண்டியதில்லை. அரசாங்கத்துக்கும் தன் தேவைக்குரிய தகுதி பெற்றவர் இடம் பெற வாய்ப்பு உண்டு.

கோடிக்கணக்கில் கல்லூரிக் கல்விக்குச் செலவு செய்து அவர்களைப் பிறகு பத்தாம் வகுப்பு மாணவரோடு போட்டி இட அனுப்புவதில் எப்படி நியாயம் பிறக்கும்? பல சலுகைகள் கிடைப்பதால்—பலருக்கு இலவசக்கல்வி இருப்பதால் பொழுது போக்குக்காகப் படிப்பதற்காகச் சொல்லிச் சுற்றித் திரிபவரும் உளர். இருபது ஆண்டுகளுக்கு முன் நான் ஒரு துணை வேந்தரோடு பேசிக்கொண்டு இருந்தேன். அப்போது ஒன்றும் அறியா கிராமவாசி ஒருவர் அவர்கள் காலில் நெடுங்கடையாக வீழ்ந்தான். அவர் என்னவென்று கேட்ட போது, தன் மகன் பி. ஏ. தேறிவிட்டதாகவும் அதற்கு மேல் ஏதோ இரு ஆண்டு படிப்பு இருப்பதாகவும் அதில் அவனுக்கு இடம் வேண்டும் என்றும் கேட்டான். என்ன படிப்பு என்பது கூட அவனுக்குத் தெரியாது. துணை வேந்தர் அதற்கு என்ன அவசியம், ஏதேனும் வேலைக்கு முயலலாமே என்றார். அவன் 'ஐயா கல்லூரியில் சேர்ந்தால் இலவச உணவு விடுதியில் இரண்டு ஆண்டுகள் நிம்மதியாக நல்ல சாப்பாடு கிடைக்குமே! அதற்காகத்தான்' என்றான். கல்வி இந்த வகையில் சீரழிக்கப் பெறுகின்றது. அரசாங்கம் திட்டமாகத் தம்பணிக்கு வேண்டிய கல்வி முறையினைப் பிரித்து, அதில் தேர்ச்சி பெறுவோரே அரசாங்கப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பெறுவர் என்று விதி அமைத்தால் இந்த அவலநிலை உண்டாகாதே! அப்படியே மேல் பதவிகளுக்கும் அங்கங்கே அவ்வத் துறைகளில் தேர்வு

வைத்து சிறக்க உள்ளவர்களையே தெளிந்து தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு வேளை ஐ. ஏ. எஸ் போன்ற பதவிகளுக்கு நேரடித் தேர்வு எழுத உயர்பட்டதாரிகளை அனுமதிக்கலாம். இந்த முறை கல்வித்துறையில் வரவேண்டும்.

கல்வித்துறை தொழில் மயமாக வேண்டும் என்ற கொள்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற ஒன்றாகும். ஆயினும் பல ஆண்டுகளுக்கு முன் காலஞ் சென்ற மூதறிஞர் இராஜாஜி தமிழ் நாட்டில் கொண்ட சாதி அடிப் படையில் அமைந்த தொழில் முறை நாட்டுக்கு உதவாதது; மாறுபட்டது. எனவேதான் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே அது கைவிடப் பெற்றது. அந்தந்தச் சாதி மாணவன் அவனவனுக்குரிய தொழிலைத்தான் கற்க வேண்டும் என்ற அந்த முறை நாட்டுக்கு ஏற்ற ஒன்றாகாது. உலகில் வளர்ந்து வரும் பல்வேறு தொழில் வகைகளில் பத்தாம் வகுப்பில் தேறிய மாணவர்கள் பயிற்றப்பெற வேண்டும். இன்று தமிழகத்தில் பதினொன்று பன்னிரண்டு ஆகிய வகுப்புகளில் அத்தகையமுறை எழுத்தர்களை உருவாக்கும் ஒருநிலையில் மட்டும் (Vocational Course) உள்ளது. ஆசிரியப் பயிற்சி இருந்து ஏனோ எடுக்கப் பெற்றது. அதில் பயில்பவர்களுள் பெரும்பாலோர் தகுதிபெற்றிருந்தும், பல உயர்கல்வி பெற்றோர் போட்டிக்கிடையில் ‘எழுத்தர்’ பதவியின் தேர்வு எழுதாது, பட்டக் கல்வி பெறவே முயல்கிறார்கள். ஆயினும், பல்கலைக்கழகங்கள் நூறு இடங்களில் 10 இடங்களே இவர் களுக்கு ஒதுக்க வேண்டும் என்ற ஆணை இடப்பெற்று உள்ள மையின் அவர்கள் வாழ்வு மங்குகின்றது. வளர்ச்சிக்கு வழி இல்லை, எனவே நான் மேலே காட்டியபடி இந்தவகைப் பயிற்சி பெறுபவர்கள் மட்டும் அரசாங்க எழுத்தர் தேர்வு எழுத வேண்டும் என்ற முடிவு கொண்டால் அவர்கள் வாழ்வு சிறக்கும். உயர்கல்வியில் தேவையற்ற கூட்டமும் குறையும். அனைத்திந்திய புதிய கல்விக் கொள்கையினை ஆராயும் குழு

இந்தக் கல்வியினை வற்புறுத்தும் எனச் செய்தித்தாள்கள் வழியறிகிறேன். ஆயினும், அதனால் மட்டும் பயனில்லை; அதில் பயின்றோர் வாழ்வு வறண்ட பாலை நிலையாகும், எனவே அவர்கள் இத்தகைய துறைகளில் பயில்வோருக்கு அரசாங்க 'எழுத்தர்' போன்ற பதவிகளும் பிறகல்விக்கேற்ற பதவிகளும் அளிக்கப் பெற வேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். கல்வி முறையை மட்டும் திருத்தி அதைப் பயில வாழ வகையற்றுப் போகும் நிலை கூடாது. 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச் செயல்' என்ற வள்ளுவர் வாக்கு கல்வித்துறைக்கும் பொருந்துவதாகும். '+2' முறையிலும் பிற்பட்ட வகுப்பிலும் கணிப்பொறி, விண்ஆய்வு போன்றவை தொடங்கி சாதாரணக் கூட்டுத் தொழில் வரையில் புகுத்திப் பயில வாய்ப்பு அளிப்பின் அவற்றுள் பயிலும் மாணவர்கள் நிச்சயமாகத் தம் வாழ்வை நன்கு அமைத்துக் கொள்ள வழி பிறக்கும். நாடு நாடாகும். இன்றேல் யார் அறிவார்?

கல்வித்துறையில் மொழி பற்றிய சிக்கல் உரிமைப்பெற்று அரை நூற்றாண்டைக் கடக்கும் நிலையிலும் தீராதது வேதனைக்குரியது. தமிழ்நாட்டில் பயிலும் மாணவர் தமிழைப் பயிலாமலே பொறியாளர், மருத்துவர், கலை, அறிவியல் அறிஞர் (டாக்டர்) பட்டம் வரை எளிதில் பெற முடியும். இந்த அவல நிலை தமிழ்நாட்டைப் பிற மொழி யாளர் ஆதிக்கத்தில் ஆழ்த்துமன்றோ. தமிழைப் பேருக்கு முதன் மொழியாகக் கூறினும் பிரஞ்சு, ஜெர்மன் போன்ற அன்னிய மொழிகளோடும் இந்தி, வடமொழி, உருது போன்ற மொழிகளோடும் பதினான்கு மொழிகளுள் ஒன்றாக உள்ளது. ஆனால் அண்டை நாடான கன்னடத்தில் கன்னடம் பயிலாது எட்டாம் வகுப்பினைத் தாண்ட முடியாது. மராட்டிய நாட்டிலோ மராட்டி மொழி பயிலாது பள்ளிப் படிப்பை முடிக்க முடியாது. அப்படியே வேறு சில மாநிலக் கல்வித்

திட்டங்கள் உள்ளன. ஆனால் தமிழ்நாடு செய்த பாவம் தமிழ்நாட்டில் தமிழ் பயிலாது எத்தனைப் பட்டங்களையும் பெற வாய்ப்புள்ளது. நாடு முழுவதும் இன்று உத்தரப் பிரதேச மாநில முதல்வர் கூறியபடி அந்த மாநில மொழி கட்டாயமாக்கப் பெற வேண்டும். இன்றேல் அண்ணல் காந்தி அடிகள் மொழிவாரி மாநிலத்தை வற்புறுத்தியதின் பயன் யாதோ?

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன் டாக்டர் அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்த போது அதைச் செயல்படுத்தினார். அப்போது பாடநூல் எழுதக் கூடாது என்ற கொள்கையோடு இருந்த நான், தமிழுக்காக அந்தக் கொள்கையினையும் விட்டு—யாரும் முன்வராத நிலையில்—அமைச்சர் வேண்டுகோளின்படி—6, 7, 8ஆம் வகுப்புகளுக்குப் பாட நூல்கள் எழுதினேன். வேறு பதிப்பகங்கள் முன் வராத நிலையில் அன்று ஆங்கிலேயர் ஆணையின் கீழ் இருந்த 'மாக்மில்லன்' வெளியீட்டாளர்களே அந்த நூல்களை வெளியிட்டு உதவினர். பின் பல பதிப்பகத் தார் முன்வந்தார்கள் என்பதும் உண்மை. அதன் வழியில் தமிழ்நாட்டில் தமிழ் பயிலாது எட்டாம் வகுப்பினைத் தாண்ட முடியாது. ஆனால் பின் வந்த அரசுகள் அனைத்தும்—அந்தக் காங்கிரஸ் அரசு உள்பட—அக்கொள் கையினை மண்மூடச் செய்தன. இன்றும் அதே நிலைதான். இந்த முறை மாற வேண்டும். எனவே தான் உ. பி. முதல்வர் வற்புறுத்துகிறார். வேற்று மொழி உண்டோ இல்லையோ, கல்வித்துறையில் அந்தந்த மாநில மொழிகள் கட்டாயம் இடம் பெற வேண்டும் என்கிறார்.

1985-இல் நான் தஞ்சைப்பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு (Syndicate) உறுப்பினராக இருந்த போது உலக நாடுகள் பல வற்றில் பயணம் செய்து அவ்வந்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், பள்ளிகள் ஆகியவற்றின் நிலை,முறை,வகை என்ற பலவற்றை

உற்று நோக்கினேன். அவற்றுள் நல்லன பல. அவற்றை நம் நாட்டுக் கல்விமுறையில் புகுத்த வேண்டும் என்று என் நூலில் (ஏழு நாடுகளில் எழுபது நாட்கள்) பலவிடங்களில் சுட்டிக் காட்டியுள்ளேன். ஆரம்பப்பள்ளிமுதல் கல்லூரி உயர்மட்டம் வரையில் நாம் பின்பற்ற வேண்டிய பல நல்ல நெறிகள் பல விடங்களில் உள்ளன. சிறப்பாகப் பள்ளிநேரம் பலநாடுகளில் காலை எட்டு மணிக்குத் தொடங்கி ஒரு மணிக்கு முடியும் நிலை. இங்கே போக்குவரத்து நெரிசலுக்கு என நேரத்தை மாற்ற நினைக்கின்றனர். அதையும் செயல்படுத்த முடிவ தில்லை. ஆனால் உலக நாடுகளில் வாழ்க்கை நெருக்கடி நீங்கும் வகைக்கே என்றென்றும் பள்ளிகளும் அவற்றின் பணி நேரங்களும் அமைகின்றன. நாற்பது ஆண்டுகளுக்கு முன் நான் மலேயா சென்றபோது அங்கே இந்த நிலை கண்டு மகிழ்ந்தேன். கல்லூரிகளிலோ பட்டப்படிப்பு, உயர்மட்ட பட்டங்கள் பற்றிய ஆய்வு முறைகளை நாம் சில நாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றினால் நாடு உய்யும், நலம் பெருகும்.

அண்மையில் தென்காசியில் ஆசிரியர் தினவிழாவில் தமிழகக் கல்வி அமைச்சர் ஆயிரம் கோடிக்கும் அதிகமாகக் கல்விக்குச் செலவழிக்கப் பெறுகின்றது எனக் கூறியுள்ளார். இவ்வாறு கோடி கோடியாகச் செலவு செய்யும் கல்வி நாட்டுக்கு—சமுதாயத்துக்கு—மக்கள் நல்வாழ்வுக்கு வழி காட்டும் கல்வியைத் தரவேண்டாமா? ஆம்! வேண்டும். அந்த அடிப்படை உணர்விலே இக்கருத்துகளனைத்தையும் தங்கள் முன் வைக்கின்றேன். வழி காட்டுங்கள்! கல்வியினைப் பயனுடையதாகச் செய்யுங்கள்.

தமிழ்நாட்டில் மத்தியக் குழுவின் கீழ் அமைந்த பல பள்ளிகளில் மும்மொழித் திட்டம் உள்ளது. அதில் தமிழைக் கட்டாயம் ஆக்கும் வாய்ப்பு உள்ளது—ஆனால் தமிழ்நாட்டில் இருமொழித் திட்டத்தில் அந்த நிலை இல்லை. இருமொழிக்

கொள்கையை வற்புறுத்துவதனால் அதில் தமிழ் கட்டாய மொழியாகவும் மற்றது வேற்று மொழியாகவும் இருக்க அமைப்பின் பொருள் உண்டு. இன்றேல் தமிழ் பிற மாநில மொழிகள், பிரஞ்சு, செர்மன் இவற்றோடு ஒன்றாகி நின்று, தமிழைத் தொடாமலே தமிழ் நாட்டில் பட்டம் பெற வழி காட்டுகிறது. இது தமிழை வளர்ப்பதாகுமா?

பல்கலைக்கழகங்களின் நிலையினை எண்ணின் வருந்த வேண்டியுள்ளது. சில பல்கலைக் கழகங்கள் அவல நிலைகளை நாளிதழ்களில் காண்கிறோம். மாணவர்கள் சூன் மாதம் வகுப்புகளில் சேர்க்கப் பெற வேண்டும்; அடுத்த நவம்பர் அல்லது மார்ச்சில் தேர்வு. ஆனால், பல்கலைக் கழகங்களோ ஆகஸ்டு, செப்டம்பரில் புதிய வகுப்புகள் தொடங்க ஆணை பிறப்பிக்கின்றன. எல்லாப் பாடங்களையும் குறைந்த இடைக்காலத்தில் மாணவர் எப்படிப் பயில முடியும்? நன்கு வெற்றி பெற்று 'ஐ.ஏ.எஸ்' போன்றவற்றில் முதலிடம் பெற முடியும்?

இதற்கு முந்திய ஆண்டு செப்டம்பரிலேயே விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இசைவுதர ஓராண்டு தேவையா? முன்பெல்லாம் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஆய்வுக் குழுக்கள் அனுப்பப் பெற்று, கருத்தினைப் பெற முடியும். பின் மார்ச், ஏப்ரல் ஆட்சிக்குழு கூட்டங்களில் உரிய முறையில் ஆய்ந்து தேவையை நிறைவேற்ற, மே மாதத்துக்குள் புதிய வகுப்புகள் தொடங்க ஆணை பிறப்பிக்கப் பெறும். இன்று ஆகஸ்டில் குழு அமைத்து அடுத்து உத்தரவு பிறப்பிக்கும் அவல நிலையில் மாணவர் நன்கு பயில முடியுமோ? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால் 'ஐ.ஏ.எஸ்' போன்றவற்றில் தமிழகம் தன் நிலை இழந்தமைக்குக் காரணம் நன்கு புரியும். மற்றொன்றும் கூற வேண்டும். பள்ளிக்கோ கல்லூரிக்கோ வேண்டிய பாட நூல்களை உரிய நாளில் அரசாங்கமும் பல்கலைக்கழகங்களும் வெளியிடுவதில்லை. இதனாலும்

தரம் குறையுமே! இக் குறைகளையெல்லாம் அரசு நீக்க உடன் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இன்றும் எத்தனையோ கருத்துக் கோவை உள்ளத்து எழுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவற்றை என்னுடைய 'புதிய கல்வி முறை' என்ற நூலில் எழுதியுள்ளேன். நான் அப்போது தமிழக மேநிலைக் கல்விக் குழுவின் உறுப்பினராக இருந்தேன், என் வாழ்நாள் முழுதும் கல்விப் பணியிலேயே செலவிட்டேன். எனவே கல்வி — நாட்டுக் கல்வி—நல்ல வகையில் வருங்காலச் சந்ததிக்குப் பயன்படும் வகையில்—நாட்டுப் பொருளாதார நெருக்கடி நீங்கும் வகையில்—எல்லாரும் எல்லாச் செல்வமும் வாழ்வும் பெறும் வகையில் அமைய வேண்டும் எனக் கனவு காண்கின்றேன். அதனாலேயே ஓரிரு மாதங்களுக்கு முன் தொலைக்காட்சியினர் புதிய மத்திய அரசாங்கம் கல்விக்கு ஆற்றிய தொண்டு பற்றிக் கேட்டபோது, 'மக்கள் வாழ்வுக்கேற்ற கல்விக்கு ஒன்றும் செய்யவில்லை—செய்ய நினைக்கவும் இல்லை' என்று கூறினேன். அது தில்லி அரசாங்கத்தின் செவிகளிலும் விழுந்திருக்கும். அங்குள்ள மத்திய தொலைக்காட்சி நிலையத்தில் அதைக்காட்டப் போவதாகச் சொன்னார்கள். இங்கும் காட்டினார்கள்.

கல்வித்துறையில் காலமெல்லாம் கழிக்க நல்லவர் துணைக் கொண்டு—அத்துறையில் வல்லாரை வழிகாட்டியாகக் கொண்டு நாடு நலம்பெற—நல்வாழ்வு மலரத்தக்க கல்வி முறையினை வற்புறுத்தி மத்திய, மாநில அரசாங்கங்கள் ஆவன செய்யும் என்ற நம்பிக்கையோடு இக்கருத்துக்களை உங்கள் முன் வைக்கிறேன். நல்லனவாயின் கொள்க! அல்லனவாயின் மன்னியுங்கள். நாடு நன்கு வாழ வேண்டுமென்ற நினைவிலே தோன்றிய சிந்தனைகளே இவை—எண்ணிச் செயல் புரிக! ஏற்றம் காண்க!

———

## ஆசிரியர் அ. மு. ப அவர்கள் எழுதிய நூல்கள்—85க்கு மேல் தற்போது உள்ளன

| | | |
|---|---|---|
| இளமையின் நினைவுகள் | 2 | 50 |
| கொய்த மலர்கள் | 4 | 50 |
| துன்பச்சூழல் (நாவல்) | 2 | 00 |
| மக்கட் செல்வம் | 2 | 00 |
| பெண் | 1 | 50 |
| மனிதன் எங்கே செல்கிறான் | 1 | 50 |
| தாயின் மணி வயிற்றில் | 1 | 00 |
| தொழில் வளம் | 5 | 00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | 3 | 00 |
| மலைவாழ் மக்கள் | 5 | 00 |
| சிறுவர்களுக்கு | 2 | 50 |
| வானொலி வழியே | 3 | 00 |
| நாலும் இரண்டும் | 2 | 50 |
| 19ம் நூற்றாண்டு உரைநடை | 8 | 00 |
| புதிய கல்விமுறை | 3 | 00 |
| பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | 20 | 00 |
| சாத்தனார் | 6 | 00 |
| கவிதை உள்ளம் | 5 | 00 |
| மு. வ. தமிழ்த்தொண்டு | 5 | 00 |
| வையைத் தமிழ் | 3 | 50 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | 5 | 00 |
| தமிழ்நாட்டு விழாக்கள் | 4 | 00 |
| காஞ்சி வாழ்க்கை | 5 | 00 |
| கவிதையும் வாழ்க்கையும் | 20 | 00 |
| வழுவிலா மணிவாசகர் | 7 | 00 |

### புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| ஏழுநாடுகளில் எழுபது நாட்கள் | 36 | 00 |
| திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் | 16 | 00 |
| வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும் (புதிய பதிப்பு) | 16 | 00 |
| தமிழர் வாழ்வு | 16 | 00 |
| ஓங்குக உலகம் | 16 | 00 |
| தாய்மை | 20 | 00 |
| கல்வி எனும் கண் | 12 | 00 |
| ஆனந்த முதல் ஆனந்த வரை | 40 | 00 |
| சான்றோர் வாக்கு (குறள் வழி) | 17 | 00 |
| நல்லவை ஆற்றுமின் (வானொலிப் பேச்சும் பிறவும்) | 20 | 00 |
| அருந்திறலாளர் அ. மு. ப. (மாணவர் தொகுத்தவை-1992) | 20 | 00 |